ஆனந்தபுரச் சமர்

ஒக்ரோபர் 2026



INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

'நான் வெளியேறியபோது காயமடைந்தவர்கள் உயிருடன் இருந்தார்கள். அவர்களிடம் துப்பாக்கிகளோ வெடிமருந்துகளோ சயனைட் குப்பிகளோ இருக்கவில்லை.'

சாட்சி ஒன்று, ஆனந்தபுரத்திலிருந்து உயிர்தப்பியவர்.

ஆனந்தபுரச் சமர்

ஒக்ரோபர் 2026

உள்ளடக்கம்

01. அறிமுகம் 7

02. பகுதி ஒன்று : சம்பவங்களின் விபரிப்பு 9

03. பகுதி இரண்டு : சட்டப் பகுப்பாய்வு 34

'அத்தனை பேரையும் அவர்கள் கொன்று குவிப்பார்கள் என்று நாங்கள் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை. அவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதே இதற்கான ஒரே விளக்கம்.'

சாட்சி நான்கு, ஆனந்தபுரத்திலிருந்து உயிர்தப்பியவர்.

அறிமுகம்

2009 இல் இலங்கையின் உள்நாட்டுப் போரின் முடிவுப் பகுதியானது அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது LTTE இனருக்கும் இடையிலான பல தசாப்தகால போரில் மிகவும் மோசமான காலப் பகுதியாகப் பரவலாக அறியப்படுகின்றது. இந்தக் காலப் பகுதியே ஐக்கிய நாடுகள் மற்றும் இலங்கை தவிர்ந்த பல நாடுகளிலும் உள்ள வழக்கறிஞர்களின் பல ஆண்டுகால விசாரணைக்குரிய விடயமாக உள்ளது. இலங்கையிலே மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக மறுப்பு இருந்து வருகின்றது. இன்றுவரை அந்த இறுதி ஐந்து மாதங்களிலும் எவ்வளவு ஆயிரக்கணக்கானவர்கள் இறந்தார்கள் என எவருக்குமே தெரியாது. அத்துடன் பல வருடங்கள் கடந்த பின்னரும் எவருக்கும் எதிராக வழக்குத் தொடரப்படவும் இல்லை அத்துடன் புரியப்பட்ட கொடூரங்களுக்கு அவர்களின் வகிபாகத்திற்காக எவருக்கும் தண்டனை வழங்கப்படவும் இல்லை.

ஏப்பிரல் 2009 இல் இரண்டு ஆயுதப்படையினருக்கும் இடையில் இறுதிப் பாரிய சமர் ஆனந்தபுரத்தில் இடம்பெற்றது. ஆய்வுக்குரிய ஒரு விடயமான ஆனந்தபுரத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் ITJP உட்பட அனைவராலுமே இன்றுவரை புறக்கணிக்கப்பட்டிருந்தது. ஆயுதக் குழுக்களுக்கு இடையிலான மோதல்களை விட பொதுமக்கள், உணவு வரிசைகள் மற்றும் வைத்தியசாலைகள் மீதான தாக்குதல்கள் குறித்தே கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. இதனைவிட, நடந்த சம்பவங்கள் பற்றி சாட்சி கூறுவதற்கு ஆனந்தபுரம் சமரில் மிகச் சிறிய எண்ணிக்கையான LTTE போராளிகளே உயிர் தப்பியிருந்ததாக நம்பப்பட்டது. இருப்பினும் கடந்த 17 ஆண்டு காலப் பகுதியில், உயிர்தப்பியவர்கள் வெளிநாடுகளில் மெது மெதுவாக தலைகாட்டத் தொடங்கினார்கள். இலங்கையிலும் உயிர்தப்பியவர்கள் உள்ளார்கள் ஆனால் அங்குள்ள அரசியற் சூழலானது உறுதியான போராளிகளாக தமது பணி என்ன என்பதை வெளிப்படையாக கூற விரும்புவதை சாத்தியமற்றது ஆக்குகின்றது. வெளிநாட்டில் கூட இந்த அறிக்கைக்காக செவ்விகாணப்பட்ட முன்னாள் LTTE போராளிகள் தமது அடையாளத்தினை மற்றையவர்களுக்கு வெளிப்படுத்த விருப்பமில்லாமல் இருந்தார்கள் அத்துடன் இரகசியம் காக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையில் அடிப்படையிலே கதைத்தார்கள்.

ஒருவருமே உயிர்தப்பியிருக்க முடியாது என ஆரம்பத்தில் நாங்கள் நம்பிய ஒரு சமர் பற்றிய நம்பமுடியாத தகவல்களைக் கேட்ட பின்னர், இந்தக் கதைகள் இலங்கைப் போர் வரலாற்றின் ஒரு முக்கிய பகுதி என்பதையும் இது ஆவணப்படுத்தப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் நாம் உணர்ந்து கொண்டோம். இந்த அறிக்கையில் இரண்டு பகுதிகள் உள்ளன:

பகுதி 01 உயிர்தப்பியவர்களின் கதைகளை மற்றைய சம்பவங்களுடன் இணைத்துக் கூறும் ஒரு விபரணமாகும்.

பகுதி 02 ஆனந்தபுரம் சமரின் போது இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் பற்றிய ஒரு சட்ட ரீதியான ஆய்வு ஆகும்.

பகுதி ஒன்று

சூழல்

செப்டெம்பர் 2008 இல் இலங்கை அரசானது எஞ்சியிருந்த சர்வதேச உதவிப் பணியாளர்களையும் LTTE இன் கட்டுப்பாட்டில் இருந்த வன்னிப் பிரதேசத்தினை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டது. போர் விரிவடைந்து கொண்டிருந்ததையும் அதனை வெளியாட்கள் பார்க்ககூடாது என்பதனை அடையாளப்படுத்துவதாகவே அது இருந்தது. அடுத்து வந்த மாதங்களில் இராணுவம் ஆயிரக்கணக்கான மக்கள் மீண்டும் மீண்டும் இடம்பெயரச் செய்யப்பட்டு கிழக்கு கடற்கரையோரத்திலுள்ள ஒரு சிறிய ஒடுங்கிய மணற் பிரதேசத்தைக் கொண்ட ஒரு சிறிய மண்முனையில் முடக்கப்படும் வரை எறிகணை மற்றும் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டது. வெடிபொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக ஒவ்வொரு தடவையும் பின்வாங்க நிர்ப்பந்திக்கப்பட்ட வேளையில் கனரக ஆட்டிலறிகளை விட்டுச் செல்ல வேண்டி இருந்தமையால் சரியான முறையில் வலிந்து தாக்குதல்களை LTTE நடாத்த முடியாமல் தனது இராணுவப் படையுடன் பின்வாங்கிச் சென்று கொண்டிருந்தது.

2009 ஏப்பிரல் முற்பகுதியில் ஆனந்தபுரத்தில் இடம்பெற்ற சமரானது இலங்கை இராணுவத்திற்கும் LTTE இனருக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிப் பாரிய சமராக இருந்தது. அதற்குப் பின்னர் LTTE அதனுடைய பல மூத்த இராணுவத் தலைவர்களையும் போர் அனுபவம் வாய்ந்த போராளிகளையும் இழந்ததன் பின்னர் அது வலுவான இராணுவ சக்தி என்ற நிலையை இழந்துவிட்டது, அத்துடன் கிட்டத்தட்ட போர் வெல்லப்பட்டு விட்டதாகவே கூறலாம். இருப்பினும் அடுத்த ஆறு வாரங்களாக கூடுதலாகப் பொதுமக்களை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல்கள் மற்றும் எறிகணை வீச்சுக்கள் தொடர்ந்து இடம்பெற்றது. இந்தப் பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் LTTE போராளிகளின் குடும்பங்கள் ஆகும். 5 ஏப்பிரல் 2009 விடிகாலைக்கு சற்றுமுன்னர் முடிவுக்கு வந்த ஆனந்தபுரச் சமரானது இலங்கை அரசாங்கப் படைகளுக்கு எதிரான போரில் LTTE இனரின் இறுதிப் போராக இருந்தது.

கிட்டத்தட்ட ஒரு வார காலமாக ஏற்கனவே கடுமையான காயங்களுக்கு உள்ளான பலர் உட்பட 800 வரையான LTTE போராளிகள் வேகமாகவே சில சதுர கிலோ மீற்றர்களுக்கும் சற்றுக் கூடுதலான ஒரு நிலப்பரப்பில் அகப்பட்டுக் கொண்டார்கள். அங்கே இராணுவத்தால் பெட்டியிடப்பட்ட அவர்கள் வெடிபொருட்கள், மருத்துவப் பொருட்கள், உணவு மற்றும் நீர் உட்பட அனைத்து வழங்களிலிருந்தும் இறுதியில் துண்டிக்கப்பட்டிருந்தார்கள். வானில் இருந்து கிபிர் குண்டுத் தாக்குதல் விமானங்கள் மற்றும் கண்காணிப்பு ட்ரோன்களின் உதவியினால் மேலோங்கியிருந்த எதிர்த்தரப்பின் கூட்டு வலுவினை எதிர்த்து போரிடுவதற்கு இன்னமும் போரிடக்கூடிய நிலையில் இருந்தவர்கள் முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.[1] குறிப்பிடத்தக்க வகையில் சமச்சீரற்ற இந்தப் போட்டியில், ஆனந்தபுரத்தில் கிட்டத்தட்ட 80 சதவீதமான LTTE போராளிகள் இறந்தார்கள். சிலர் தப்பிச் செல்வதற்கான தீவிரமான இறுதி முயற்சிகளை மேற்கொண்டார்கள். உண்மையிலே மிகக் குறைவானவர்கள் மாத்திரமே தப்பி வெளியே வந்தார்கள். இந்த நடவடிக்கையின் போது அவர்களில் பலர் கடுமையாக காயமடைந்தார்கள். ஆறு வாரங்களுக்குப் பின்னர் போர் அதன் தீவிரமான மற்றும் கசப்பான முடிவை அடைந்த போது இவர்களில் இன்னும் சிலர் இரண்டாவது தடவையாகவும் உயிர் தப்பினார்கள். ஆனந்தபுரத்தில் உயிர் தப்பிய இந்த சிறிய எண்ணிக்கையானவர்களில் ஏழு பிரதான சாட்சிகளின் வாக்குமூலங்கள் கீழே உள்ளன. முக்கியமான இந்த இறுதிச் சமரில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த விபரணங்களில் இது வரை சொல்லப்படாதவை பற்றியும், தாம் அனுபவித்தவை பற்றியும் அவர்கள் விபரிக்கின்றார்கள்.

2009 முற்பகுதி: LTTE பின்வாங்க நிர்ப்பந்திக்கப்படல்

உள்நாட்டுப் போரில் பல ஆண்டுகளுக்குப் பின்னர், 02 ஜனவரி 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) நிர்வாகத் தலைநகரான கிளிநொச்சி இலங்கை இராணுவத்திடம் வீழ்ச்சியடைந்தது. அன்றையதின நிலைமை அறிக்கையில் பாதுகாப்பமைச்சு இது எதிரியின் 'அழிவுக்கான ஆரம்பம்' என பெருமிதத்துடன் தெரிவித்தது.[2] சுமார் 20 கிலோ மீற்றர் கிழக்கே விசுவமடுவில் LTTE இனரின் சண்டைக்கான முக்கிய நரம்பு மையம் இருந்தது. பொதுமக்களின் குடியிருப்பு பகுதியால் சூழப்பட்டிருந்த காட்டுப் பகுதியில் LTTE இனரின் இராணுவ முகாம்கள், பயிற்சி முகாம்கள், வெடிபொருட்களஞ்சியங்கள் மற்றும் விநியோக நிலையங்கள் என்பன இருந்தன. இலங்கை இராணுவம் தொடர்ந்து முன்னேறியதுடன், ஜனவரி மாத முடிவுப் பகுதியில் விசுவமடுவும் வீழ்ச்சியடைந்தது.

LTTE இனரின் ஆயுத இருப்பினை நிர்வகிப்பதில் தொடர்புபட்டிருந்த சாட்சி ஒன்று (W1)[3] விசுவமடுவில் இருந்து LTTE இனர் பின்வாங்கிய வேகமும், சேறும் சகதியுமாக பழுதடைந்த வீதிகள் மற்றும் பெருமளவான பொதுமக்கள் இருந்தமை உட்பட பாதகமான சூழ்நிலைகளும் ஒன்று சேர்ந்து அங்கு வைக்கப்பட்டிருந்த ஆட்டிலறி ஆயுதங்களை கைவிட வேண்டிய சூழலை ஏற்படுத்தியதாகவும் அவற்றைப் போராளிகள் வேகமாகப் புதைத்ததாகவும் அவர் குறிப்பிடுகின்றார். இது LTTE இனரின் படைகளை மிக மிக குறைந்த எறிகணைகள், மற்றும் 'சிறிய அளவிலான துப்பாக்கிகள் மற்றும் ரவைகள்' ஆகியவற்றுடன் மட்டுமே நகர்ந்து செல்லும் நிலையை ஏற்படுத்தியது. இதிலிருந்து, முன்பு 30 பக்கங்களை கொண்ட LTTE இன் ஆயுத இருப்புக்கான அதன் பிரதான பட்டியல்கள் வெறும் 5 பக்கங்களாகக் குறைவடைந்தது: பெப்ரவரி நடுப்பகுதி கணக்கு அறிக்கையில் 100 எறிகணைகள் இருந்ததாகவும் வெடிமருந்துகள் எவையும் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. LTTE இனரிடம் போதியளவு சண்டை அனுபவம் உள்ள போராளிகள் இருக்கவில்லை.

உயிர் தப்பியவர்களில் ஒருவர் தான் சாட்சி இரண்டு (W2)[4]. இவர் விசுவமடுவினைப் பாதுகாக்கும் முயற்சியில் பங்கெடுத்திருந்தார், அவரது படைப்பிரிவு சுமார் 1000 வரையான போராளிகளை இழந்திருந்தது: இவர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது கணிசமான அளவிற்கு ஊனமடைந்தார்கள், சிலர் 'மனநிலைத் தாக்கத்தினால்' செயலிழந்து போயிருந்தார்கள். 'நாய்கள் இறந்த உடல்களை சாப்பிட்டுக் கொண்டிருக்கவும்' வீதியில் பல இறந்த உடல்களைக் கடந்தும் அரசாங்கப்படைகளின் பலத்த எறிகணைத் தாக்குதலுக்கு மத்தியில் விசுவமடுவில் இருந்து பின்வாங்கிய பயங்கரத்தைப் பற்றி அவர் பதிவு செய்கிறார்.

LTTE தனது நடவடிக்கை மையத்தினை ஏ35 நெடுஞ்சாலையில் 15 கிலோ மீட்டர்களுக்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு குறிப்பாக ஆனந்தபுரத்திற்கு இடமாற்றியிருந்தார்கள். இந்தப் பகுதி புதுக்குடியிருப்பு சந்திக்கு கிழக்கே பனை மரக்கூடல்கள் மற்றும் தென்னந்தோப்புகளுக்கிடையே சிறிய அளவிலான வீடுகளையும் கட்டிடங்களையும் கொண்டிருந்தது. 'போரை வெல்வதற்கான அல்லது போரில் தோற்பதற்கான இறுதி இடமாக'[5] ஆனந்தபுரம் இருக்க வேண்டும் என LTTE தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் முடிவு செய்தார். குறிப்பாக ஆனந்தபுரம் அடர்த்தியான மரக்கூடாரங்களைக் கொண்டிருந்தமையாலும், அது அரசாங்கப் படைகளுக்கு எதிராக எந்தவொரு பதில் தாக்குதலையும் அங்கிருந்து மேற்கொள்வதற்கு LTTE இனரின் கையில் எஞ்சியிருந்த ஒரு பொருத்தமான இடமாக இருந்தது.[6] தெளிவாகச் சொல்லப்போனால், தோல்வி தவிர்க்க முடியாதது என நம்பிய W1 இன் கூற்றுப்படி 'சாகும் வரை போரிடுவதே கொள்கையாக இருந்தது', உள்ளூர்ப் பொதுமக்கள் அரசாங்கத்தினால் கட்டாயமாக்கப்பட்ட பாதுகாப்பு வலையத்தை நோக்கி வெளியேறியதையடுத்து இறுதியாக எஞ்சியுள்ள பிரதேசங்களை நிர்வகிப்பதற்கான முதன்மை மையமாக ஆனந்தபுரம் மாறியது. இருந்தாலும் நிர்வாகத்திலிருந்த போராளிகள் சண்டையில் அல்லது பாதுகாப்பு நடவடிக்கையில் மீள ஈடுபடுத்தப்பட்டமையால் இவ்வாறு நிர்வகிப்பது பெரும்பாலும் குழப்பமானதாக இருந்தது.[7]

பாதுகாப்பான பகுதிகள் - செல்லும் வழித்தடங்கள்

மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்கு மட்டும்

மாவட்டம் : முல்லைத்தீவு

District	Total # of IDP's as of 09th Feb 09
VAVUNIYA	21,323
JAFFNA	1,961
MANNAR	854
Total	24,138
With SLA in Vanni(Parantan to Killinochchi) and Omanthai check point	± 10,000 to 12,000 (according to GoSL)

Area Detail



Legend

- Village
- ICRC
- UN
- Location Coordinate (WGS 84)
- Hospital
- Aerial Bombardment & Shelling (20Jan 09 - 31Jan 09)
- Aerial Bombardment & Shelling (since 01 Feb 09))
- Flood
- Not Accessible
- Front Line as at 12 February 2009
- Route 1
- Route 2
- Route 3
- Foot Path
- Track Road
- Railroad
- Secondary Road
- Minor Road
- Main Road
- District Boundary
- Safe Area declared by the Government of Sri Lanka as at 12 Feb 2009
- Safe Area declared by the Government of Sri Lanka as at 21Jan 2009
- SLA controlled area as at 12Feb 2009 (since January 2008)
- Populated Place as at 5 Feb 09
- Populated Place as at 12 Feb 09

Data sources :
SF HQ, Govt of Sri Lanka, UNDSS

Updated as at:	**12-Feb-2009**
Produced on:	12-Feb-2009
Projection / Datum	Transverse Mercator Kandawala
Admin boundaries provided by:	Survey Department, Government of Sri Lanka

MapNumber:OCHA/LK/COL_/Govt/NoWarZone/08Feb2009/ V19

This map is designed for printing on A3 size

The boundaries, names and the designations used on this map do not imply official endorsement or acceptance by the United Nations.

UN OCHA

© 2009 United Nations Office for the Coordination of Humanitarian Affairs. Sri Lanka
20, Temple Road , Kurumankadu Vavuniya
Tel: +94 (24) 2224873, 4922044 Fax: +94 (24) 2224873
Email: ocha.vavuiya@gmail.com
Websites: www.hpsl.lk, http://ochaonline.un.org/srilank

Produced through the generous support of:

DFID · Irish Aid · USAID · Canada · Sida

Indian Ocean

Mullaitivu

Chalai

Suthanthirapuram Colony

Thivipuram Colony

9°22'43.82"N 80°40'18.9"E

9°22'27.91"N 80°39'49.03"E

9°22'26.22"N 80°40'13.34"E

Area : 35.5 Sq Km

Palamattalan

9°22'35.60"N 80°42'53.80"E

9°22'17.70"N 80°42'35.60"E

# of IDP: 20,000 - 30,000

UN Staff & Dependents

Putumattalan

9°21'32.06"N 80°43'29.26"E

Ampalavanpokkanai

3 Km

9°20'26.86"N 80°44'59.44"E

ICRC

Iranaipalai RC School

Iranaipalai Common Hall

Valayanmadam

Area : 14 Sq Km

Ananthapuram GTMS

# of IDP: 50,000

Karaiyamullivaikal

9°18'06.08"N 80°48'08.30"E

Vellamullivaykkal

9°1726.60"N 80°47'10.60"E

Wadduvakal

Keppapulavu

Manthuvil Common Hall

Sivanagar Tamil Vidyalayam

Sri Subramaniya Vidyalayam

Kombavil Vigneswara Vidyalayam

Kombavil

Kaiveli

Kaiveli Common Hall

Kaiveli kanesha vidyalayam

Manjal Palam (Yellow Bridge)

Vernavil Sri Murunagnada Vidayalayam

PTK West Common Hall

PTK Central College

Puthukkudiyiruppu

Puthukkudiyiruppu Kokkulai GTMS

PTK Central College Golden Jublie Hall

Thevipuram GTMS

Thevipuram Common Hall

Thevipuram

Vallipunam

Kuravil Kulam

Suthanthirapuram Junction

Udayaarkaddu Mahavidyalayam

9°21'20.75"N 80°38'32.80"E

Suthanthirapuram GTMS

Suthanthirapuram Common Hall

2112009

722009

922009

622009

1022009

122009

222009

322009

1.4 Km

800 m

700 m

1.3 Km

2 Km

2.4 Km

2.5 Km

A35

A34

N

0 2 4 Kilometers

80°36'0"E 80°37'0"E 80°38'0"E 80°39'0"E 80°40'0"E 80°41'0"E 80°42'0"E 80°43'0"E 80°44'0"E 80°45'0"E 80°46'0"E 80°47'0"E 80°48'0"E

9°25'0"N 9°24'0"N 9°23'0"N 9°22'0"N 9°21'0"N 9°20'0"N 9°19'0"N 9°18'0"N 9°17'0"N 9°16'0"N

ஆனந்தபுரம்

கடல்

ஒடுக்கமான
'பாதுகாப்பு வலயம்'

ஆழமற்ற சதுப்பு நிலக் கடல்நீரேரி

இரணைப்பாலை

நீரேரி வழியான தப்பிச்
செல்லல்கள்:
W1, W3

கட்டளை
மையம்

தப்பிச் செல்லும்
வழிகள்: W4, W6, W7

சந்தைப்
பகுதி

பச்சைப்
புல்மோட்டைச் சந்தி

கணனி
நிலையம்

மருத்துவ
வசதிகள்

தேவாலயம்

SLA 58th Div. 'pincer'

ஆனந்தபுரம்

பிரபாகரனின் வீடு
(தோராயமான அமைவிடம் மட்டுமே)

A35

SLA 53rd Div. + Task Force 8 'pincer'

A35

புதுக்குடியிருப்பு (PTK)

1/4 mile

நந்திக்கடல் நீரேரி

200m

N

LTTE இனர் அமைத்த ஆனந்தபுரம் பெட்டி

ஆனந்தபுரத்தினை ஒரு இராணுவக்கோட்டையாக அல்லது பாதுகாப்பு 'பெட்டி' என அழைக்கப்பட்ட பகுதியாக மாற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் LTTE தளபதிகள் மேற்கொண்டார்கள். தற்போதைய பாதுகாப்பு முன்னரங்க நிலைகளைப் பலப்படுத்துவதற்காக அகழிகளை அமைத்ததுடன், அகழ்வு இயந்திரங்களைப் பயன்படுத்தி சரக்கு கொள்கலன்களை ஆழமான பதுங்கு குழிகளுக்குள் புதைத்து அவற்றைப் பின்னர் விமானத்தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்காக தென்னங்குற்றிகள், மண்மூட்டைகள் மற்றும் மண் நிரப்பிய எண்ணெய் பீப்பாய்கள் ஆகியவற்றைக் கொண்டு பலப்படுத்தியதுடன் போராளிகள் ஒரு தொகுதி இரகசியத்தளங்களை உருவாக்கினார்கள்.[8] மின்பிறப்பாக்கிகள் மின்சாரத்தை விநியோகம் செய்தன, கொள்கலன்களுக்கு உள்ளே கடும் வெப்பமாக இருக்கும். வளைந்து நெளிந்து செல்லும் வடிவில் புதைக்கப்பட்ட பன்னிரெண்டு கொள்கலன்கள் மேற்கு நோக்கி புதுக்குடியிருப்பு பக்கமுள்ள ஆனந்தபுரத்தின் ஒரு புதிய கட்டளை மையமாக மாறியது. அருகிலுள்ள ஏனைய கொள்கலன்கள் கூடுதலான மருத்துவ உதவி தொடர்பான தேவைகளுக்காவும் சண்டை ஓய்வான நேரங்களில் மருத்துவ உதவி தேவையானவர்களை அகற்றுவதற்கான இடைவழி மையங்களாகப் பயன்படுத்துவதற்கும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இதற்கிடையில் LTTE இனரின் சீருடைகளைத் தயாரிப்பதற்காக முன்பு பயன்படுத்தப்பட்ட ஒரு கட்டிடம் மாற்றியமைக்கப்பட்டு அடிப்படை வசதிகளைக் கொண்ட அறுவைச் சிகிச்சை அறையுடன் கூடிய ஆனந்தபுரத்தின் பிரதான மருத்துவ நிலையமாக இருந்தது. பிரபாகரனைப் பாதுகாப்பதற்காக அவரைச் சுற்றி ஐந்து அடுக்கு பாதுகாப்பு வளையங்கள் இருந்தன.[9]

விரைவாக உருவாக்கப்பட்ட ஆனந்தபுரம் பெட்டியின் எல்லைகள் தாக்குதல்கள் காரணமாக வேகமாக குறுகத் தொடங்கியது. ஆனந்தபுரம் பெட்டி மூன்று பக்கங்கள் நிலப்பரப்பினைக் கொண்டிருந்த அதேவேளையில் கிழக்காக இருந்த நான்காவது பக்கம் நடந்து சென்று கடக்ககூடிய அளவிற்கு ஆழமான பருவகால ஏரியின் மழை நீரைக் கொண்டிருந்தது. மார்ச் மாதம் இறுதிப் பகுதியில், LTTE இனர் தம்மிடம் எஞ்சியிருந்த கனரக இயந்திரத் துப்பாக்கிகளில் பெரும்பாலானவற்றை நிலைநிறுத்தி வைத்திருத்த பெட்டியின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் இலங்கை இராணுவத்தின் பலத்த தாக்குதல்கள் இடம்பெற்றன. மேற்குப் பகுதி தளபதி கேணல் தீபனின்[10] கீழ் இருந்த அணிகளால் பாதுகாக்கப்பட்டு வந்த அதேவேளையில் தெற்குப் பகுதி கேணல் ஆதவன் என்றழைக்கப்படும் கடாபியினால் பாதுகாக்கப்பட்டு வந்தது.

தெற்குப் பகுதியில், ஆரம்பத்தில் ஆனந்தபுரத்திற்கு தெற்கேயுள்ள கேப்பாப்புலவுப் பிரதேசத்தில், இன்னுமொரு நீண்ட கால சண்டைப் போராளியான சாட்சி மூன்று (W3)[11] பணியில் ஈடுபடுத்தப்பட்டார். பாரிய இழப்புக்களைக் குறைப்பதற்காக இவரும், இவரோடு இருந்தவர்களும், 2-3 கிலோ மீற்றர் முன்னரங்க நிலையில் 3 பேர் கொண்ட குழுக்களாக ஒவ்வொரு 50 – 100 மீற்றர் தூரத்திற்கு விடப்பட்டார்கள். அத்துடன் அவர்களுக்கு பின்னால் கிட்டத்தட்ட 100 மீற்றர் தொலைவில் மேலதிக போராளிகள் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் ஏ.கே 47 துப்பாக்கிகளையும், இலகு இயந்திரத் துப்பாக்கிகளையும், கைக்குண்டுகளையும் வைத்திருந்தார்கள். அத்துடன் மேலும் சில போராளிகள் பதுங்கிச் சூட்டினை வழங்குவதற்காக நிலை நிறுத்தப்பட்டிருந்தனர். ஆனால் இலங்கை இராணுவத்தின் முன்னேற்றத்தினை தாமதமாக்குவதற்கு நிலக்கண்ணிகளைப் புதைப்பதற்கு அவர்களிடம் நேரம் இருக்கவில்லை. அவர்கள் மிகப்பெரிய அளவிலான எதிரிப்படைகளை முகங்கொடுத்தார்கள் அத்துடன் மார்ச் பிற்பகுதியில், அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு மத்தியிலும், தொடையில் குண்டுச் சிதறலால் ஏற்பட்ட காயத்துடன் தெற்கு முன்னரங்க நிலையில் இருந்து W3 அப்புறப்படுத்தப்பட்டார்.

இது சடுதியாக சமச்சீரற்ற ஒரு சண்டையாக மாறியது. இலங்கை இராணுவத் தளபதிகள் ஆனந்தபுரம் பெட்டியினுள் LTTE இனரைச் சுற்றிவளைக்க முயன்ற வேளையில் தமது சொந்தப்படையினருக்கே காயத்தினை ஏற்படுத்தக் கூடிய அபாயம் அவர்கள் தமது ஆட்டிலறி தாக்குதலை மட்டுப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஆனால், கனரக இயந்திர துப்பாக்கிகள், பீரங்கிகள் மற்றும் ஆர்.பி.ஜிகள் (RPG) ஆகியவற்றில் இருந்து சரமாரியான தாக்குதல்கள் நடாத்துவது குறித்து அவர்கள் எந்த தயக்கமும் கொண்டிருக்கவில்லை. அதேசமயம், தலைக்கு மேலாக, இஸ்ரேலி தயாரிப்பு கிபிர் விமானங்கள் போன்ற இலங்கை விமானப்படை சண்டை விமானங்கள், மற்றும் ஆளில்லாத வேவு விமானங்கள் ஆகியவற்றின் உதவியுடன் ஒவ்வொரு நாளும் கொத்துக் குண்டுகள் மற்றும் வெள்ளைப் பொஸ்பரசு உட்பட ஏராளமான குண்டுகளைப் போட்டு பெட்டியின் மீது பல்வேறு தாக்கதல்களை மேற்கொண்டன. மாறாக, LTTE இனர் எதிரியின் வெடிக்காத வெடிபொருட்களை சேகரித்து அவற்றினை மிகவும் ஆபத்தான வகையில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெடிபொருட்களாக (IEDs)[12] மீளப் பயன்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். இந்த மாதிரியான இக்கட்டான சூழ்நிலைகளில், போர் அனுபவம் உள்ள போராளியான W2 அவர் அங்கு செல்லும் வழியில் இறந்த உடல்களை சாப்பிட்டுக் கொண்டிருந்த நாய்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அத்துடன் அவருடன் உயிர் தப்பியிருந்த அவரது தோழர்களும் தம்மிடம் இருந்த மட்டுப்படுத்தப்பட்ட வெடிபொருட்களை எவ்வாறு மிகவும் அவதானத்துடனும் கட்டுப்பாடுடனும் பயன்படுத்தியதாக விபரிக்கின்றார். மேலும், 'வெடிபொருட்களை கொண்டு வருவதற்கு உயிர்கள் இழக்கப்பட்டன எனவே நாங்கள் பொறுப்பு கூறவேண்டியவர்களாக இருக்கிறோம் என எப்போதும் எங்களுக்குச் சொல்லப்பட்டது'. இந்தச் சூழ்நிலையில், தாம் அகப்பட்டுக் கொண்டிருந்த நிலப்பரப்பு பற்றி LTTE இனருக்கு இருந்த கூடுதலான அறிவு சிறிய அளவிலே அவர்களுக்கு சாதகமானதாக இருந்தது.

இலங்கை இராணுவம் புதுக்குடியிருப்பினை நெருங்கிய போது LTTE இனர் அவர்களது தற்கொலை தாக்குதலாளிகளான கரும்புலிகளைப் பயன்படுத்தி ஒரு பதில் தாக்குதலை மேற்கொள்ள முயற்சி செய்தார்கள்.[13] ஆனால் 01 மார்ச்சில் அரச செய்தித்தாளான, டெய்லி நியூஸ் இராணுவம் தற்போது புதுக்குடியிருப்பின் புறநகர்ப பகுதியில் இருப்பதாக அறிவித்தது. 16 சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவான பிரதேசத்தில் பரந்து கிடக்கும் LTTE இனரின் 'படைத்தள நகரம்' என அதனை அது விபரித்தது. விரைவிலேயே, 'புதுக்குடியிருப்பு இராணுவத்தினரிடம் நேற்று (மார்ச் 3) விழுந்த போது LTTE பயங்கரவாதிகள் தமது பிடியில் இருந்த கடைசி நகரத்தினை இழந்து விட்டார்கள்' என பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கை தெரிவித்தது, புதிய தகவலுடன் இரண்டு நாட்களின் பின்னர் இராணுவம் புதுக்குடியிருப்புச் சந்தியினையும் கைப்பற்றி விட்டதாக தெரிவித்தது.[14] இந்த முக்கிய இடம் ஆனந்தபுரத்தில் இருந்த LTTE இனரின் கட்டளை மையத்திலிருந்து 3.5 கிலோ மீற்றர்கள் தொலைவில் இருந்தது அத்துடன் இலங்கை இராணுவத்தினர் இப்போது ஓயாத சண்டையினை புதுக்குடியிருப்பின் கிழக்கு நோக்கிய பகுதிக்கு ஊடாகத் தொடங்கினார்கள் இதன்மூலம் LTTE இனரின் பாதுகாப்பு வளையங்களை மெது மெதுவாக உடைத்துப் போராளிகளை வெறித்தோடிக்கிடந்த கட்டிடத் தொகுதிகளின் ஊடாக பின்வாங்க நிர்ப்பந்தித்தார்கள் அத்துடன் இராணுவத்தினர் முன்னேறி வந்த போது அந்தக் கட்டடங்களையும் அழித்தார்கள். LTTE இனரின் ஆதரவு அணிகள் தமது போராளிகளுடன் பின்வாங்கிச் சென்ற வேளையில் தமது முன்னரங்க நிலையினைத் தக்க வைக்கும் முயற்சியில் புதிய பதுங்குகுழிகளை வெட்டினார்கள். ஆனால் நாட்கள் கடந்து செல்கையில், ஆனந்தபுரத்தினைச் சுற்றியிருந்த பாதுகாப்பு எல்லைக் கோடு சுருங்கிக் கொண்டே போனது. மார்ச் 17 இல், ஆனந்தபுரத்திற்கு வடக்காக வெறும் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருந்த இரணைப்பாலைச் சந்தியை முதல் நாள் தமது படைகள் கைப்பற்றிவிட்டதாக பாதுகாப்பமைச்சு அறிவித்திருந்தது அதேவேளையில், 'கடுமையான எதிர்ப்புகளுக்கு' மத்தியிலும் அரசாங்கப்படைகள் 'பயங்கரவாதிகளின் பாதுகாப்பு நிலைகளை தொடர்ச்சியாக ஊடுருவியதாக' 20 மார்ச் பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கையில் அது புகழ்ந்து பேசியது. ஆனந்புரம் கோட்டைக்கு உள்ளே, LTTE இனரின் ஆயுதங்களை நிர்வகிப்பதற்கு பொறுப்பாக இருந்த W1 இனையும் அவரது அணியையும் எஞ்சியுள்ள ஆயுதக் களஞ்சியங்களை இயன்ற அளவிற்கு இந்த தாக்குதலில் இருந்து தொலைவில், இந்தப் பெட்டியின் கிழக்கு மூலையிலுள்ள பச்சைப்புல்மோட்டைக்கு இடமாற்றம் செய்யுமாறு பிரபாகரன் அறிவுறுத்தினார்.

ஆனந்தபுரம் பெட்டியிலிருந்து மருத்துவ உதவிக்கான வெளியேற்றங்கள்

தொடர்ச்சியான, முற்றிலும் சமநிலையற்ற போர் நடைபெறுகையில் மருத்துவ ரீதியான உதவிகளுக்கு ஆட்களை அங்கிருந்து கொண்டு செல்லவது மிகவும் அவசியமானதாக இருந்தது. LTTE தனது நிலப்பரப்புகளை இழந்ததுடன் பிரதான வீதிகளின் கட்டுப்பாட்டையும் இழந்தது, அத்துடன் சாட்சி நான்கு (W4)[15] வீதிகளில் நிலக்கண்ணிகளை அகற்றும் பணியில் இருந்து கடுமையாக காயப்பட்ட போராளிகளை புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து அருகிலுள்ள மருத்துவ நிலையங்களுக்கு அப்புறப்படுத்தும் பணிக்கு மாற்றப்பட்டார். ஆனந்தபுரத்தில் காயப்பட்டு கொள்கலன்களில் இருந்தவர்களை அங்கிருந்து இரட்டைவாய்க்காலிலுள்ள ஒரு தற்காலிக அறுவைச் சிகிச்சைப் பிரிவிற்கு அல்லது சூழவுள்ள பிரதேசத்திலுள்ள துணை மருத்துவ நிலையங்களில் ஒன்றுக்கு வாகனத்தில் கொண்டு செல்வது அவரது பணிகளில் ஒன்றாக இருந்தது. அப்புறப்படுத்தம் அணிகள் ஆளில்லா வேவு விமானங்களின் கண்காணிப்பு இல்லாத நேரத்தில் இரவு நேரத்தில் மட்டும் செயற்பட்டார்கள். எவ்வாறெனினும், இலங்கை இராணுவத்தினர் மிக மிக நெருக்கமாக முன்னேறி வந்த நிலையிலும், கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியிலும் இந்தப் பணி மிகவும் ஆபத்தானதாக மாறியது.

இப்போது, ஆனந்தபுரத்தில் பொதுமக்கள் எவரும் இருக்கக்கூடாது என்று இருந்த போதிலும், W4 மற்றும் ஏனைய அணிகள் அங்கிருந்து காப்பாற்றிய அனைவரும் போராளிகளாக இருக்கவில்லை. பெரும்பாலான வயல்நிலங்கள் இழக்கப்பட்டிருந்தமையால் ஜனவரி – பெப்ரவரி மாத பாரம்பரிய அறுவடைக் காலத்தில்[16] புதிய பயிர்களின் விளைச்சல்கள் எதுவும் இருக்கவில்லை, அத்துடன் பாதுகாப்பு வலையத்தில் இருந்த பொதுமக்களில் பெரியளவானோர் மெது மெதுவாக பட்டினியால் வாடிக் கொண்டிருந்தார்கள். சிலர் தமது உயிர்களை ஆபத்திற்கு உள்ளாக்கி தேங்காய்களைத் தேடி ஆனந்தபுரத்தினுள் சென்றார்கள், அதேவேளையில், பல்வேறு பொதுமக்கள் இவ்வாறே தமது உயிர்களை ஆபத்திகு உள்ளாக்கி தமது வீடுகளில் இருந்து அத்தியாவசியமான உடைமைகளை மீட்டெடுப்பதற்கு இதேபோன்று தமது உயிர்களை ஆபத்திற்கு உள்ளாக்கிச் சென்றார்கள்.

முன்னர் விநியோகப் பணியில் ஈடுபட்டிருந்த சாட்சி ஐந்து (W5),[17] மார்ச் ஆரம்பத்தில், யன்னல்கள் அகற்றப்பட்டு உலோகத் தகடுகளால் பலப்படுத்தப்பட்ட 4x4 சிவிலியன் வாகனத்தில் ஆனந்தபுரத்தில் இருந்து காயப்பட்டவர்களை வெளியேற்றும் பணியினை மேற்கொள்ள ஆரம்பித்தார். காயமடைந்தவர்களை வாகனங்களில் வெளியேற்றும் நடவடிக்கைகளின் போது அந்த வாகனங்கள் கூடுதலாக நன்கு இலக்கு வைக்கப்பட்டு எறிகணைத் தாக்குதல்கள், ஆர்.பி.ஜி தாக்குதல்கள் மற்றும் யுத்த டாங்கிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகின, இதனால் இந்த மீட்பு வாகனங்கள் மருத்துவ உதவியாளர் இல்லாமல் இரண்டு பேரை கொண்ட குழுக்களை மட்டுமே இப்போது ஏற்றிச் செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டன. W5 கூறுகையில், தான் பார்த்த காயங்களில் மூன்றில் ஒரு பங்கு காயங்கள் வெள்ளைப் பொஸ்பரசுடன் தொடர்புபட்ட காயங்கள் போல் இருந்ததாக அவர் மதிப்பிடுகின்றார். பாதிக்கப்பட்டவர்கள் 'கடுமையான எரிவு' உணர்வினை அனுபவித்ததுடன் அவர்களது தோல் கறுப்பாகவும் மாறியது. 'இது தசையினை ஒரு வகையில் அழுகிய இறைச்சியைப் போல் ஆக்கியதாக' அவர் விபரிக்கின்றார்.

மார்ச் இறுதிப் பகுதியில் ஒரு நாள் விடிகாலையில், W5 ஆனந்தபுரத்திலுள்ள மருத்துவ உதவி வழங்கப்படும் ஒரு கொள்கலனுக்கு அருகில் சென்று கொண்டிருக்கையில் அவர் குண்டுச் சிதறலால் தாக்கப்பட்டு அந்த சிதறல் அவரது குடலையும் வயிற்றையும் துளைத்துச் சென்றது. இப்போது அவரையே மருத்துவ உதவிக்காக வெளியேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால், வான் வழிக் கண்காணிப்பும், தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களும் இடம்பெற்று வந்தமையால் முன்னர் பொக்கணையில் ஆரம்பப் பாடசாலையாக இருந்த பொதுமக்களுக்கான தற்காலிக வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு செல்வதற்கு இரவு 7 மணிவரைக் காத்திருக்க வேண்டி இருந்தது. அங்கே பொதுமக்கள் மற்றும் LTTE இனர் என 500 இற்கு மேற்பட்ட நோயாளிகளுக்கு மத்தியில் நிலத்தில் போடப்பட்ட தறப்பாளில் வைத்து அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. அவர் இதில் உயிர் பிழைத்துக் கொண்டாலும், மயக்க மருந்துகள் மட்டும் அன்றிப் போதிய மருத்துவ உபகரணங்கள் இல்லாமல் அவரைச் சுற்றியிருந்த பலரும் தேவையில்லாமல் இறந்ததை அவரால் பார்க்கமட்டுமே முடிந்தது. இந்த நேரத்தில், W2 உம் தலையிலும் தொடையிலும் கடுமையான காயங்களுடன் பெட்டியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட இன்னுமொரு போராளியாவார். இவர் விசுவமடுவினைப் பாதுகாக்கும் முயற்சியில் முன்னர் பங்கேற்றிருந்தார்.

இலங்கை இராணுவமும் இலங்கை விமானப் படையினரும் 'பாதுகாப்பு வலையங்களில்' இருந்த பொதுமக்களுக்கான வைத்தியசாலைகள் உட்பட அனைத்து மருத்துவ நிலையங்கள் மீதும் எறிகணை மற்றும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இதனால், பெருமளவு உயிர்ச் சேதங்கள் ஏற்பட்ட அதேவேளையில் காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சை வழங்குவதற்கான வழிமுறைகளும் அழிக்கப்பட்டதுடன் ஒட்டுமொத்தமாக பொதுமக்களுக்கான மருத்துவ சேவைகளுமே சீர்குலைந்து போயின. LTTE இன் சட்டப் பிரிவில் ஆரம்பத்தில் இருந்து இப்போது சண்டைக்கு விடப்பட்ட சாட்சி ஆறு (W6)[18] பெப்ரவரி மாதத்தின் ஆரம்பத்தில் கர்ப்பிணியாக இருந்த தனது மனைவியை குழந்தை பிரசவிப்பதற்காக புதுக்குடியிருப்பில் இருந்த வைத்தியசாலைக்கு எவ்வாறு கொண்டு சென்றார் என்பது

பற்றியும் அவர் அங்கு சென்றபோது இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல்களின் காரணமாக அந்த வைத்தியசாலை கைவிடப்பட்டிருப்பதைக் கண்டது பற்றியும் கூறுகிறார்.[19] சேதமடைந்திருந்த கட்டடத்தில் இருந்து வெளியே இழுத்துவரப்பட்ட ஒரு மெத்தையிலே அவரது மனைவி தனது குழந்தையைப் பிரசவித்தார் அதன்பின்னர் அவர்கள் அங்கிருந்து விரைவாகச் சென்றுவிட்டார்கள். LTTE இனருக்காக மருத்துவ வழங்கல்களில் நேரடியாக ஈடுபட்டிருந்த போராளி ஒருவர்[20] பொதுமக்களுக்கான மருந்துப் பொருட்கள் நெருக்கடியான அளவினை அடைந்த போது LTTE இனர் தம்மிடம் இறுதி இருப்பில் இருந்த மயக்க மருந்துகள் உட்பட தம்மிடமிருந்த வளங்களை பிரித்து ஓழுங்குபடுத்தியதாகவும் தமது வைத்தியர்களில் சிலரை பொதுமக்களுக்கான வைத்திய நிலையங்களில் மாற்றிப் பணியில் ஈடுபடுத்தியதாகவும் விபரிக்கின்றார். வெறும் போர் நடவடிக்கைக் கண்னோட்டத்தில் பார்க்கையில், வன்னியிலுள்ள பொதுமக்களுக்கான மருத்துவ உதவியை அரசாங்கம் நிறுத்தியமை கடுமையாகக் காயமடையாத தமது போராளிகளுக்கு சிகிச்சை வழங்கி அவர்களை வேகமாகவே களமுனைக்கு அனுப்பும் LTTE இன் திறனைக் குறைக்கும் வகையில் தாக்கத்தைக் கொண்டிருந்தது. (விருப்பத்துக்குரிய பக்க பெட்டியை கீழே பார்க்கவும்.)

பொதுமக்களுக்கான மருத்துவ சேவைகள் சீர்குலைதலும், LTTE இனர் தலையிட்டு உதவுதலும்

15 பெப்ரவரி 2009 இல், புதுமாத்தளன் வைத்தியசாலையில் இருந்த மருத்துவ அதிகாரி, தனது மதிப்பீட்டிற்கிணங்க, உள்நாட்டுக்குள் இடம்பெயர்ந்த நபர்கள் சுமார் 200 000 பேர் உட்பட LTTE இனரின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிக்குள் இன்னும் இருக்கும் பொதுமக்களுக்கு சேவைபுரிவதற்கு தானும் தனது சகதோழர்களும் முயற்சி செய்யும் வேளையில் தனக்கு ஏற்பட்டுள்ள ஆழ்ந்த விரக்தி நிலையைக் குறிப்பிட்டு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் செயலாளருக்கு நிலைமை அறிக்கை ஒன்றினை அனுப்பினார். நீர் மற்றும் சுகாதாரம் என்பன நெருக்கடியில் இருப்பதாக அவர் எழுதினார். நீடித்த ஊட்டச்சத்துக் குறைபாடு பெரியளவில் அச்சுறுத்துவதாக இருந்தது. மருத்துவப் பொருட்கள் கிட்டத்தட்ட தீர்ந்து விட்டன. புதுமாத்தளனில் உள்ள அவரது அணியிடம் அறுவைச் சிகிச்சை பிரிவாக மாற்றப்பட்ட ஒரு பாடசாலையைத் தவிர எதுவுமே இருக்கவில்லை, அத்துடன் அங்கு அவர்களிடம் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் மட்டும் அல்லாமல் கிருமிகளைச் சுத்தம் செய்யும் பொருட்களும் இருக்கவில்லை. அவரது நோயாளிகளுக்கு மரணத்தை ஏற்படுத்தக்கூடிய நோய்த் தொற்றினைத் தவிர்க்கும் ஒரு முயற்சியாக அவரும் அவரது சகபாடிகளும் நோயத் தொற்று ஏற்பட்ட பகுதிகளை மீண்டும் துண்டித்து அகற்ற வேண்டியிருந்தது. அருகிலுள்ள ஏனைய களமருத்துவமனைகள் ஒன்றன் பின் ஒன்றாக கைவிடப்பட்டுவரும் நிலையில் 'எமது சுகாதார சேவைகள் கட்டமைப்பு முற்றிலும் சீர்குலையும்' தறுவாயில் இருப்பதாக அவர் எழுதினார்.[21]

LTTE தமது போராளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக பெரும்பாலும் மரங்களின் கீழ் தமது சொந்த மருத்துவப் பிரிவுகளை நடாத்தி வந்தார்கள். அதன் விநியோக வழிகள் தடுக்கப்பட்டமையாலும் வேகமாக அதிகரித்து வந்த இழப்பு எண்ணிக்கைகளாலும் இப்போது LTTE இனரும் மயக்கமருந்துகள் உட்பட அத்தியாவசிய மருத்துவப் பொருட்களுக்கான கடுமையான பற்றாக்குறைக்கு முகங்கொடுத்தார்கள்.[22] இருப்பினும், போர் வலையத்தில் எவரும் இவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான தகுதி அற்றவர்கள் என்ற அடிப்படையில் மயக்க மருந்துகளின் விநியோகங்கள் உட்பட பொதுமக்களுக்கான மருத்துவ உதவிகளை அரசாங்க அதிகாரிகள் நிறுத்துவதற்கு முடிவு செய்த போது,[23] LTTE இனர் தம்மிடம் இருந்த குறைந்தளவான விநியோகப் பொருட்களை போராளிகள் மற்றும் பொதுமக்களின் நிலையங்களுக்கு பகிர்ந்தளித்து ஒருங்கிணைத்து வந்தார்கள். ஒரு கட்டத்தில் பொதுமக்கள் வழங்கல் பாதையையும் LTTE இனரின் இராணுவ வழங்கல் பாதையும் தனித்தனியாகப் பேணுவது மிகவும் கடினமானதாக மாறியது. பொதுமக்களுக்கான வைத்தியர்கள் காயப்பட்டவர்களினால் திணறிக் கொண்டிருந்தமையால் டுவுவுது இனரால் பயிற்றுவிக்கப்பட்ட சில வைத்தியர்கள் பொதுமக்களின் வைத்திய நிலையங்களிலும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.[24] ஆயுதம் தரித்த LTTE இனரின் பிரசன்னம் எந்தவொரு வைத்தியசாலையிலும் இருக்கவில்லை என LTTE இன் நீதிப் பிரிவினைச் சேர்ந்த W6 கூறுகின்றார் அத்துடன் 'பொதுமக்களுக்கான வைத்தியசாலைகளுக்குள் சீருடைகளுடனோ அல்லது ஆயுதங்களுடனோ எந்தவொரு LTTE உறுப்பினர்களும் வரக்கூடாது' என்பதில் பொதுமக்களுக்கான மருத்துவப் பணியாளர்கள் உறுதியாக இருந்தார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.[25]

இறுதி ஆட்டம் ஆரம்பம்

மார்ச் மாதம் முழுவதும், ஆனந்தபுரம் பெட்டி எனப் பெயரிடப்பட்ட பகுதிக்குள் நிலைமைகள் மோசமடைந்தமையால், ஆனந்தபுரத்திற்கு வெளியே நடவடிக்கையில்ஈடுபட்டLTTEஇன்தளபதிகள்ஆனந்தபுரத்தின் வடக்கு பிரதேசத்திற்கு வடக்காக உள்ள இராணுவ நிலைகளுக்கு எதிராகப் பாரிய ஒரு பதில் தாக்குதலை நடாத்துவதற்குத் திட்டமிட்டார்கள். இந்த தாக்குதலுக்கான அணி 400 – 500 போராளிகளைக் கொண்டிருந்தது. அவர்களில் LTTE இன் ஆயுதக் கையிருப்பினை மேற்பார்வை செய்து வந்த W1 அவரது அணியைச் சேர்ந்த கிட்டத்தட்ட 40 பேருடன் இதில் அங்கம் வகித்திருந்தார். இதற்காக தெரிவு செய்யப்பட்ட பேராளிகளில் நிர்வாகத்தில் இருந்தவர்களும் பலவந்தமாக இணைக்கப்பட்டவர்களும் உள்ளடங்கியிருந்தனர். இவர்களுக்கு குறிப்பாக இந்த தாக்குதலுக்காக முள்ளிவாய்க்காலில் வைத்து அப்போது பயிற்சி வழங்கப்பட்டு வந்தது. W1 பெட்டிக்கு வெளியே அனுப்பப்பட்டு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட 100 பெண் போராளிகளுக்குப் பொறுப்பாக விடப்பட்டார். இரணைப்பாலையில் இருந்து பக்கவாட்டாக இலங்கை இராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்துவதே திட்டமாக இருந்தது என அவர் குறிப்பிடுகின்றார். 'கிடை மட்டமாக இலக்குகளை தாக்கக்கூடியதாக ஆட்டிலறிகளை பயன்படுத்தி கடுமையாகத் தாக்குதல் நடாத்துவதன் மூலம் பாதுகாப்பு படையினரை கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர்களுக்கு பின்வாங்கச் செய்யவதே புலிகளின் நோக்கமாக இருந்தது' என த நேசன் என்ற செய்தித்தாள் பின்னர் தனது அறிக்கையில் விளக்கமளித்தது.[26] சார்ஸ் அன்ரனிப் படைப்பிரிவைச் சேர்ந்த கேணல் கோபித்தின் கட்டளையின் கீழ் இந்த நடவடிக்கைக்காக LTTE இனரின் முக்கிய அணிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டதாக இன்னுமொரு போராளி[27] தெரிவித்தார், ஆனால் ஒரு உயர்மட்ட ஒன்றுகூடலின் போது இலங்கை இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் கோபித்தும் ஏனையோரும் கொல்லப்பட்டார்கள், இது திட்டமிடப்பட்ட இந்த நடவடிக்கையை கடுமையாகப் பாதித்தது. இலங்கை இராணுவம் தனது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி ஆனந்தபுரத்தினைச் சுற்றி தனது முற்றுகையை இறுக்கியதால் LTTE இனரின் திட்டமிடப்பட்ட இந்த எதிர்த்தாக்குல் கைவிடப்பட்டது.

ஆனந்தபுரத்தினை இறுதித் தாக்குதலுக்கான அல்லது இறுதிப் போராட்டத்திற்கான தனது தளமாக மாற்றுவதற்கு LTTE இன் தலைவர் பிரபாகரன் முன்னர் உறுதிபூண்டிருந்த போதிலும் உயர் பதவிகளில் இருந்த அதிகாரிகள் இப்போது அவர் இந்தப் பெட்டியை விட்டு வெளியேற வேண்டும் என அவரை நிர்ப்பந்தித்தார்கள். W1 மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட 100 பெண் பேராளிகளை உள்ளடக்கிய பேராளிகள் இலங்கை இராணுவத்தின் பலத்த எதிர்ப்பிற்கு மத்தியிலும் சண்டையிட்டு மீண்டும் உள்ளே செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது பாதுகாப்பான ஒரு வழியைப் பெற்று இதன் மூலம் 26 மார்ச்சில் பிரபாகரனை விசேடமாகப் பயிற்சி பெற்ற போராளிகள் இரகசியமாக வெளியேற்றினார்கள் ஆயினும், அங்கு தங்கியிருந்த LTTE இன் உயர்மட்ட தளபதிகளில் அநேகமானவர்கள் அந்தப் பெட்டிக்குள்ளே விடப்பட்டார்கள். இதற்குப் பொறுப்பாக மூத்த தளபதி பானுவும் அவருக்கு அடுத்ததாக கேணல் தீபனும் இருந்தார்.[28] அந்தப் பெட்டிக்குள் இருந்த ஏனைய தளபதிகளில் கேணல் கீர்த்தி, கடாபி, மணிவண்ணன், விதுசா மற்றும் துர்க்கா ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர். பெரும்பாலான LTTE இனரின் விசேட படைகளும் போர் அனுபவம் மிக்க பேராளிகளும் அங்கு தங்கியிருந்தார்கள்.[29]

W1 அங்கு நிற்குமாறு கேட்கப்பட்டார். கட்டளை மையத்திற்கு அருகில் இருந்த ஆனந்தபுரம் சந்தையடியில் பாதுகாப்பு முன்னரங்க நிலைகளை அமைக்குமாறு அவருக்கு பானுவிடமிருந்து அறிவுறுத்தல்கள் கிடைத்தன. மதிப்பீடுகள் வேறுபட்டாலும், அங்கே பெட்டிக்குள் சுமார் 800 வரையான போராளிகள் இருந்ததாகவும் அவர்களில் கிட்டத்தட்ட அரைவாசிப் பேர் ஏற்கனவே ஓரளவு கடுமையாக அல்லது மிகக் கடுமையாக காயமடைந்திருந்ததாக W1 கூறுகின்றார்.

அடுத்த நாள் 27 மார்ச் இல் இலங்கை இராணுவத்தினர் தற்போதிருந்த தமது முன்னரங்க நிலைகளை மீளநிலைநிறுத்திக் கொண்டதாக தகவல்கள் கூறுகின்றன. இலங்கை விமானப்படையினருடன் இணைந்து கிட்டத்தட்ட 2 சதுர கிலோமீற்றர்கள் ஆக சுருங்கியிருந்த இந்தப் பெட்டி மீது இராணுவம் குண்டு வீச்சுக்களையும் எறிகணைத் தாக்குதல்களையும் சரமாரியாக மேற்கொண்டது. LTTE இனரின் எதிர்ப்பினை முறியடிப்பதற்கே இந்த தந்திரம் கையாளப்பட்டது. பெட்டிக்கு உள்ளே முன்னேறிச் செல்வதற்கான எந்த முயற்சியையும் இராணுவம் உடனடியாக மேற்கொள்ளவில்லை. W1 விரைவில் காயமடைந்தவர்களுடன் இணைந்து கொள்கின்றார். அவர் சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகி கழுத்து எலும்பில் காயமடைந்தார், இதன் பின்னர் இவரால் இலகுவாக அவரது தலையை அசைக்க முடியவில்லை. இரத்தப் போக்கினை நிறுத்துவதற்கு காயத்திற்கு கட்டுப்போடும் துணியைத் (Bandage) தவிர அவரது காயத்திற்கு சிகிச்சை அளிப்பதற்கு எந்த மருந்துப் பொருட்களும் இருக்கவில்லை, இவர் காயத்துடன் நடமாடக்கூடியவர்களில் ஒருவராக இருந்தார். மருத்துவ சேவைகள் அப்போதும் வழங்கப்பட்டு வந்த பெட்டியின் மேற்குப் பக்கத்திற்கு மாற்றப்பட்டார்.

இந்தப் பெட்டிக்குள் இன்னுமொரு போராளியான W3 உம் காயமடைந்து இருந்தார், இவர் முன்னர் தொடையில் ஏற்பட்ட குண்டுச் சிதறல் காயத்துடன் தெற்குப் பக்கமாக இருந்த பாதுகாப்பு முன்னரங்கப் பகுதியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டிருந்தார். காயமடைந்து மூன்று நாட்களின் பின்னர், முற்றாகக் குணமடையாத அவரை அவரது தளபதியான கேணல் கடாபி மீண்டும் வருமாறு

அழைத்தார், சரியாக அந்த நேரத்தில் தான் அவரும் அதற்குள் மாட்டிக் கொண்டார். இந்தக் கட்டத்திற்கு முன்னர் போராளிகளுக்கு ஒழுங்காக வெடிபொருட்கள் வழங்கப்பட்டு வந்ததுடக் போதியளவு உலர் உணவு மற்றும் டின்களில் அடைக்கப்பட்ட உணவுகளும் வழங்கப்பட்டதாக அவர் பதிவு செய்கிறார். விநியோக வழிகள் முடக்கப்பட்டதை தொடர்ந்து நிலைமை அவ்வாறிருக்கவில்லை, அவரும் அவரது சகாக்களும் மெல்ல மெல்ல பட்டினியால் வாட ஆரம்பித்தார்கள். கொத்துக் குண்டுகள் மற்றும் வெள்ளை பொஸ்பரசு போன்றன இலங்கை அரசாங்கத்தின் ஆயுதக் களஞ்சியத்தில் புதிதானவை இல்லை என்றாலும் இவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினை W3 இப்போது தான் முதல் தடவையாக நேரடியாக முகங்கொடுக்கின்றார்,

பெப்ரவரியில் இருந்து நிலக்கண்ணிகளை வீதிகளில் அகற்றுவதில் இருந்து மருத்துவ உதவிக்காக பேராளிகளை கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டு வந்த W4 10 பேரைக் கொண்ட தனது மருத்துவக் குழுவுடன் அந்தப் பெட்டிக்குள் அகப்பட்டுக் கொண்டார். அவரும் அவரது குழுவைச் சேர்ந்த மூன்று பேரும் புதுக்குடியிருப்பு பக்கமாக இருந்த அப்போதைய முன்னரங்க நிலையில் இருந்த ஒரு பதுங்கு குழியில் கேணல் கீர்த்தியால் விடப்பட்டார்கள். அங்கே அவர்கள் W4 விபரிப்பது போல் 'புதிதாக இணைந்தவர்களுடன்' அல்லது ஆதரவுக் குழுக்களுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களுடன் இணைந்து பணியாற்றினார்கள். அதாவது இந்தச் சமரினை எதிர்கொண்ட இவர்களில் போர் அனுபவம் கொண்டவர்களாக எவரும் இருக்கவில்லை.

சாட்சி ஏழு (W7)[30] ஒரு பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவப் பணியாளர் இவர் ஆனந்தபுரத்திற்கு அனுப்பப்பட்ட எட்டுப் பேரைக் கொண்ட அணியில் இடம்பெற்றிருந்தார், இவர்கள் அனைவரும் இறுதியில் பெட்டிக்குள் அகப்பட்டுக் கொண்டார்கள். நடைமுறையில் இந்தப் பெட்டி மூடப்பட்ட நிலையில், அரசாங்கப்படைகள் கட்டவிழ்த்து விட்ட ஒரு பாரிய தாக்குதலினை விபரிக்கின்றார். எறிகணைகளின் ஊடாகவும் விமானங்களின் ஊடாகவும் கொத்துக் குண்டுகள் மழைபோல் பொழியப்பட்டதாக W7 பதிவு செய்கின்றார், ஆனால் பொஸ்பரஸ் அல்லாத அவருக்கு தெரிந்திராத சில வகையான குண்டுகள் வழமைக்கு மாறான பயங்கரமான பாதிப்புக்களை அவர் சிகிச்சையளித்தவர்கள் மீது ஏற்படுத்தியிருந்ததாகவும் அவர் கூறுகிறார்.[31] ஒரு வகையான குண்டு 'மூச்சுத் திணறலினை ஏற்படுத்தியதுடன் அந்த பிரதேசமே கறுப்பாக மாறியது அத்துடன் அங்கிருந்தவர்களினால் பார்க்க முடியவில்லை, சிலர் மயங்கி விழுந்தார்கள். அது அவர்களின் பார்வையை மறைத்தது'. இதனை சற்றுத் தொலைவில் இருந்து அவரே அனுபவித்ததுடன் அவருக்கும் இதுபோன்ற பாதிப்புகள் இருந்தன'. அவரால் அடையாளங்காண முடியாத இன்னுமொருவகைக் குண்டு எறிகணைகள் மூலம் வீசப்பட்டதாகவும் அது புகையினை வெளியிட்டதுடன் வழமையான எறிகணை தாக்குதல்களில் ஏற்படுவதை விட ஒரு வித்தியாசமான முறையில் அதனால் பாதிக்கப்பட்டவகள் மீது எரிகாயங்களை ஏற்படுத்தியது.[32] LTTE போராளிகளுடன் தனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்த வரை தேங்காய் எடுப்பதற்காக வந்த குறைந்தது 20 பொதுமக்கள் இந்தப் பெட்டிக்குள் அகப்பட்டுக் கொண்டதாக W7 குறிப்பிடுகின்றார். அவர்களும் காயப்படத் தொடங்கிய வேளையில் போரில் நேரடியாக ஈடுபடாத இவ்வாறான பலருக்கு அவர் சிகிச்சையளித்திருந்தார்.[33]

நீதித்துறையில் இருந்து சண்டைக்கு மாற்றப்பட்டு சில வாரங்களுக்கு முன்னர் கைவிடப்பட்ட புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு குழந்தையைப் பிரசவிப்பதற்காக தனது மனைவியைக் கொண்டு சென்ற W6 இந்த பெட்டிக்கு அனுப்பப்பட்டிருந்தார். W7 இனைப் போல் இராணுவம் அடையாளங் காணமுடியாத இரசாயன ஆயுதங்களை ஆனந்தபுரம் சமரில் பயன்படுத்தியதாகப் பதிவு செய்கின்றார். அவர் 'புகைக்குண்டு போன்ற ஒருவகையான குண்டைப்' பற்றி விபரிக்கின்றார். அது காற்றில் கலந்தவுடன் தோலில் கொப்பளங்களை உருவாக்கியதாகவும் அவை பல மணி நேரத்தில் வீங்கி நீர் நிரம்பிய பலூன்கள் போன்று வந்து பின்னர் அவை வெடித்து தாங்க முடியாத அளவுக்கு காயத்தை ஏற்படுத்தியதாக விபரிக்கின்றார். அத்துடன் W7 போல், W6 இரண்டாவதாக ஒரு வேறுபட்ட வகையான வெடிகுண்டினைப் பற்றி விபரிக்கின்றார். அது கிட்டத்தட்ட 50 மீற்றர் சுற்றுவட்டாரத்திலுள்ள எல்லா ஒட்சிசனையும் உறிஞ்சி எடுத்தது. 'குண்டு வெடித்த பின்னர் பல LTTE போராளிகள் அவர்களது உடல்களில் காயங்கள் எதுவுமின்றி சிறு சிறு குழுக்களாக உயிரிழந்தார்கள்'.[34] மார்ச் பிற்பகுதியில் வயிற்றிலும் குடலிலும் காயங்களுடன் ஆனந்தபுரத்தில் இருந்து அகற்றப்பட்ட W5 இதனை உறுதி செய்கின்றார். அவர் ஒரு நிரம்பி வழியும் கள மருத்துவமனையில் தறப்பாளில் கிடக்கும் போது தொலைதொடர்புக் கருவியில் புகையை ஏற்படுத்தும் இந்தக் குண்டுகள் 'தொண்டைக்குள் எரியும் உணர்வினையும் மூச்சுத்திணறலையும்' ஏற்படுத்துவதாக பெட்டிக்குள் இருந்து சொல்லப்பட்ட சம்பவங்களை ஆற்றாமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

திங்கட்கிழமை, 30 மார்ச்: ஆனந்தபுரம் பெட்டியை முற்றாகத் துண்டிப்பதற்கு இலங்கை இராணுவம் இருபற முற்றுகைத் தாக்குதல் நகர்வினை மேற்கொண்டது

திங்கட்கிழமை, 30 மார்சில், புதுக்குடியிருப்பில் இருந்து புறப்பட்ட இலங்கை இராணுவத்தின் வெவ்வேறான அணிகள் ஆனந்தபுரத்தின் தெற்குப் பக்கமாகவும் வடக்குப் பக்கமாகவும் சென்றதுடன் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் பாதுகாப்பு நிலைகளுக்குள் முன்னேறிச் சென்றார்கள். இது ஒரு பாரிய இரு புறத்தாக்குதல் நகர்வாக திட்டமிடப்பட்டிருந்தது. இவ்வாறு சென்ற படையினரில் பிரிகேடியர் சவேந்திர சில்வாவின் 58 ஆவது படைப்பிரிவின் படையணி வடக்கிலும், ஜெனரல் கமால் குணரட்ணாவின் 53 ஆவது படையணியுடன் இணைந்து செயற்பட்ட கேணல் ரவிப்பிரிய தலைமையிலான நடவடிக்கைப் படைப் பிரிவு 8 இன் படையினரும் தெற்கிலும் இடம்பெற்றிருந்தார்கள். இந்த நடவடிக்கை வெற்றியளித்தால் இது பெட்டியை இறுக்கமாக சுற்றிவளைப்பதுடன் அதனை முற்றுமுழுவதுமாக துண்டித்துவிடும். சில ஆயிரம் LTTE போராளிகள் பல மடங்கு எண்ணிக்கையான அரசாங்கப்படைகளுடன் போரிட்ட பலத்த சண்டைக்கு மத்தியில் இரண்டு முனைகளிலும் இலங்கை இராணுவத்தினர் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிச் சென்றார்கள். இறுதியில் பெட்டியின் மறுபுறத்தினைச் சுற்றிச் சென்று ஆனந்தபுரத்திற்கும் அதற்கு அப்பாலுள்ள கடற்கரை மணல் முனையிலுள்ள 'பாதுகாப்பு வலையதிற்கும்' இடையில் ஒரு இடத்தில் இரண்டு அணிகளும் சந்தித்துக் கொள்வதே இந்த நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது.[35]

செவ்வாய்க்கிழமை 31 மார்ச்: கேணல் லோறன்ஸ் இன் ஒருங்கிணைப்புடனான உடைப்பு முயற்சி தோல்வியடைகிறது.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை, தொடையிலுள்ள காயம் குணமடையாத போதிலும் கேணல் கடாபியின் பொறுப்பின் கீழ் இருந்த தென் பகுதிக்கு திரும்பி வந்த W3 புதுமாத்தளனைச் சென்றடையும் நோக்கில் போராளிகள் மேற்கொண்ட ஒரு உடைப்பு முயற்சியில் பங்கெடுத்தார். கேணல் லோறன்சின் தலைமையின்கீழ்வெளியில்இருந்துஇலங்கைஇராணுவத்தின் பாதுகாப்பு நிலைகளை உடைத்துக் கொண்டு உள்நுழையும் தாக்குதல் முயற்சியில் இவரும் இவரது சக போராளிகளும் ஒருங்கிணைந்து செயற்பட்டார்கள். அப்போது இம்ரான் பாண்டியன் படையணிக்குப் பொறுப்பாக இருந்த கேணல் வேலவனின் பொறுப்பின் கீழ் இருந்த ஒரு அணி கேணல் லோறன்சிற்கு கனரக ஆயுதச் கூட்டு ஆதரவை வழங்கியது. ஆயினும் வேலவனின் அணியினரால் பயன்படுத்தப்பட்ட பல்குழல் எறிகணை செலுத்தி பழுதடைந்து விட்டது. பத்து நாட்களின் பின்னர் இது பற்றி எழுதிய ஆய்வாளர் டி.பி.எஸ் ஜெயராஜ், ஐந்து வாகனங்களில் நகர்ந்த 120 போராளிகளைக் கொண்ட கேணல் லோறன்சின் படை எதிரியின் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்டு எரிந்து அழிந்ததாகவும் அதில் இருந்த பெரும்பாலானோர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார்.[36] இந்த முயற்சி தோல்லி அடைந்ததுடன் கேணல் லோறன்சும் காயமடைந்தார்.[37] பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கை அன்றைய தினம் 'பலத்த சண்டை' இடம்பெற்றதாக குறிப்பிட்டதுடன் இரணைப்பாலைப் பகுதியில் 'படையினர் LTTE இனரின் பாதுகாப்பு நிலைகளை பலவீனமாக் முயற்சியில் ஈடுபட்டதாக' அறிவித்தது அத்துடன் ஒரு குறைவான இழப்பு மதிப்பீட்டைக் கொடுத்து: '20 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் 11 பேர் காயமடைந்ததாகவும்' அது தெரிவித்தது.

புதன்கிழமை, 01 ஏப்ரல்: கடும் இழப்புக்களுடன் தோல்வியில் முடிந்த இரண்டாவது உடைப்பு முயற்சி

புதன்கிழமை, 01 ஏப்ரலில், வெடிபொருட்களின் அளவு வேகமாக குறைந்து சென்ற நிலையில், பெட்டியின் தென்கிழக்குப் பதியிலுள்ள ஆனந்தபுரம் பாடசாலையில் இரண்டாவது தப்பிச்செல்லும் முயற்சியினை மேற்கொள்வதற்காக பேராளிகள் மீள ஒன்றுதிரண்டார்கள். மீண்டும் ஒருமுறை W3 உம் இவ்வாறு ஒன்று திரண்டவர்களில் இருந்தார். ஆனால் இந்த புதிய முயற்சி ஒரு பேராபத்தினை நோக்கியதாக இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இராணுவத்தின் இருபக்க வழி முற்றுகை நகர்வு புதிய உடைப்பினை மேற்கொள்ள திட்டமிடப்பட்ட அதே இடத்தையே வெற்றிகரமாக சுற்றிவளைத்து மூடியிருந்து.[38] 01 ஏப்பிரலுக்கான பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கை கடுமையான சண்டையின் பின்னர் இரண்டு முனைகளிலிருந்தும் முன்னேறிச் சுற்றிவளைத்த அதன்படைகள் இறுதியாக ஆனந்தபுரத்தின் கிழக்குப் பக்கமாகவுள்ள பச்சைப்புல்மோட்டையில் சந்தித்ததுடன் நண்பகலில் பச்சைப்புல்மோட்டைச் சந்தியையும் கைப்பற்றியதாக கூறுகின்றது. இதனுடன், பெட்டிக்கு உள்ளே வருவதற்கும் வெளியே செல்வதற்கும் ஆபத்தானதாக இருந்த LTTE இன் இறுதி வழியை இலங்கை இராணுவம் துண்டித்தது இது முக்கியமான மேலதிக விநியோகப்பொருட்கள் அல்லது மேலதிக ஆளணிகள் பற்றிய இறுதி நம்பிக்கையை முடிவுக்கு கொண்டுவந்தது. தோல்வியில் முடிந்த தமது தப்பிச் செல்லும் முயற்சியை மேற்கொண்டு வந்த LTTE இனரும் இலங்கை இராணுவத்தினரும் வெறும் 20 மீட்டர்கள் தூரத்தில் நேருக்கு நேரே முட்டிக் கொண்டார்கள். எண்ணிக்கையில் மேலோங்கியிருந்த இந்த அரசாங்கப் படைகள் கண்ணீர் புகைக்குண்டு என்று W3 கருதியதைக் கொண்டு தாக்குதலை மேற்கொண்டு தமது ஆயுதத் தாக்குதல்களையும் அதிகரித்தார்கள். இந்தப் புகைக் குண்டுகள் 'மூச்சுத்திணறலையும் கண் எரிவையும் ஏற்படுத்தியது'. உடைத்துக் கொண்டு தப்பிச் செல்லும் முயற்சி தோல்வியடைந்தது மட்டுமல்லாமல் LTTE ஐந்து தளபதிகளையும் இழந்தது. கேணல் மணிவண்ணன், LTTE இன் ஆட்டிலறி அணியின் பொறுப்பாளர் உடனடியாகவே கொல்லப்பட்டார். LTTE இன் மிகவும் மூத்த பெண் தளபதிகளான கேணல்கள் துர்க்கா மற்றும் விதுசா கடுமையாகக் காயமடைந்து சயனைட் அருந்தினார்கள், அதேவேளையில் மேலும் இரண்டு தளபதிகள் காயமடைந்து இதனால் மறுநாள் இறந்தார்கள்.

தமிழில் ஒலிபெருக்கிகளில் இலங்கை இராணுவத்தினர் உயிர்தப்பியவர்களை தமது ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு சரணடையுமாறு கேட்டுக் கொண்டார்கள். W3 ஞாபகப்படுத்திக் கொள்வது போல், 'எங்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் எனவும் தண்டனை இல்லாமல் மீளஒன்றிணைவதற்கு அனுமதிக்கப்படுவோம்' எனவும் நம்புவதற்கு சாத்தியமில்லாத செய்தி விடுக்கப்பட்டது. இந்த அழைப்பினை எவரும் ஏற்றுக் கொண்டதற்கான எந்த ஆதாரத்தையும் அவர் காணவில்லை, பதிலாக அவரும் அவரது தோழர்களும் தமது பாதுகாப்பு நிலைகளுக்குச் சென்றார்கள். பெரும் எண்ணிக்கையான தமது சகபோராளிகளின் இழப்பினால் W3 மிகவும் மனச்சோர்வடைந்து இருந்ததுடன் அவரே சயனைட் அருந்துவதற்கு முடிவெடுத்திருந்தார். ஆனால் அவரது பொறுப்பாளர்களில் ஒருவர் அவருடன் கதைத்து அவரைத் தடுத்து நிறுத்தினார்.[39]

அன்றைய தினம், கட்டளை மையம் இருந்த பெட்டிக்கு எதிர்ப்பக்கமாக இலங்கை இராணுவத்தின் வேறு படைகள் இன்னும் நெருக்கமாக முன்னேறி வந்தமையால் LTTE இன் தலைமை மீதான நம்பிக்கை குலையத் தொடங்கியது. வீதியிலுள்ள நிலக்கண்ணிகளை அகற்றும் பணியிலிருந்து காயப்பட்டவர்களை மருத்துவ உதவிக்காக வெளியேற்றும் பணிக்கு மாற்றப்பட்டு பின்னர் ஒரு பாதுகாப்பு பதுங்குகுழியில் பணிக்கு விடப்பட்ட W4 எதிர்த்து நிற்கும் படைகளுக்கு எதிராக மூத்ததளபதி பானு சரியான முறையில் எதிர்த்தாக்குதலை நடாத்தாமை குறித்து இளம்தளபதிகள் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்ததாகக் கூறுகின்றார். தளபதி பானுவுக்கும் அவரது இரண்டாம் நிலைத்தளபதி தீபனுக்கும் இடையில் தந்திரங்கள் மற்றும் மூலோபாயங்கள் குறித்து ஒருவிதமான முறுகல்நிலை காணப்பட்டது. கேணல் தீபன் கடுமையாகக் காயமடைந்து கட்டளை மையத்திற்கு கொண்டுவரப்பட்ட போது தளபதி பானு அவ்வளவிற்கு பெரிதாக அக்கறை காட்டாமல் நடந்து கொண்டார் என்பதை W4 விபரிக்கின்றார். அதேவேளை பானு அப்போது கேணல் கடாபியை தனக்கு அடுத்த நிலையிலுள்ள தளபதியாக பதவி உயர்த்தியிருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் அந்த அன்று அல்லது அடுத்தநாள் W4 காயமடைந்தார். கேணல் கீர்த்தி அவரை மேற்கு பாதுகாப்பு முன்னணி நிலையில் மேலதிக போராளிகளுடன் இணைத்து விட்டார் அத்துடன் அங்கு நெருக்கமாக இடம்பெற்ற மோதலில் வீசப்பட்ட கைக்குண்டின் சிதறலில் காயமடைந்தார்.

பின்னர் த நேசன் என்ற செய்தித்தாளின் கட்டுரையில் ஆளில்லா வேவு விமானங்கள் மற்றும் Beechcraft உளவு விமானங்களின் 'முழு நேர வான் கண்காணிப்பு' அரசாங்கத்தின் தரைப் படையினருக்கு பெட்டிக்குள்ளே இருக்கும் LTTE இனரை இலக்கு வைக்க 'எவ்வளவு பெரிய உதவியாக' இருந்தது என்பது பற்றி தொகுத்துக் கூறியது. அதேவேளை, 'புலிகள் உடைத்துக் கொண்டு வெளியே செல்வதை அல்லது உடைத்துக் கொண்டு சுற்றிவளைக்கப்பட்டுள்ள பகுதிக்குள் வருவதை தடுக்கும் வகையில் விசேட படைகள் தமது பெயர் போன 8 பேரைக் கொண்ட அணிகளை அந்த பிரதேசம் முழுவதிலும் பணியில் ஈடுபடுத்தியிருந்தார்கள்'.[40]

வியாழக்கிழமை மாலை, 2 ஏப்பிரல்: கடுமையாகக் காயமடைந்தவர்களை கணணி நிலையத்திற்கு நகர்த்தும் போராளிகள்

வியாழக்கிழமை 2 ஏப்பிரல் பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கை, இலங்கை இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல் நடவடிக்கையின் காரணமாக இன்னும் 'கடுமையான சண்டை' இடம்பெற்று வருவதாக பதிவு செய்தது. அன்றைய தினம் மாலையில் அரசாங்கப் படைகள் தடுத்து நிறுத்த முடியாத படி நெருக்கமாக முன்னேறி வந்திருந்த நிலையில், உயிர்தப்பியிருந்த LTTE கட்டளைத் தலைமை 'கடுமையான மற்றும் பாரிய' காயங்களுடன் இருந்த கிட்டத்தட்ட 350 போராளிகளை பெட்டியின் மேற்குப் பக்கமாக இருந்த மருத்துவ நிலையங்களில் இருந்து கிழக்கு மூலைக்கு நகர்த்துவதற்கு முடிவெடுத்தது. ஏனைய 10–15 வரையான போராளிகளுடன் இணைந்து இந்தப் பணிக்கு உதவுமாறு கேட்டு W4 இற்கு கேணல் கீர்த்தி தற்போது மீண்டும் புதிய பணி வழங்கினார். காயமடைந்தவர்கள் LTTE இனரின் கணணி நிலையம் இருந்த வளவுக்கும் இடமாற்றம் செய்யப்பட இருந்தார்கள். இது ஒரு தேவாலயத்திற்கு முன்பாகவும் தளபதிகள் திட்டமிட்ட பாரிய வெளியேற்றத்திற்கான இடத்திற்கு அருகிலும் அமைந்திருந்தது. முன்னர் வகுப்பறையாகப் பயன்படுத்தப்பட்ட கணனி நிலையத்தின் பிரதான கட்டிடம் கொங்கிறீட் இனால் ஆன கூரையைக் கொண்டிருந்தது, இங்கு கடுமையாக காயமடைந்தவர்கள் நெருக்கமாக வைக்கப்பட அதேவேளையில் கடுமையாக காயப்படாதவர்கள் அதற்கு அருகில் இருந்த கட்டிடங்கள் மற்றும் பதுங்கு குழிகளுக்குள் பிரித்து விடப்பட்டனர். இந்த வளவு மாமரங்களினால் ஓரளவிற்கு சூழப்பட்டிருந்து அத்துடன் தகரவேலிக்குப் பின்னால் அமைந்திருந்தது. இது எறிகணைகள் மற்றும் சினைப்பர் தாக்குதல்களில் இருந்து ஓரளவிற்குப் பாதுகாப்பை வழங்கியது.

இருள்வதற்கு முன்னர் ஆரம்பித்து, பல மணித்தியாலங்களாக அங்கும் இங்குமாக W4 ஏற்கனவே கிட்டத்தட்ட கடுமையாகக் காயமடைந்த 60 பேரை இடமாற்றம் செய்ய உதவினார் அப்போது அவர் நேரடித் தாக்குதலுக்கு இலக்காகி குண்டுச் சிதறல் தலையில் பட்டு அது அவரது பார்வை நரம்புக்கு அருகில் வரை சென்றது. அவர் கிழக்குப் பக்கத்திற்குச் சென்று அங்கு தங்கினார். தப்பிச் செல்வதற்காக கரும்புலிகள் தாக்குதல் நடத்தி ஒரு புதிய பாதையை திறக்கப்போகிறார்கள்

என்ற வதந்திகள் பரவியது.[41]

வியாழன் இரவு முழுவதும் - வெள்ளிக்கிழமை, 2 - 3 ஏப்பிரல்: வெளியேற்றப்பட்ட கட்டளை மையம்

மேற்குப் பகுதியில் அந்த வியாழக்கிழமை மாலையில் W1 இருந்தார், இவர் முன்பு LTTE இனரின் ஆயுதங்களை நிர்வகிப்பதில் கரிசனையாக இருந்தார். அத்துடன் புதிதாக சேர்க்கப்பட்ட 100 பெண் போராளிகளுடன் பெட்டிக்குள் ஊடுருவி இருந்ததுடன் பின்னர் சினைப்பர் தாக்குதலில் கழுத்து எலும்பில் காயமடைந்திருந்தார். கட்டளை மையத்தினையும் அருகிலிருந்த மருத்துவ நிலையங்களையும் கைவிட்டு எல்லாப் போராளிகளையும் கணனிப்பிரிவின் முகாமிற்கு பின்வாங்கி வருமாறு LTTE தலைவர் பிரபாகரனிடமிருந்து ஒரு செய்தி வந்தது. கணனிப்பிரிவின் வளாகத்திற்கு அருகிலுள்ள ஒரு பதுங்குகுழி உள்ள இடத்தில் ஒன்றுகூடுமாறு உயிர்தப்பி காயத்துடன் நடமாடக் கூடியவர்களாக இருந்தவர்களுக்கு சொல்லப்பட்டது, அத்துடன் சிலர் தேவாலயத்தினுள் தஞ்சம் புகுந்தார்கள்.[42]

அது ஒரு பயங்கரமான நகர்வாக இருந்தது. வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில், 03 ஏப்பிரலில், தளபதி பானு மற்றும் படுகாயமடைந்திருந்தும் நடமாடக்கூடியதாக இருந்த கேணல் தீபன் மற்றும் கேணல்களான கடாபி மற்றும் மணிவண்ணன் ஆகியோருடன் பின்வாங்கிச் செல்வதற்கு W1 தனது சொந்த அணியைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்களுடனும் புதிதாக இணைக்கப்பட்ட பெண் போராளிகளுடனும் ஒருங்கிணைந்து செயற்பட்டார். ஆனால் அவர்கள் வெளியே செல்ல ஆரம்பித்த வேளையில், பரசூட்டுகளில் இருந்து தொங்கவிடப்பட்ட உயர் ஒளிச் செறிவைக் கொண்ட மெதுவாக கீழே விழும் ஒளியான பரா வெளிச்சத்தினால் திடீரென வானமே நிரம்பியது. இதனுடன் அவர்கள் கடுமையான எறிகணைத் தாக்குதலுக்கு உட்பட்டார்கள். பல போராளிகள் காயமடைந்தனர், சிலர் படுகாயமடைந்தனர். ஏனையவர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்கள். இயலுமானவர்கள் பாதுகாப்பு தேடி எல்லா திசைகளிலும் கட்டுப்பாடில்லாமல் ஓடினார்கள்.

தளபதி பானுவை அதன்பின்னர் W1 காணமுடியவில்லை, ஆனால் கேணல்களான தீபன், கடாபி, மணிவண்ணன் மற்றும் 30 வேறு போராளிகளுடன் தானும் பாதுகாப்பு தேடி ஒரு இடத்தில் இருந்தார். தாக்குதல்களில் சற்று நின்றிருந்த வேளையில், கேணல் கடாபி தனக்கு சுற்றியுள்ள இடங்களை நன்றாக தெரியும் எனவும் தான் அவர்களை முன்னோக்கி கொண்டு செல்லமுடியம் எனவும் கூறி அதற்கு தலைமை தாங்கினார். அவர்களது குழு மீண்டும் புறப்பட்ட வேளையில் W1 மற்றும் அவரது சகதோழர்கள் ஆங்காங்கே கிடந்த இறந்த போராளிகளிடமிருந்து ஏதாவது ஆயுதங்கள் மற்றும் மிஞ்சிக்கிடந்த ரவைகளை மீட்டெடுப்பதற்காக குனிந்தபடி கிட்டத்தட்ட 100 மீறறர்கள் சத்தம் போடால் எந்த தடையுமின்றி சென்றார்கள்.

திடீரென இலங்கை இராணுவம் ஒரு புதிய, மோசமான, மிக நெருக்கமான தாக்குதலை மேற்கொண்டது. இந்தச் சம்பவம் பற்றிய விபரங்களில் சற்று வேறுபாடுகள் இருப்பினும், ஒரு காலில் எலும்பு உடைவு ஏற்பட்டதுடன் கேணல் கடாபி கடுமையான காயத்திற்குள்ளானதாக அனைவரும் கூறுகிறார்கள். இதற்கிடையில் கேணல் மணிவண்ணன் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். W1, கேணல் தீபன் மற்றும் ஏனையவர்கள் நிலையெடுத்து இலங்கை இராணுவத்தினர் பின்வாங்கிச் செல்லும் வரை சண்டை பிடித்தார்கள், அப்போது காயமடைந்த கடாபியை மீட்டு வருமாறு கேணல் தீபன் போராளிகளுக்கு உத்தரவிட்டார். இப்போது கடாபியை அவரது மெய்ப்பாதுகாவலர்கள் நோயாளர்களைக் காவும் படுக்கையில் காவிக் கொண்டு வந்தார்கள், உயிர்தப்பிய குழுவினர் தொடர்ந்தும் கிழக்கு மூலையை நோக்கி நகர்ந்து சென்றார்கள், அவர்கள் நகர்ந்து செல்லும் போது மீண்டும் கடுமையான தாக்குதல்களுக்கு இலக்கானதாகவும் கேணல் கடாபியின் மெய்ப்பாதுகாவலர்கள் தாக்குலுக்கு இலக்காகி அவர்களில் எவருமே உயிர்தப்பவில்லை என இந்தச் சம்பவம் பற்றிய விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

விடிகாலைக்கு முன்னர், வெள்ளிக்கிழமை, 3 ஏப்பிரல்: மீண்டும் தோல்வியடைந்த பெட்டியை உடைத்து உள் நுழைவதற்கான கேணல் லோறன்சின் முயற்சி

தனது தலையிலும் பார்வை நரம்பிலும் கடுமையாக காயமடைந்த W4, எஞ்சியிருந்த LTTE இனர் அனைவரும் பெட்டியின் மேற்குப் பக்கத்தில் இருந்து பின்வாங்கிச் செல்லும் வேளையில் இரவு முழுவதும் கிழக்குப் பகுதியிலே இருந்தார். கரும்புலிகள் வந்துகொண்டிருப்பதாக வதந்திகளும் பரவின, இலங்கை இராணுவத்தின் நிலைகள் மீது இரண்டாவது தாக்குதல் முயற்சியினை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுக் கொண்டிருந்ததாகச் சொல்லப்பட்ட கேணல் லோறன்சிற்காக அவரும் ஏனையவர்களும் காத்துக் கொண்டிருந்தார்கள். வடகிழக்குப் பக்கமாக அவர் வருவார் என W4 கேள்விப்பட்டிருந்தார். கேணல் லோறன்ஸ் உடைத்து உள்ளே நுழைய முடிந்தால், போராளிகள் பெட்டிக்கு உள்ளே இருந்து சண்டை பிடித்துக் கொண்டு சென்று அவரைச் சந்திக்க வேண்டும். அதாவது காயப்பட்டவர்களை அப்புறப்படுத்தக் கூடியதாக வாகனங்கள் சென்று வரக்கூடிய ஒரு பாதுகாப்பான வெளியேற்றப்பாதையை உருவாக்குவதே திட்டமாக இருந்தது.

ஒரு சந்தப்பத்தில் வெள்ளிக்கிழமை அதிகாலையில், தீபனின் தலைமையின் கீழ் இருந்த W1 மற்றும் அவரது குழுவில் எஞ்சியிருந்தவர்களும் இறுதியாக கணனி நிலையத்திற்கு அருகில் இருந்த ஒன்று சேரும் இடத்தினை வந்தடைந்தார்கள், இந்தக் கணனி நிலையத்திற்குள்ளே கடுமையாகக் காயப்பட்டவர்கள் வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களுடன் இப்போது கடுமையாகக் காயமடைந்த கேணல் கடாபியையும் அங்கு வைத்திருந்தார்கள். W1 கழுத்து எலும்பில் காயமடைந்திருந்த போதிலும், ஆனந்தபுரம் சந்தையடியில் ஒரு பாதுகாப்பு நிலைகளை மீளமைத்து இலங்கை இராணுவத்தின் முன்னேற்றத்தினை அவதானிக்குமாறு W1 இற்கு கேணல் தீபன் கட்டளையிட்டார். கேணல் அன்ரன் மற்றும் ஏனைய போராளிகளையும் இவருடன் கேணல் தீபன் அனுப்பி வைத்தார். W1 அறிந்தவரை, வெளியில் இருந்து இலங்கை இராணுவத்தின் முன்னரங்க நிலைகளை உடைப்பதற்கான LTTE இன் முயற்சியினை புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மான் ஒருங்கிணைத்து வந்தார். இதைவிட, கரும்புலிகளால் குறுகிய நேரத்திற்கு முன்னரங்க நிலைகளை உடைக்க முடிந்தது என்றும் அறிந்தார். ஆனால் அவ்வாறிருந்தும், இலங்கை இராணுவத்தினர் பதில் தாக்குதலை மேற்கொண்டு அந்த உடைப்பு இடம்பெற்ற பகுதியை விரைவாகவே மூடிவிட்டார்கள் அத்துடன் கேணல் லோறன்சின் முயற்சிகளும் மீண்டும் ஒருமுறை தோல்வியில் முடிந்தன. வெள்ளிக்கிழமை காலை 5 மணியளவில், பெட்டியினுள் எஞ்சியிருந்த அனைத்து LTTE படைகளும் தமது இறுதியான தற்காப்பு நிலைகளுக்குச் சென்றிருந்ததுடன் W4 இன் கணிப்பீட்டின் படி இரண்டு கால்பந்து மைதானத்தின் அளவினை விட சிறியதாக சுருங்கிய ஒரு நிலப்பரப்பினுள் அவர்கள் அகப்பட்டிருந்தார்கள்.

கேணல் கடாபி கடுமையாக காயமடைந்ததை அடுத்து, பெட்டிக்குள் எஞ்சியிருந்த சண்டைப் போராளிகளுக்கு கேணல் கீர்த்தி இரண்டாவது நிலைக் கட்டளைத் தளபதியானார். ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில் அந்த அன்று இரவு பொட்டு அம்மான் கேணல் கீர்த்தியைத் தொடர்பு கொண்டு முழுமையான கட்டளைப் பொறுப்பினை ஏற்குமாறு கேட்டார். இந்த நடவடிக்கையினை தான் நேரடியாகப் பார்த்ததாகவும் அத்துடன் தனக்குப் பதிலாக இன்னுமொருவர் நியமிக்கப்படுவதை தளபதி பானு ஏற்றுக் கொண்டதாகவும் W4 தெரிவிக்கிறார்.

வெள்ளிக்கிழமை 3 ஏப்பிரல் பகல் நேரம் அரசாங்கப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதல்கள்

3 ஏப்பிரல் வெள்ளிக்கிழமை அதிகாலையில் இருந்து கனமழை பெய்தமையால் இராணுவம் தனது தாக்குதல்களை குறைப்பது பற்றி சிறிது நேரம் பரிசீலித்தாக பின்னர் தகவல்கள் தெரிவித்தன.[43] ஆனால் காலை விடிந்த நிலையில் காலை 6 மணியளவில் அதன் படைகள் பெட்டியின் மீது ஒரு மூர்க்கத்தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டதுடன் LTTE இனரின் கைவிடப்பட்ட கட்டளை மையத்தினையும் கைப்பற்றி கிழக்குப் பக்கமாக நெருங்கிவந்தார்கள். இலங்கைப் படைகள் கணனி நிலையத்திற்கு கிழக்காக இருந்த ஒரு பாடசாலையையும் கைப்பற்றினார்கள். இராணுவத்தினர் கிட்டத்தட்ட 300 மீற்றர்கள் தூரத்தில் வந்த நிலையில் விரைவிலே எஞ்சியிருந்த LTTE இனரின் நிலைகளும் ஒரு இறுக்கமான முற்றுகைக்குள் வந்தன.

இலங்கை இராணுவப் படைகள் தமது எதிரியை இப்போது மிக நெருங்கிய தூரத்தில் சுற்றிவளைத்து நின்றமையால் அவர்கள் தமது இலக்குகளைத் தவறவிடுதல், தாக்குதல் இலக்குகளை கடந்து செல்லுதல் மற்றும் மற்றைய பக்கத்திலுள்ள அவர்களது சொந்தப் படையினரையே தாக்குதல் போன்ற ஆபத்துக்களை கருத்திற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார்கள். கணனி நிலையம் இருந்த வளாகத்தினைச் சுற்றியிருந்த தகர வேலி அவர்கள் பார்க்கமுடியாதபடி ஒரு மறைப்பாக இருந்தது. ஆனால், W4 கூறியதற்கு இணங்க, இலங்கை இராணுவத்தின் குறிபார்த்து சுடுபவர்கள் எது அசைந்தாலும் அதன் மீது தாக்குதலை நடாத்தியமையால் நகர்ந்த LTTE போராளிகள் ஒரு இடத்திலேயே அசையாமல் முடக்கப்பட்டனர். எதிரியின் தாக்குதல் மற்றும் மேலே வேவு விமானங்களின் கண்காணிப்பு ஆகியவற்றுக்கு மத்தியில், அந்த வெள்ளிக்கிழமை பகல் நேரங்களில் இயன்ற அளவிற்கு தமது நிலைகளைத் தற்காத்துக் கொண்டு, பின்னர் யார் உயிருடன் எஞ்சியிருந்தாலும் இருளும் வரை காத்திருப்பதை தவிர அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியாத நிலை காணப்பட்டது. 'இன்று அதிகாலையில் ஆனந்தபுரத்தில் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த பகுதிக்குள் 58ஆவது படைப்பிரிவின் இராணுவத்தினர் முன்னேறிச் சென்றதாகவும் மாலைவரை நீடித்த மிக நெருக்கமான நேரடி மோதலில் பயங்கரவாதிகள் துடைத்து அழிக்கப்பட்டதாக' பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கை ஒன்று பதிவு செய்தது. எவ்வாறியினும் இவ்வாறு கூறப்பட்ட 'துடைத்து அழிப்பு' என்பது உண்மை இல்லை. 'அரசாங்கப் படைகளால் தீவிரமான ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல்களும் அத்துடன் இலங்கை விமானப்படையினரால் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களும் நடாத்தப்பட்டதாக' இரண்டாவது நிலைமை அறிக்கை மாலையில் தெரிவித்தது.

வெள்ளிக்கிழமை இரவு - சனிக்கிழமை, 3-4 ஏப்பிரல்: தப்பிச் செல்வதற்கான இறுதி முயற்சிகள்

வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில், W4 விபரித்ததைப் போல், ஒட்டுமொத்தத்தில் எமக்கு எந்த தெரிவுகளும் இல்லை என்பதைத் தெரியப்படுத்த கேணல் கீர்த்தி ஒரு சந்திப்பிற்கு அழைப்பு விடுத்திருந்தார். அதில் 20 பேர் கலந்து கொண்டார்கள். இயலக்கூடியவர்கள் குழுக்களை அமைத்து தாங்களே சண்டைபிடித்து பெட்டிக்கு வெளியே செல்வதே ஒரே ஒரு தெரிவாக இருந்தது. அவர்கள் இதனைக் கிட்டத்தட்ட ஒன்றரை மணிநேரத்திற்குள் தொடங்க வேண்டும். மருத்துவநிலை மோசமடைந்திருந்த கேணல்களான கடாபி மற்றும் தீபன் உட்பட படுகாயமடைந்தவர்கள் அனைவரும் அங்கேயே விட்டுச் செல்லப்படுவார்கள்.[44]

இந்த முடிவு பற்றி மோசமாகக் காயமடைந்தவர்களுக்கு அறிவிப்பதற்காக கேணல் கீர்த்தி கணனி நிலையத்தின் பிரதான கட்டிடத்திற்குள் நுழைந்தார். அவருடன் சென்ற W4 தெரிவிப்பதன் படி, அதற்குள் வைக்கப்பட்டவர்களில் பலர் தம்மைச் சுட்டுக் கொல்லுமாறும் அல்லது சயனைட் வில்லைகளைத் தருமாறும் கெஞ்சினார்கள். இந்த சயனைட் வில்லைகள் LTTE இனர் வழக்கமாகப் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்றாக இருந்தாலும், அவை ஒரு போராளி எதிரியிடம் பிடிபடும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு காரணங்களுக்காகவே வழங்கப்படுகின்றன:[45] நிச்சயமாக அவை நோவைக் குறைப்பதற்காக பயன்படுத்தப்படுபவை அல்ல, இதனால் தான் கடுமையாகக் காயப்படுபவர்களிடமிருந்து அவை அகற்றப்படுவது வழக்கம்.[46] கேணல் கீர்த்தி அவரிடம் கெஞ்சியவர்களிடம் இயலுமானவர்கள் தற்போது உடைத்துக் கொண்டு வெளியே போக முயற்சிப்பார்கள் பின்னர் திரும்பி வந்து அவர்களைக் காப்பாற்றுவார்கள் என்று கூறினார். அவருக்கு முன்னால் காயமடைந்த 350 தொடக்கம் 400 வரை எண்ணிக்கையையான ஆண்கள் மற்றும் பெண்கள் இருந்தார்கள் என W4 மதிப்பிட்டுள்ளார்.

பச்சைப் புல்மோட்டை ஊடாக வட- கிழக்கிற்கு தப்பித்தல்

தற்போது விட்டுச் செல்லவுள்ள அதே போராளிகளை நகர்த்தும் போது W4 இற்கு அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்த போதிலும் அவர் காயப்பட்டவர்களில் மிகவும் இயலுமான ஒருவராகவே கருதப்பட்டார். தனக்கு முன்னாலுள்ள உயிராபத்தான சவாலைப் பற்றி சிந்தித்த அதேவேளையில் 150 பேரைக் கொண்ட அவரது நிலக்கண்ணிகளை அகற்றும் பிரிவில் இருந்து இன்னும் உயிர்தப்பியுள்ள இரண்டு போராளிகளில் ஒருவராக தான் இருந்ததாக அவர் குறிப்பிடுகிறார். வடகிழக்குப் பக்கத்தில் முன்னர் ஆனந்தபுரத்தின் பிரதான விநியோகப் பாதையாக இருந்த வழி ஊடாக உடைத்துச் செல்ல முயற்சிக்கப் போகும் கிட்டத்தட்ட 30 பேரைக் கொண்ட தாக்குதல் நடாத்தி தப்பிச் செல்லும் குழுவில் அவர் இப்போது உள்ளடக்கப்பட்டிருந்தார். அவர்களில் சிலராவது ஏனையவர்கள் பின்தொடர்ந்து செல்வதற்கான ஒரு வழியைத் திறப்பார்கள் என அந்தக் குழுவிலுள்ளவர்கள் நம்பினார்கள். சாள்ஸ் அன்ரனிப் படையணியால் வடக்கில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்புத் தாக்குதல் உதவியளிக்ககூடிய வகையில் இலங்கை இராணுவத்தின் 50 மில்லி மீற்றர் பீரங்கி நிலைகளில் ஒன்றினை இல்லாமல் செய்த போதிலும் ஊடுருவிச் செல்வதற்கு இலங்கை இராணுவத்தின் ஐந்து அல்லது ஆறு பாதுகாப்பு வேலிகள் இருந்ததுடன் இராணுவத்தின் பராலைட்டுக்கள் அந்தப் பிரதேசத்தினை மிகவும் ஒளிமயமாக்கியது.

முதல் இரண்டு பாதுகாப்பு வேலிகளும் மிகவும் இறுக்கமானதாக இருந்தன என W4 பதிவு செய்கிறார்: அந்தக்குழு முன்னேறிச் செல்கையில் சிறு சிறு குழுக்களாகப் பிளவுபட்டு அதன் முன்னேற்றம் நிச்சயமற்றதாகவும் ஒழுங்கற்றதாகவும் இருந்ததுடன் சில போராளிகள் எதிர்த்தாக்குதலினால் பின்வாங்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அவர்களைத் தலைமை தாங்கிச் சென்ற தளபதி முழங்காலுக்கு கீழ் தனது கால் ஒன்றினை இழந்ததுடன் மற்றைய காலிலும் படுகாயமடைந்தார். W4 அவரது பார்வை நரம்பிற்கு அருகிலுருந்த குண்டுத் சிதறலை விட தற்போது காலில் துப்பாக்கிச் சூட்டுக்கும் உள்ளானார் அத்துடன் அவர்களது குழுவில் இருந்த மேலும் பலர் இவ்வாறு காயமடைந்தார்கள். தெரியாத எண்ணிக்கையான போராளிகளை களத்தில் விட்டுச் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் எஞ்சியுள்ள உறுப்பினர்கள் இலங்கை இராணுவத்தின் மூன்றாவது பாதுகாப்பு வேலியினை அடைந்திருந்த நேரத்தில் உண்மையாக என்ன நடைபெறுகிறது என இராணுவத்தினரே குழம்பமடைந்து இருந்தது போல் தெரிந்தது. இரண்டு தரப்பைச் சேர்ந்த போர் வீரர்களும் ஒன்றுடன் ஒன்று கலந்து விட்ட நிலையில் தமது சொந்த ஆட்களையே கொன்றுவிடுவோம் என்ற அச்சத்தில் இராணுவத்தினர் தாக்குதல் நடாத்துவதற்கு தயங்கினார்கள். W4 மற்றும் அவருடன் இன்னும் நின்ற மற்றையவர்களும் இந்தச் சந்தப்பத்தினைப் பயன்படுத்தி மற்றைய பக்கத்திற்கு முன்னேறிச் செல்லக் கூடியதாக இருந்ததுடன் 4 ஏப்பிரல் சனிக்கிழமை காலை 2 மணியளவில் வெளியே வந்தார்கள். மீண்டும் LTTE இன் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிக்குள் திரும்பிய நிலையில் அவர் மோட்டார் சைக்களில் இரட்டைவாய்க்காலுக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டார்.

பொக்கனையிலுள்ள களமருத்துவமனைக்கு வெளியே குடலில் காயங்களுடன் தறப்பாளில் கிடந்தபடி தொலைதொடர்பு சாதனத்தில் புதிய தகவல்களைக் கேட்டுக் கொண்டிருந்த W5 இறுதியில் எல்லாப் போராளிகளும் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்த செய்தியைக் கேட்டார். இறுதியில் ஆனந்தபுரம் பெட்டிக்குள் சண்டை இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில், பெட்டிக்கு வெளியில் இருந்து

கேணல் லோறன்ஸ் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பு நிலைகளை ஊடறுத்தார் இதனால் தப்பிச் செல்வதற்கான இந்த வழியை தற்காலிகமாக பாதுகாப்பானதாக இருந்தது.

இந்த வழியில் இப்போது தப்பியவர்களில் ஒருவர் W6, இவர் முன்பு LTTE இன் நீதித்துறையில் இருந்ததுடன் கைவிடப்பட்ட புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அருகே கொஞ்ச நாட்களுக்கு முன்னர் பிறந்த பிள்ளைக்கு தகப்பன் ஆனார். கட்டளை மையத்திற்கு அருகில் அவர் காலில் துப்பாக்கி சூடுபட்டு காயமடைந்திருந்தார், ஆனால் காயத்துடன் நடக்ககூடியவராக இருந்ததுடன் தளபதி பானுவின் தலைமையில் பச்சைப்புல்மோட்டைப் பகுதிக்கு ஊடாக தப்பிவந்தார். W6 இன் மதிப்பீட்டின் படி அவர் இருந்த குழுவில் கிட்டத்தட்ட 75 பேர் காயமடைந்து இருந்தார்கள் இருந்த போதிலும் தளபதி பானு காயமடையவில்லை. தான் பெட்டியை விட்டு வெளியேறும் முன்னர் கேணல்களான தீபன் மற்றும் கடாபி ஆகியோரின் இறந்த உடல்களைப் பார்த்தாக கூறுகிறார்.[47] ஆயினும் இதை உறுதிப்படுத்துவதற்கான நேரடி ஆதாரங்கள் எதுவும் இல்லாத நிலையில் கேணல் கடாபி இந்தக் கட்டத்தில் இறந்து விட்டார் என்பது பொதுவாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.[48]

LTTE இன் களமருத்துவரான W7 எட்டுப் பேரைக் கொண்ட தனது அணியுடன் பெட்டிக்கு உள்ளே இரசாயன எரிவுக்கு உள்ளானவர்கள் உட்பட போராளிகளுக்கு முடியுமான அளவுக்கு சிகிச்சை வழங்கி வந்தார். இந்த நேரத்தில் அவரே தோளில் காயமடைந்தார். அவரது அணியைச் சேர்ந்த இரண்டு பேர் இறந்ததுடன் இன்னுமொருவர் 'உயிருடன் பிடிபட்டதாக' அவர் கூறுகிறார். ஆனால், W7 கூட தளபதி பானுவின் கீழ் இருந்த காயங்களுடன் நடக்கக்கூடியவர்களைக் கொண்ட குழுவில் ஒருவராகவும் இருந்தார், அதேவேளையில் அவரும் பச்சைப்புல்மோட்டைக்கு ஊடாக பெட்டியை விட்டுத் தப்பி வந்ததாக கூறுகிறார். ஏனையவர்கள் தெரிவித்த தகவல்களின் படி இந்தக்குழு கேணல் கீர்த்தியுடன் காலை 4.30 மணியளவில் வெளியே வந்தது.[49] W7 கூட்டிச் செல்லப்பட்டு வலைஞன்மடத்தில் இருந்த கள மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டார், சமரில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஒரு போதுமே சரியானமுறையில் குணமடையவில்லை.

கடல்நீரேரிக்கு ஊடாகத் தப்பிச் செல்லுதல்

வெள்ளிக்கிழமை பின்னிரவுக்கும் சனிக்கிழமை அதிகாலைக்கும் இடையில் ஏனைய பேராளிகள் கடல்நீரேரி விழியாக நடந்து சென்று தப்பிச் செல்ல முயற்சி செய்தார்கள், கடுமையான மழை காரணமாக அது கூடுதலான அளவிற்கு சேறும் சகதியுமாக இருந்தது.[50] கேணல் கடாபியின் படையணியைச் சேர்ந்த W3 ஏற்கனவே இரண்டு தடவைகள் தோல்வியில் முடிந்த பெட்டியை உடைத்துச் செல்லும் முயற்சியில் பங்குகொண்டிருந்ததுடன் மூன்று நாட்களுக்கு முன்னர் சயனைட் வில்லையை விழுங்கும் முயற்சியில் இருந்து தடுக்கப்பட்ட இவர் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பு நிலைகளை உடைத்துக் கொண்டு தண்ணீரை நோக்கிச் சென்று அதனைக் கடந்து வடக்கும் நோக்கிச் செல்லும் திட்டத்துடன் முயற்சித்தவர்களில் ஒருவராக இருந்தார். இவ்வாறு செல்லும் வழியில் குறிப்பிட்ட எண்ணிக்கையான போராளிகள் காயமடைந்தனர் அல்லது கொல்லப்பட்டனர். W3 மிகநெருக்கமாக இடம்பெற்ற மோதலில் இடது காலில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கும், கைக்குண்டுச் சிதறல்களால் அவரது நெஞ்சிலும் வயிற்றிலும் ஏற்பட்ட காயங்கள் உட்பட பல காயங்களுக்குள்ளானார். அவரும் அவரது சக போராளிகளும் இலங்கை இராணுவத்தின் முதலாவது பாதுகாப்பு நிலைகளைத் தாக்கும் போது அங்கிருந்த இராணுவத்தினர் அவர்களை திரும்பி பின்னால் கலைத்து வந்தார்கள்.

தப்பிச் சென்ற போராளிகளில் சிலருக்கு அவர்கள் கடல்நீரேரியினை அடைந்த வேளையில் ஆவது வெளியில் இருந்து LTTE இன் உதவி கிடைத்தது. ஆனால் தண்ணீரைக் கடப்பது என்பது மிகப் பெரிய ஆபத்தானதாக இருந்தது. போர் அனுபவமுள்ள போராளியான W2 காயமடைந்ததையடுத்து பெட்டி துண்டிக்கப்படுவதற்கு முன்னரே வெளியே அனுப்பப்பட்டார். அதன் பின்னர் அவர் உடைத்துக் கொண்டு உள்ளே சென்று அவர்களது சகதோழர்களை மீட்பதற்கு மீண்டும் மீண்டும் முயற்சித்த ஒரு அணியில் இணைக்கப்பட்டார்.

இது இப்போது அவர்களது மூன்றாவது முயற்சி அத்துடன் அவர்கள் கடல் நீரேரியையும் கடந்து சென்றார்கள். அவர்கள் தண்ணீருக்குள் இருந்து வெளியே வந்த போது அவர்களுக்கு மேலே இருந்த காற்று வெள்ளைப் பொஸ்பரசுகள் வெடித்து அதனால் நிரம்பி இருந்ததாகவும் அத்துடன் அவரும் அவரது தோழர்களும் அடையாளம் தெரியாத இரசாயனப் புகையினை வெளியிடும் கொத்துக்குண்டு தாக்குதல்களுக்கும் இலக்கானதாக W2 விபரிக்கின்றார். சற்றுத் தொலைவில், 'சிவப்பு நிறத்தில் எரிந்து கொண்டிருக்கும்' தீயுடன் இரண்டு பெண்கள் அலறியடித்துக் கொண்டு ஓடுவதை அவர் கண்டார். அவருடைய கண்களே எரியத் தொடங்கியதால், அவரைச் சுற்றியிருந்த அனைவரையும் தண்ணீருக்குள் அவர்களாகவே அமிழ்ந்து கொள்ளுமாறு W2 சொன்னார். ஒருவாறு மற்றைய பக்கத்தில் இருந்து வந்த W3 யும் W2 உம் இந்த கடல்நீரேரித் தாக்குதலில் உயிர்பிழைத்து தப்பித்துக் கொண்டாலும் W2 கடுமையான மற்றும் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் இரசாயன காயங்களுக்கு உள்ளானார்.

ஆனந்தபுரம் சந்தையில் W1 ஒரு பாதுகாப்பு நிலையில் இருளுக்குள் அப்போதும் நின்று கொண்டிருந்தார். கடும் சண்டையின் சத்தங்கள் திடீரென நின்ற போது சுற்றி எங்கணும் அசாதாரண அமைதி காணப்பட்டதையடுத்து அவருக்கும் அவருடன் நின்றவர்களுக்கும் சந்தேகம் ஏற்பட்டது. இவருடன் கடமையில் ஈடுபட்டிருந்த கேணல் அன்ரன் இரண்டாவது

போராளியுடன் கணனி நிலையம் இருந்த இடத்திற்கு மெதுவாகப் சென்று பார்த்து விட்டு வரப் போனார். அவர் திரும்பி வந்ததும் மோசமாகக் காயமடைந்தவர்கள் தவிர அனைவரும் போய்விட்டார்கள் என அவர் W1 இடம் சொல்ல ஆரம்பித்த போது கேணல் அன்ரன் ஆர்.பி.ஜி இனால் தாக்கப்பட்டு அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். அத்துடன் அவருக்கு அருகில் நின்ற போராளியின் கையும் இல்லாமற் போனது. விரோதமான படைகளால் சூழப்பட்டிருந்த நிலையில் W1 கைவிடப்பட்டிருப்பதை அறிந்ததும் அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இரகசிய இலக்கங்கள் உட்பட அவரிடம் இருந்த அனைத்து வோக்கி டோக்கி இலக்கங்களும் தொடர்பினை ஏற்படுத்த முயற்சி செய்தார், இறுதியில் அவருடைய அழைப்பிற்கு பதிலளித்த யாரோ ஒருவர் அவரை அங்கிருந்து வெளியேற முயற்சிக்க வேண்டும் எனக் கூறினார். சண்டை பிடித்து வெளியே செல்ல முயற்சிப்பதை தவிர வேறு எதையும் பற்றி W1 இனால் சிந்திக்க முடியவில்லை. அவரே இப்போது கணனி நிலையத்திற்குச் சென்று அங்கு ஓரளவிற்கு நடமாடக்கூடியவர்கள் என்று நம்புபவர்களும், சண்டை பிடிக்கத் தயாரானவர்களும் தன்னுடன் இணைந்து கொள்ளலாம் என அறிவித்தார். முன்னர் W4 கேணல் கீர்த்தியுடன் சென்றவேளையில் அவர்களது எண்ணிக்கை 350–400 என மதிப்பீடு செய்திருந்தார். பெட்டிக்கு வெளியில் மருத்துவ வழங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் கணனி நிலையத்தில் இருந்த வைத்தியர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற அறிக்கைகளின் படி இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 350 ஆக இருந்தது.[51] W1 அங்கு நின்ற வேளையில் அவர் கிட்டத்தட்ட 300 இற்கும் மேற்பட்டவர்களிடத்தில் கதைத்ததாக மதிப்பிடுகின்றார் அத்துடன் இவர்களில் 20 பேர் அவருடன் செல்வதற்கு உடன்பட்டிருந்தார்கள். அவர்கள் உதவியின்றி நடக்கமுடியாதவர்களாக இருந்தார்கள், W1 இனால் பத்து துப்பாக்கிகளை மட்டுமே சேகரிக்ககூடியதாக இருந்தது. இவர்களில் சிலர் இவரது பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர் அவர்களுடன் 10 வருடங்களுக்கு மேலாக இருந்துள்ளார். என்ன விலை கொடுத்தாலும், அவர்களை விட்டுவிட்டு போவதற்கு அவர் தயாராக இருக்கவில்லை. அவர்களும் கூடவே வருவதற்காக அவர்கள் ஊன்றுகோல்களாக பயன்படுத்துவதற்கு தடிகளைச் சேகரித்தார்.

அவர்கள் புறப்பட இருந்த வேளையில், அண்மையில் இவரின் பொறுப்பின் கீழ் இருந்த புதிதாக இணைக்கப்பட்ட 100 பெண்களில் சிலரும் அங்கு காயப்பட்டவர்களில் இருந்தார்கள். இவர்கள் தங்களை விட்டு விட்டுப் போக வேண்டாம் என்று அவரிடம் கெஞ்சி அழத் தொடங்கினார்கள். வெளியே போவதற்கான பாதையைக் கண்டுபிடித்ததும் அவர்களிடம் திரும்பி வருவதாக W1 அவர்களிடம் கூறினார். 'என்னிடம் வேறு எந்த வார்த்தைகளுமே இருக்கவில்லை' என அவர் கவலையுடன் கூறுகிறார்.

W1 மற்றும் அவரது குழுவினர் கடல்நீரேரியை நோக்கி சிரமப்பட்டு நடந்து சென்றார்கள். அவர்கள் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பு நிலைகளைக் கொண்ட முதலாவது வேலியை தாக்கியவேளையில் அந்த மோதல் தீவிர சண்டையாக மாறியது, அத்துடன் அவர்கள் மறுபக்கத்தில் மீளஒன்று சேர்ந்த போது அவர்களில் ஐந்து பேர் மட்டுமே இன்னும் உயிருடன் இருந்தார்கள். இவர்களில் ஒருவர் புலனாய்வுப் பிரிவினைச் சேர்ந்த பெண் போராளி ஆவார். அவர்கள் அங்கிருந்த மூன்று அல்லது மூன்றுக்கும் மேற்பட்ட இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பு வேலிகளுக்கு ஊடாக இவ்வாறு தொடர்ந்தால், அவரும் உயிர் தப்பியுள்ள சில சகபோராளிகள் அனைவரும் இறக்க நேரிடும் என்பது W1 இற்கு தெளிவாகத் தெரிந்தது. அவர்கள் தமது உபாயத்தினை மாற்ற வேண்டியிருந்தது. இங்கே இருந்து இலங்கை இராணுவத்தைக் கடந்து செல்வதற்கு அவர்களிடம் இருந்த எல்லா அனுபவத்தினையும் பாவித்து இராணுவத்தின் பாதுகாப்பு வேலிகளினூடக இரகசியமாகச் செல்ல வேண்டும் என அவர்களிடம் அவர் சொன்னார்.

அவர்கள் அடுத்த இரண்டு பாதுகாப்பு வேலிகளைக் கடந்து செல்லும் அந்த நேரத்தில் W1 இடம் மாத்திரமே ஆயுதம் இருந்தது. அவரது தலையை அசைக்க முடியாதவாறு அவரது கழுத்து எலும்பு உடைந்திருந்த போதும் கூட அவரே குறைந்த காயங்களைக் கொண்டவராக இருந்தார். குறிப்பிட்ட தொலைவில் இருந்து இலங்கை இராணுவப் படைகள் மீது தாக்குதல் நடாத்தி அவர்களை திசை திருப்புவதாக தனது சக தோழர்களுக்கு அவர் கூறினார். அவர் அவ்வாறு செய்த உடனே, அவர்கள் இறுதியாக உள்ள இராணுவ வேலியைக் கடந்து கடல்நீரேரியை நோக்கிச் சென்று அதனைக் கடக்க முயற்சிக்க வேண்டும். ஆச்சரியப்படும் வகையில், நான்கு பேரையும் காப்பாற்றுவதற்கு மட்டும் இந்த தந்திரோபாயத்தினைச் செய்யவில்லை W1 தன்னையும் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது மாத்திரமல்லாமல் பதில் தாக்குதலில் இருந்து தப்பியதுடன் எஞ்சியிருந்த அவரது சிறுகுழுவினை வெற்றிகரமாகவும் பின்தொடர்ந்து சென்றார்.

அந்தன்று இரவு, பொக்கனையில் அவரது தறப்பாளில் கிடந்தபடி புதிய தகவல்களை தொலைதொடர்பு சாதானத்தில் கேட்டுக் கொண்டிருந்த W5 'காயப்பட்டவர்களை அகற்றுவதற்கும் மற்றம் மேலதிக போராளிகளை உதவிக்கு கேட்டும் அவசர அழைப்புக்கள்' எனப் பெட்டியில் இருந்து தகவல்கள் தொடர்ந்தும் வந்து கொண்டிருப்பதை கேட்டுக்கொண்டிருந்தார்.

சனி,4 ஏப்பிரல் பகல் நேரம்: அரசாங்கப் படைகளின் இறுதி தாக்குதல்

இரவு நேரங்களில் நடந்த இந்த தப்பிப்புகளுக்குப் பின்னர் ஆனந்தபுரம் பெட்டிக்குள் என்ன நடந்தது என்பது பற்றிய விளக்கங்களை LTTE இல் இருந்து உயிர்தப்பிய எவருமே வழங்கவில்லை. த நேசன் என்ற பத்திரிகை ஒரு வாரத்தின் பின்னர் வெளியிட்ட ஒரு கட்டுரையில் சனிக்கிழமை அதிகாலையில், 4 ஏப்பிரல் காலை 3 மணிக்கு சமர் இன்னும் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் 'தமது தவிர்க்கமுடியாத முடிவைத் தெரிந்து கொண்ட உயிர்தப்பியுள்ள புலிகள் தம்மைத்தாமே வெடிக்கவைத்து அழித்துக் கொண்டதாக' நம்பிக்கையுடன் கூறுவது போன்ற தொனியில் தெரிவித்தது.[52] எவ்வாறாயினும், பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கைகளில், காலை விடிந்தும் பெட்டிக்குள் இருந்து வந்த LTTE இனரின் எதிர்ப்பு இன்னும் குறைவடையவில்லை எனவும் சண்டை ஞாயிற்றுக்கிழமை விடிகாலைக்கு சற்றுமுன்வரை தொடர்ந்ததாக தகவல் வெளியிட்டது.

அச்சமூட்டும் வகையிலான தனது வெளியேற்றத்தினை மேற்கொள்வதற்கு முடிவெடுக்கும் முன்னர் ஆனந்தபுரம் சந்தையடியிலிருந்த பாதுகாப்பு வேலியில் W1 தனித்து விடப்பட்டதை கருத்தில் கொள்ளும் போது ஏனைய போராளிகளும் இதே போன்றே பல்வேறு பாதுகாப்பு நிலைகளை தக்க வைத்துக் கொள்ள விடப்பட்டிருந்தார்கள் என எண்ணுவது நியானமானதாக தோன்றுகிறது. தப்பிச் செல்ல முயற்சித்து தோற்றுப்போனவர்களில் சிலர் தங்களிடம் எஞ்சியிருந்த சிறியளவான வெடிபொருட்களுடன் தொடர்ந்து சண்டையிடக்கூடியவர்களாக இருந்தார்கள் என்பதற்கும் வாய்புள்ளது இருப்பினும் மிக மிகச் சிறிய அளவிலான வெடிபொருட்களே எஞ்சியிருந்தன என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அடுத்து என்ன நடந்தது என்பதை கூறும் ஒரு இராணுவத்தரப்பு வட்டாரம் பெரும் எண்ணிக்கையான அரசாங்கப்படைகள் பெட்டிக்குள்ளே LTTE இனருடன் தொடர்ந்து சண்டையிட்டதாகவும் கிட்டத்தட்ட 30000 எறிகணைகளை வீசி அவர்களைத் தாக்கியதாகவும் பதிவு செய்கிறது.[53] 'இராணுவத்தினர் கடுமையான தாக்குதலுக்குள்ளான போதும் இராணுவத்தினர் ஒருவாறு தாக்குப்பிடித்து இறுக்கமாக நின்றமையால் எதிரிகளால் பாதுகாப்பு அரண்களை உடைக்கமுடியாமல் இருந்தது' என த நேசன் என்ற நாளிதழ் ஒட்டு மொத்தமான தற்கொலை என்ற தனது சொந்த அறிக்கைக்கு முரண்படும் விதமாக இந்தச் சந்தர்ப்பத்தில் LTTE இனரை ஆக்கிரமிப்பாளர்களாக சித்தரித்தது செய்திவெளியிட்டது.[54] 'இராணுவம் LTTE இனரின் பாதுகாப்பு நிலைகளைத் தாக்கி இன்று காலை (ஏப்பிரல் 4) LTTE பயங்கரவாதிகளிடமிருந்து 130 மில்லி மீற்றர் ஆட்டிலறி ஒன்றினை வெற்றிகரமாக கைப்பற்றியதாக' பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கை ஒன்று மேலும் குறிப்பான புதிய தகவலை வழங்கியது. ஆனால் அதுவும் கூட முடிவாக அமையவில்லை.

ஞாயிற்றுக்கிழமை: 5 ஏப்பிரலும் அதற்குப் பின்னரும்: பெட்டியை ஆக்கிரமித்த இலங்கை இராணுவப் படைகள்

இன்னும் பேராடிக்கொண்டிருந்த கடைசிப் போராளிகளும் இறுதியில் 5 ஏப்பிரல் அன்று காலை 4.30 மணியளவில் 'முற்றிலுமாக தோற்கடிக்கப்பட்டார்கள்'.[55] 01 ஏப்பிரல் புதன்கிழமையில் இருந்து ஆனந்தபுரத்தில் 400 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக நம்பப்படுவதாக அன்றைய தினம் பிற்பகுதியில் பாதுகாப்பமைச்சினால் வழங்கப்பட்ட முதலாவது மதிப்பீடுகள் தெரிவித்தன.[56] எதிர்பார்த்தபடியே தேடி அழிக்கும் நடவடிக்கைகள் குறித்த பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கை அடுத்த நாள் இந்த எண்ணிக்கையை மாற்றி 500 இற்கும் மேற்பட்ட LTTE பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்தது. ஒரு நாளைக்குப் பின்னர் இந்த எண்ணிக்கை மேலும் 625 ஆக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.[57]

நன்கு தகவல் அறிந்தவராக இருந்திருப்பார் என்பதைக் குறிக்கும் பதவிநிலையைக் கொண்டிருந்த W1 இலங்கை இராணுவம் சுற்றிவளைத்த போது அந்தப் பெட்டிக்குள் 800 வரையான போராளிகள் அகப்பட்டு இருந்ததாகவும் இவர்களில் 100 பேர் இவரது அணியைச் சேர்ந்த புதிதாக இணைக்கப்பட்ட பெண்கள் எனவும் தெரிவித்தார். இதற்கிடையில் இறுதியில் கேணல் இதற்கிடையில், கீர்த்தியுடன் நெருக்கமாக இருந்த W4 சனிக்கிழமை, 04 ஏப்பிரல் விடிகாலையில் மொத்தமாக கிட்டத்தட்ட 150 போராளிகள் தப்பிச் செல்ல முடிந்ததாக கூறுகிறார். சரியான எண்ணிக்கைகள் தெரியவில்லை ஆனால், கணக்கில் காட்டப்பட வேண்டிய மீதிப் போராளிகளின் அதாவது பெட்டிக்குள் அங்கேயே விடப்பட்டவர்களின் அண்ணளவான எண்ணிக்கை 650 ஆக இருக்கும். இது 07 ஏப்பிரலில் இறந்ததாக அறிவிக்கப்பட்ட 625 LTTE இனரின் கண்டெடுக்கப்பட்ட இறந்த உடல்கள் பற்றிய இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கையுடன் நெருக்கமாக ஒத்துப்போகிறது.[58] இரண்டு தரப்புக்களும் இந்தளவு உடன்பாட்டைக் காட்டுவதைக் கருத்திற்கொண்டு அவர்களுடைய எண்ணிக்கைகள் போதியளவுக்கு சரியாக உள்ளது என்றும் எடுத்துக் கொண்டால் எவ்வாறு இந்த 600 இற்கும் மேற்பட்ட போராளிகள் உண்மையில் உயிரிழந்தார்கள்?

இந்தச் சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குமூலம் தெளிவுபடுத்துவதைப் போல், இறுதித் தோல்விக்கு முன்னரே இராணுவத்தின் எறிகணைகளாலும், விமானப்படையின் விமானக்குண்டு தாக்குதல்களாலும், பாதுகாப்பு

முன்னரங்க நிலைகளில் நெருக்கமாக இடம்பெற்ற மோதல்களாலும் அல்லது தோல்வியில் முடிவடைந்த தப்பிச் செல்லும் முயற்சிகளின் போது பல LTTE போராளிகள் ஏற்கனவே இறந்திருந்தார்கள். இதனைவிட, எஞ்சியிருந்த போராளிகளில் சிலர் கடைசி 24 மணித்தியாலங்களுக்குள் இடம்பெற்ற சண்டையில் கொல்லப்பட்டிருக்க வேண்டும். 5 ஏப்பிரல், ஞாயிற்றுக்கிழமைக்கான பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கை, இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவு வெற்றி பெற்றதற்கு சற்றுப் பின்னர் புதுக்குடியிருப்புக்கு கிழக்கேயுள்ள போர் முனைக்கு முன்னாலுள்ள பகுதியில் 140 இற்கும் மேற்பட்ட LTTE இனரின் உடல்கள் பரவிக்கிடப்பதை ஏற்கனவே கண்டுபிடித்துள்ளதாக குறிப்பிட்டது, அதே வேளையில் இன்னுமொரு பகுதியில் போர்முனை அறிக்கைகளை மேற்கோள்காட்டி '53 ஆவது படைப்பிரிவின் காலாட் படையினர் போர் வலையத்தில் 210 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகளின் உடல்கள் பரவிக்கிடப்பதை அவதானித்துள்ளதாக உறுதி செய்துள்ளார்கள்.'

260 இற்கும் மேற்பட்ட இறந்த உடல்கள் சிதறிக்கிடப்பதை உடனடியாக கண்டுபிடித்தாலும் ஆரம்ப எண்ணிக்கையான 625–650 இல் இருந்து கணக்குக்கு காட்டப்பட வேண்டியவர்களின் மிகுதி எண்ணிக்கை இன்னும் உயர்வாகவே உள்ளது. அவர்கள் எங்கே? அந்த 600இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையின் பெரும்பாலானவர்கள் கணனிநிலையத்தில் விடப்பட்டுச் செல்லப்பட்ட கடுமையாகக் காயப்பட்ட போராளிகளை கொண்டிருக்க வேண்டும் என்பதே இதற்கான பதிலாக இருக்க வேண்டும்.

கேணல் கீர்த்தி வெளியேறுவதற்கான உரையை அவர்களுக்கு ஆற்றும் போது இந்தக் காயப்பட்ட போராளிகள் தம்மை தாமே கொல்வதற்கு ஏதாவது வழங்கப்பட வேண்டும் எனக் கெஞ்சினார்கள் என W4 கூறுகிறார். W4 இனையே அவரது சயனைட் வில்லையை வழங்குமாறு கெஞ்சினார்கள். ஆனால் இந்தக் கெஞ்சுதல்கள் வீணாகின. இதற்கிடையில், 20 பேரைக் கொண்ட அவரது இறுதி முயற்சியாக தப்பிச் செல்லும் அணிக்கு ஆட்களை ஒன்று சேர்த்த போது சில மணித்தியாலங்களுக்கு முன்னர் இதே காயப்பட்ட போராளிகளைப் பார்த்த W1 'நான் அந்த இடத்தை விட்டுச் சென்ற போது காயமடைந்தவர்கள் உயிருடன் இருந்தார்கள்' என எஞ்சியிருந்தவர்கள் பற்றி அவர் பதிவு செய்கிறார். அவர்களிடம் எந்த துப்பாக்கிகளோ அல்லது வெடிமருந்துகளோ அல்லது சயனைட்டோ இருக்கவில்லை'. மீண்டும் இங்கே உட்கருத்து என்னவென்றால் இந்த ஆண்கள், பெண்களிடம் ஏதாவது ஆயுதங்கள் இருந்திருந்தால் அவர்கள் அவற்றை தம்மீதே பயன்படுத்தியிருப்பார்கள். ஆகவே அவர்கள் பெரியளவில் காயப்பட்டு அசைய முடியாதவர்களாக மட்டும் அல்லாமல் முற்றிலும் தற்காப்பு அற்றவர்களாகவும் அத்துடன் உயிருடனும் இருந்துள்ளார்கள்.

கிடைக்கக் கூடியதாகவுள்ள பாதுகாப்பு அமைச்சின் நிலைமை அறிக்கைகள் மற்றும் அறிக்கைகள் 5 ஏப்பிரல் விடிகாலையளவில் ஆனந்தபுரத்தின் இறுதி சதுரக்கிலோ மீற்றர் பகுதிக்குள் நுழைந்த இராணுவத்தினர் ஒரே இடத்தில் ஒன்றாக நெருக்கி வைக்கப்பட்டிருந்த கடுமையாகக் காயமடைந்த 300 இற்கும் மேற்பட்ட LTTE போராளிகள் கண்டுபிடித்தது பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. எனவே எவ்வாறு இராணுவத்தின் தேடி அழிக்கும் நடவடிக்கைகளில் 600 இற்கும் மேற்பட்ட இறந்த உடல்கள் கிடைத்தன: அதாவது இதே எண்ணிக்கையானவர்களைத் தான் விட்டு விட்டு வந்ததாக LTTE இன் சாட்சிகள் ஒத்துக் கொள்கின்றன. இராணுவம் வெற்றி பெற்றவர்களாக உள்ளே சென்று, பின்னர் தாம் தோற்கடித்தவர்களாக கூறும் போராளிகளில் கிட்டத்தட்ட அரைவாசிப் பேரை உடனடியான ஒரு ஒட்டுமொத்த படுகொலைக்கு உட்படுத்துவதே இந்த எண்ணிக்கைகள் சரியானதாக இருக்கச் செய்ய சாத்தியமான ஒரே வழியாகும்.[59]

LTTE உறுப்பினர்களும் இதுவே நிச்சயமாக நடந்திருக்கும் என்பதை விளங்கிக் கொண்டுள்ளார்கள். கணனி நிலையத்தின் கட்டிடத்திற்குள் விடப்பட்ட 300 இற்கும் மேற்பட்டவர்களில் 30 இற்கும் மேற்பட்டவர்களை தனக்கு தனிப்பட்ட ரீதியாகத் தெரியும் என W4 பதிவு செய்கிறார். அவர்களுடன் பயிற்சி பெற்றுக் கொண்டதுடன் அவர்களது குடும்பங்களையும் தெரியும், அத்துடன் 'அவர்கள் ஒரு போதுமே திரும்பி வரவில்லை என எனக்குத் தெரியும்' என அவர் கூறுகின்றார். 'அவர்கள் அனைவரையும் கொல்லுவார்கள் என நாங்கள் ஒரு போதும் நினைக்கவில்லை', ஆனால் அவர்கள் படுகொலை செய்யப்பட்டது தான் இதற்கான ஒரே ஒரு விளக்கம்'. என அவர் மேலும் கூறுகிறார். இதே விடயம் தொடர்பில் 'எவரும் உயிர் தப்பியமாக நான் அறியவே இல்லை' என W1 தெரிவிக்கிறார், அதேவேளையில் ஆனந்தபுரத்திற்குள் இருந்தவர்களுடன் தொடர்பில் இருந்த ஒரு மருத்துவ இணைப்பாளர் ஒருவர் தப்பி வந்தவர்கள் விட்டு விட்டு வரும்போது உயிருடன் இருந்த காயப்பட்ட எவருமே மீண்டும் கண்ணில் படவில்லை அத்துடன் அவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள் எனவே நம்பப்படுகிறது' என கூறுகிறார்.[60] 'நாங்கள் விட்டு விட்டு வந்த எஞ்சியிருந்த காயப்பட்ட போராளிகள் உயிருடன் எரிக்கப்பட்டதாக தான் பின்னர் அறிந்து கொண்டதாக' W4 மேலும் தெரிவிக்கிறார்.

5 ஏப்பிரல் 2009, ஞாயிற்றுக்கிழமை இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் முதன்மைச் செய்தித் தொகுப்பில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட காணொளிப் பதிவு பாரிய தீயின் காரணமாக இன்னும் புகை வந்த வண்ணம் கருகிய நிலையில் காணப்படும் கணனிநிலையத்தின் பிரதான கட்டிடத்தினை காட்டுகிறது.[61] அதற்குள்ளே விட்டுச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இதுமட்டும் உறுதிப்படுத்துவதாக இல்லாவிட்டாலும், இந்தக்காணொளியில்பேசும்செய்தியாளர் 'புதுக்குடியிருப்புக்கான இறுதிச் சமரின் போது பெரும் எண்ணிக்கையான LTTE பயங்கரவாதிகள் கொல்லப்பட்டது இங்குதான்' எனக் கூறுகிறார். கொங்கிறீட்டினால் ஆன

கூரையைக் கொண்டுள்ள இந்தக் கட்டடத்திற்கு அருகே ஒரு இடத்தில் அகப்படச் செய்யும் வகையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமையால் பயங்கரவாதிகளால் தப்பிச் செல்ல முடியவில்லை. இராணுவம் பயங்கரவாதிகளை துரத்திச் சென்று அழிக்கமுடிந்தது'. ஐந்து நாட்களின் பின்னர் இறந்தவர்களில், 40 இறந்த உடல்களைக் கருகிய நிலையில் போராளிகள் பதுங்கியிருந்த இரண்டு சிறிய கட்டிடங்களுக்குள் கண்டெடுத்தாக உறுதிப்படுத்தப்படாத வட்டாரங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை ஆய்வாளர் டி.பி.எஸ் ஜெயராஜ் தெரிவித்தார். இந்த இரண்டு விளக்கங்களும் மிகவும் இருண்ட ஒரு உண்மைமையே சுட்டிக்காட்டுகின்றன. இவர்கள் பதுங்கியிருந்து சண்டையில் ஈடுபட்ட போராளிகளும் இல்லை அல்லது அவர்களில் வெறுமனவே 40 பேர் மட்டும் இருக்கவுமில்லை. இதன் பின்னர் நீண்ட வரிசைகளில் அடுக்கி வைக்கப்பட்ட இறந்த உடல்களைக் காட்டும் பாதுகாப்பமைச்சினால் வெளியிடப்பட்ட புகைப்படங்கள் இறந்த உடல்களில் பல 'மோசமான நிலையில்'[62] இருந்திருப்தைக் காட்டின என்பதையும் ஜெயராஜ் குறிப்பிடுகின்றார், அத்துடன் பாதுகாப்பு தரப்பு 'இந்தக் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்திருந்தாலும் கூட', இதைத் தொடர்ந்து 'அவரசமாக' இந்த உடல்கள் தகனம் செய்யப்பட்டமை இந்த உடல்கள் மீது இரசயான ஆயுதங்களைக் கொண்டு நடாத்திய தாக்குதல்களுக்கான ஆதாரங்களை மறைப்பதற்கு இராணுவம் விரும்பியது என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கணனி நிலையத்தில் இறுதியாக நடந்த சம்பவங்கள் பற்றிய LTTE இனரின் பதிவுகளில் ஒரு பெயர் மீண்டும் மீண்டும் இடம்பெறுகிறது. தளபதிகளான பானு மற்றும் கீர்த்தி ஆகியோருடன் காயமடைந்தும் நடக்ககூடியவர்களில் ஒருவராக தப்பி வந்த W6 காயமடைந்த போராளிகளை 'தனது நோயாளிகளை விட்டுச் செல்ல மறுத்த' சத்தியா என்றழைக்கப்பட்ட ஒரு வைத்தியரின் பராமரிப்பில் விட்டுவிட்டு வந்ததாகப் பதிவு செய்கிறார். களமருத்துவரான W7, தனது எட்டுப் பேரைக் கொண்ட தனது அணியில் இருவர் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் உயிருடன் பிடிபட்டதாகவும் கூறிய போது அவரும் வைத்தியர் சத்தியாவை பற்றிக் குறிப்பிடுகிறார். இலங்கை இராணுவம் வைத்தியர் சத்தியாவைப் பிடித்ததாகவும், LTTE இனரின் பல்வேறு இறந்த உடல்களை அடையாளங்காண்பதற்கு இராணுவம் முதலில் அவரைப் பயன்படுத்திய போதிலும் பின்னர் அவர் 'காணாமற்போய்விட்டார்' என W7 குறிப்பிடுகின்றார். பெட்டிக்குள்ளே இருந்த மருத்துவப் போராளிகளுடன் 3 ஏப்பிரல் வரை தொலைதொடர்புக் கருவியில் தொடர்பை வைத்திருந்த மருத்துவ வழங்கல் பணியில் ஈடுபட்ட போராளி[63] 'LTTE இனரால் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு வைத்தியரான சத்தியா சமரில் கொல்லப்பட்டதாக' தெரிவிக்கின்றார். அவர் முதலில் LTTE இன் தளபதிகளை அடையாளங்காட்டப் பயன்படுத்தப்பட்டாரோ இல்லையோ, 06 ஏப்பிரலுக்கான பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கையில் 600 இற்கும் மேற்பட்ட இறந்த உடல்களில் பல 'மூத்த LTTE உறுப்பினர்களும்' இருந்தார்கள் எனக் குறிப்பிட்டு அவர்களை தீபன், றூபன், நாகேஸ், கடாபி, விதுசா, துர்க்கா மற்றும் கமலினி என அவர்களது பெயர்களைத் தனது சொந்த உச்சரிப்பில் பட்டியலிட்டு இருந்தது. இவற்றில் சில பெயர்கள் LTTE உறுப்பினர்களால் வழங்கப்பட்ட வாக்குமூலத்தில் நேரடியாகவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த சம்பவங்கள் பற்றிய விபரங்களை வழங்கிய ஏழு சாட்சிகள் குறிப்பிடும் ஏனைய மூத்த LTTE உறுப்பினர்களில் கேணல்களான மணிவண்ணன், அன்ரன், அமுதா[64] மற்றும் ஊடகப் பிரிவினைச் சேர்ந்த சேரலாதன் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

எல்லாப் பக்கங்களிலும் பார்க்கும் போது W4 கூறுவதைப் போல் இறுதிப் போரில் LTTE இனருக்கு ஏற்பட்ட 'முக்கியமான பின்னடைவாக' ஆனந்தபுரத்தில் இடம்பெற்ற சமர் உள்ளது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. கடந்த வாரம், LTTE இனருக்கு மிகமோசமான தோல்வியை ஏற்படுத்தும் வகையில் ஒரு தனிச் சமரில் மிகக் கூடுதலான எண்ணிக்கையான அதன் உறுப்பினர்கள் பாதுகாப்பு படைகளால் கொல்லப்பட்டார்கள் என த நேசன் எனும் செய்தித்தாள் பெருமிதம் கூறியது.[65] ஆனந்தபுரம் சமருக்குப் பின்னர் பல தளபதிகள் இறந்தமையால் LTTE இன் போரிடும் சக்தி என்பது உண்மையில் சிதைவடைந்து விட்டதாக LTTE தரப்பில் போர் அனுபவம் வாய்ந்த போராளி W2 உம் கிட்டத்தட்ட இதையே கூறுகிறார். காயமடைந்து பெட்டி மூடப்படுவதற்கு முன்னர் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட W5 இந்தச் சமரின் பின்னர் LTTE இன் ஆட்டிலறி எறிகணைகளின் கையிருப்பு தீர்ந்துவிட்டது என போராளிகள் மத்தியில் 'கதை அடிபட்டதாக' கூறுகிறார். அதாவது மீள்விநியோகத்திற்கான அழைப்புகளுக்கு ஒரு போதும் பதில் வழங்கப்படுவதில்லை அத்துடன் பெட்டியினுள் LTTE இடம் இருந்த இறுதிக் கையிருப்பில் கிட்டத்தட்ட தனது 90 சதவீதமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை அது இழந்து விட்டது அல்லது கைவிட்டு வந்துவிட்டது என அவர் மதிப்பிடுகின்றார். இன்னுமொரு சாட்சியாளர் கருத்துக் கூறுகையில்: ஆனந்தபுரம் சமருக்குப் பின்னர் LTTE ஒரு வலுவிழந்த படையாக இருந்ததா என்று கேட்டால் ஆனந்தபுரம் சமருக்குப் பின்னர் LTTE ஆனது கூடுதலான தனது அனுபவமுள்ள தளபதிகளையும், தாக்குதல்த்திறனையும் ஆளணியையும் இழந்து விட்டது என்று கூறமுடியும். கடுமையான பட்டினியில் இருந்து அரசாங்கத்தின் தொடர்ச்சியான குண்டுத்தாக்குதல் வரையான பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள எஞ்சியுள்ள போராளிகள் மத்தியில் குழப்பமும் சோர்வும் தற்போது தலைதூக்கத் தொடங்கியுள்ளது, சாதாரண பிரச்சனைகள் போல் தோன்றினாலும் தமது தொலைதொடர்புக் கருவி மூலம் தொடர்பு கொள்ள உதவியிருக்ககூடிய மின்கலங்களின் இருப்பு முடிவடைந்து செல்கின்றமை போன்றன முக்கிய பிரச்சினைகளாக இருந்தன.

உள்நாட்டுப் போரின் முடிவு

05 ஏப்பிரல் இல் ஆனந்தபுரம் சமரில் தோல்வியடைந்தமை LTTE இனரின் தோல்வியைத் தெளிவாக சமிக்கை காட்டியிருந்தாலும் உள்நாட்டுப் போர் உடனடியாகவே முடிவுக்கு வரவில்லை. அடுத்து வந்த ஆறு வாரங்கள் அரசாங்கப் படைகள் ஆயிரக்கணக்கான மக்கள் நெருக்கமாக அடைபட்டிருந்த இருந்த மணல் முனைப்பகுதி மீது தரை மற்றும் வான் தாக்குதல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டார்கள். உண்மையில் பாதுகாப்பு வலையங்கள் மீதும் இந்த மணல்முனைப் பகுதியில் ஆங்காங்கே இருந்த மருத்துவ நிலையங்கள் மீதும் தாக்குதல்களை நடாத்தி அங்கிருந்தவர்களுக்கு அதாவது பொதுமக்களுக்கும் அல்லது பொதுமக்கள் அல்லாதவர்களுக்கும் பரவலான காயங்களையும் பல மரணங்களையும் ஏற்படுத்தினார்கள் என வேறு இடங்களில் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது. LTTE இன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்ந்தும் எதிர்ப்பைக் காட்டி வந்தார், ஆனால் 18 மே இல் அவர் கொல்லப்பட்டு விட்டதாக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனையடுத்து, இறுதியில் உள்நாட்டுப் போர் முடிந்து விட்டதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

ஆனந்தபுர சமருக்கு சில நாட்களின் பின்னர் மீண்டும் விரிவான வகையில் ஆவணப்படுத்தப்பட்டிருப்பதைப் போல ஒழுங்கமைக்கப்பட்ட ஒழுங்கிய வழிகளின் ஊடாக அந்த மணல்முனையை விட்டு வெளியேறுவதற்கு முயற்சித்த பாதிக்கப்பட்ட மற்றும் பட்டினியால் வாடிக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது பல்வேறு தாக்குதல்களை மேற்கொண்டும் கண்மூடித்தனமான கொலைகளையும் புரிந்தது. உயிர் தப்பிய LTTE போராளிகள் தமது சீருடைகள், இராணுவத் தகடுகள் மற்றும் அடையாளங்களை களைந்து விட்டு ஏனைய மக்களும் கலப்பதற்கு முயன்றார்கள், ஆனாலும் ஒரு பொதுமகனைப் போல் தோற்றமளிப்பது எந்த வகையிலும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாக இருக்கவில்லை.

மேலே வழங்கப்பட்டுள்ள சம்பவங்கள் பற்றிய விபரங்களை வழங்கிய ஆனந்தபுரச் சமரில் நேரடியாக உயிர்தப்பியவர்களைப் பொறுத்தவரை, அந்த இறுதிச் சண்டையும், அடுத்த ஆறு வாரங்களுக்கு மேலாக இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட தொடர்ச்சியான குண்டுத்தாக்குதல்களும் உள்நாட்டுப் போரின் இறுதியான உளப்பாதிப்பாக இருக்கமாட்டாது. பல LTTE போராளிகள் அல்லது LTTE என மக்கள் நினைத்தவர்கள் பொதுமக்களின் பெரிய வரிசைகளில் இருந்து இழுத்தெடுக்கப்பட்டு பிடிக்கப்பட்ட இடத்தில் அல்லது சரணடைந்த இடத்தில் காணாமல் ஆக்கப்பட்டார்கள். ஏனையவர்கள் தன்னிச்சையான முறையில் தடுத்து வைக்கப்பட்டு நீடித்த சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார்கள் அத்துடன் அவர்கள் தப்பிச் செல்லமுன்னர் அல்லது இறுதியில் விடுவிக்கப்பட முன்னர் எந்த வித வழக்கு விசாரணைகளும் இன்றி மிக அடிப்படை வசதிகளைக் கொண்ட சிறைமுகாம்களில் பல வருடங்களாக வைக்கப்பட்டார்கள்.

பகுதி ஒன்று - இறுதிக்குறிப்புக்கள்

1. பெப்ரவரி 5 மற்றும் 6 2009 இற்கான MOD இன் நிலைமை அறிக்கைகள் அத்துடன் இங்கு அல்லது இதற்கு அருகிலுள்ள F-7 மற்றும் MiG-27 போர் விமானங்கள் பயன்படுத்தப்பட்டதையும் குறிப்பிடுகிறது. பக்கம் 27 இனைப் பார்க்கவும், அடிக்குறிப்பு 76: https://itjpsl.com/assets/shavendra-Silva_-final-dossier.pdf
2. பல்வேறு பாதுகாப்பமைச்சின் அறிக்கைகளுக்கு 2009 இணைப்பைப் பார்க்கவும் see Annexure 2, p115 and ff: https://itjpsl.com/assets/shavendra-Silva_-final-dossier.pdf; see also 'Blacklight Arrow': blog, 2009.
3. சாட்சி ஒன்று (W1)-ITJP இன் சாட்சி இலக்கம் W381.
4. சாட்சி இரண்டு (W2) - ITJP இன் சாட்சி இலக்கம் W382.
5. W1
6. W3
7. W1
8. W3/W4
9. W1
10. பிற் குறிப்பு: ஆனந்தபுரத்தில் போரிட்டபோது கேணல் பதவி வகித்த விடுதலைப் புலிகளின் தளபதிகளான தீபன், காடாபி, மணிவண்ணன், துர்கா மற்றும் விதுசா ஆகியோர், அவர்களின் மரணத்திற்குப் பின்னர் பிரிகேடியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டனர்.
11. சாட்சி மூன்று (W3) -ITJP இன் சாட்சி இலக்கம் W85.
12. W1
13. ITJP இன் சாட்சி இலக்கம் W200 வழங்கிய தகவலைப் பார்க்கவும்
14. இவற்றிற்கும், தொடர்ந்து வெளியிடப்பட்ட பாதுகாப்பு அமைச்சகத்தின் புதிய தகவல்கள் மற்றும் நிலைமை அறிக்கைகளுக்கும், இணைப்பு 2 இனைப் பார்க்கவும, p115 and ff: https://itjpsl.com/assets/shavendra-Silva_-final-dossier.pdf
15. சாட்சி நான்கு (W4)- ITJP இன் சாட்சி இலக்கம் W200.
16. W5
17. சாட்சி ஐந்து (W5) -ITJP இன் சாட்சி இலக்கம் W397.
18. சாட்சி ஆறு (W6) - ITJP இன் சாட்சி இலக்கம் W112.
19. புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீதான தாக்குதல்களுக்காக பக்கம் 18 இனைப் பார்க்கவும் and ff: https://itjpsl.com/assets/shavendra-Silva_-final-dossier.pdf
20. ITJP இன் சாட்சி இலக்கம் W310.
21. சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் (RDHS) முல்லைத்தீவு மாவட்டம் சுகாதார அமைச்சுக்கு, 15 பெப்ரவரி 2009, பார்க்கவும்: https://www.tamilguardian.com/content/lack-antibiotics-force-doctors-re-amputate-patients-vanni
22. மேலதிக தகவல்களுக்கு ITJP இன் சாட்சி இலக்கம் W310 இனைப் பாக்கவும்
23. p46: https://itjpsl.com/assets/shavendra-Silva_-final-dossier.pdf
24. W5

25. போரின் இறுதிக்கட்டத்தில் அரசுப் படைகளால் மருத்துவமனைகள் மீது நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதல்கள் குறித்த விரிவான தகவல்களுக்கு, பார்க்கவும்: https://itjpsl.com/assets/shavendra-Silva_-final-dossier.pdf

26. The Nation, ஞாயிறு 12 ஏப்பிரல் 2009.

27. ITJP இன் சாட்சி இலக்கம் W375 இனைப் பார்க்கவும்

28. W3

29. W4

30. சாட்சி ஏழு (W7) - ITJP இன் சாட்சி இலக்கம் W371.

31. இங்கும் இந்த அறிக்கையின் பிற பகுதிகளிலும், தங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட அனைத்து ஆயுதங்களையும் சாட்சிகளால் எப்போதும் அடையாளம் காண முடிவதில்லை. அவர்கள் விபரிக்கும் சில தாக்கங்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி, சட்டவிரோதமான முறைகளிலேயே ஏற்படுத்தப்படக்கூடியவை.

32. வெள்ளை பொஸ்பரசைக் கொண்ட கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் கடும் குண்டுவீச்சுகள், அதிக நச்சுத்தன்மையுடையதும் நீண்ட நேரம் நீடிப்பதுமான பொஸ்பரஸ் பென்டாக்சைடு புகை மேகத்தை உருவாக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவும். இது நீர், கண்கள், தோல் போன்றவற்றுடன் தொடர்பு கொள்ளும்போது, பின்னர் வலிமையான அமிலமாக மாறுகிறது.

33. W4 தனது சாட்சியத்தில் அந்த பெட்டிக்குள் பலத்த காயமடைந்த இரண்டு பொதுமக்களைச் சந்தித்ததாகவும், இறுதியில் அவர்களைக் கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் குறிப்பிடுகிறார். அவர்கள் கவிழ்ந்து கிடந்த ஒரு படகின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

34. இவை வெப்ப அழுத்த வெடிகுண்டுத் இருந்திருக்க வாய்ப்புள்ளது. இவை பெரும்பாலும் ரஸ்யாவின் RPO-A ராக்கெட்டுகள் மூலம் ஏவப்பட்டிருக்கலாம். இவற்றின் வெடிப்பு ஏற்படுத்தும் அதிர்வலை, பாதிக்கப்பட்டவரின் உடல் உறுப்புகளைச் சிதைக்கும் அளவுக்கு கடுமையானதாக இருக்கக்கூடும். இலங்கையில் அரசுப் படைகள் வெப்ப அழுத்தக் குண்டுகளைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, பார்க்க, e.g.: https://www.tamilguardian.com/content/what-are-thermobaric-and-cluster-bombs-look-their-use-sri-lankan-army, and https://www.wired.com/2009/05/thermobaric-slaughter-in-sri-lanka/

35. மேலே போல: பாதுகாப்பமைச்சின் அறிக்கைகளுக்கு 2009, இணைப்பைப் பார்க்கவும் see Annexure 2, p115 and ff: https://itjpsl.com/assets/shavendra-Silva_-final-dossier.pdf; see also 'Blacklight Arrow': blog, 2009.

36. D.B.S. ஜெயராஜின் வலைப்பதிவு, 10 ஏப்ரல் 2009, 'ஆனந்தபுரத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வியின் உட்கட்டமைப்பு': https://web.archive.org/web/20090414105720/http://dbsjeyaraj.com/dbsj/archives/315

37. W5

38. இதனைத் தொடர்ந்து The Nation, ஞாயிறு 12 ஏப்பிரல் 2009 நாளிதழில் வெளியான ஓர் அறிக்கை, "NFZ-இலிருந்து பச்சைப் புல்மோட்டைக்கு செல்லும் புலிகளின் இறுதி விநியோகப் பாதையை எதிர்பாராத ஒரு தருணத்தில் துண்டிக்க எடுத்த முடிவு, அங்கு புலிகள் மிகப்பெரிய தோல்வியைச் சந்திக்க வழிவகுத்தது" என்று குறிப்பிடுகிறது.

39. மதிவாணன் மாஸ்ரர்.

40. The Nation, ஞாயிறு 12 ஏப்பிரல் 2009.

41. கரும்புலிகள் வந்து கொண்டிருப்பதாக தானும் கேள்விப்பட்டதாக கூறும் W3.

42. W4

43. The Nation, ஞாயிறு 12 ஏப்பிரல் 2009.

44. W3

45. W3

46. W1

47. விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவின் பொறுப்பாளர் கேணல் சேரலாதன், வயிற்றுப் பகுதியில் உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு உள்ளாகி நடக்க முடியாத நிலையில் இருந்தார். மேலும், தான் தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அவர் W6-இடம் தெரிவித்தார்: "நான் அவரை உயிருடன் பார்த்தேன் ஆனால் அவர் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பே இல்லை." என று6 பதிவு செய்கிறார்.

48. போரின் மரபுகளையும் சட்டங்களையும் மீறிய ஆனந்தபுரத்தில் சண்டை முடிவடைந்த போது, இலங்கை இராணுவம் கைதிகளை ஒப்படைக்கவோ அல்லது உயிரிழந்தவர்களின் உடல்களை ஒப்படைக்கவோ இல்லை. இதனால், அங்கு சண்டை பிடித்தவர்களில் சிலர் இரகசியத் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு, காணாமல் போயிருக்கலாம் என்று நம்பக்கூடிய சூழலை உயிர் தப்பியவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் ஏற்படுத்தியுள்ளது.

49. W4

50. The Nation, ஞாயிறு 12 ஏப்பிரல் 2009.

51. ITJP இன் சாட்சி இலக்கம் W310 ஐப் பார்க்கவும்

52. The Nation, ஞாயிறு 12 ஏப்பிரல் 2009. ஆயினும் LTTE இன் சாட்சிகள் உயிர்தப்பியிருந்த போராளிகளிடம் வெடிமருந்துகள் ஏதும் இருக்கவில்லை எனக் கூறுகிறார்கள்.

53. 'Blacklight Arrow': blog, 2009.

54. The Nation, ஞாயிறு 12 ஏப்பிரல் 2009..

55. Ibid.

56. https://web.archive.org/web/20110510103343/http%3A//defence.lk/new.asp?fname=20090405_04

57. ஆய்வாளர் D.B.S. ஜெயராஜின் வலைப்பதிவு, 10 ஏப்ரல் 2009, 'ஆனந்தபுரத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வியின் உட்கட்டமைப்பு': இனைப் பார்க்கவும் : https://web.archive.org/web/20090414105720/http://dbsjeyaraj.com/dbsj/archives/315

58. 2009 ஏப்ரல் 12 அன்று த நேசன் நாளிதழில் வெளியான ஒரு தொகுப்பு, இதே எண்ணிக்கையை 613 எனக் குறிப்பிட்டது. நிச்சயமான எண்ணிக்கையை கூறுவது சாத்தியமில்லை. உதாரணமாக, பெட்டியில் சிக்கியிருந்த போராளிகளின் எண்ணிக்கை 800-ஐ விட 1,000-க்கு நெருக்கமாக இருந்ததாக சில மதிப்பீடுகள் கூறுகின்றன. ஆனால், ஆய்வாளர் D.B.S. ஜெயராஜ் ஆதாரமின்றி வெளியிட்ட அறிக்கையில், முற்றுகையின் போது "பல்வேறு நேரங்களில் சிறு சிறு குழுக்களாக" 116 படையணியினர் இராணுவத்திடம் சரணடைந்ததாகக் கூறுவது சரியானதெனில், அந்த எண்ணிக்கை மீண்டும் குறைகிறது. வேறுபாடுகள் கொண்ட மதிப்பீடுகள் இருந்தபோதிலும், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இந்த எண்ணிக்கைகள் குறித்து பரந்த அளவில் ஒருமித்த கருத்து உள்ளது. (மேலும், பல "உயர்மட்ட புலிகள்" உயிருடன் பிடிக்கப்பட்டதாக அவர் கூறுகிறார் ஆனால், அதற்கும் ஆதாரமாக எந்த மூலத்தையும் அவர் குறிப்பிடவில்லை.)

59. பிற் குறிப்பு: 58 ஆவது படைப்பிரிவின் தளபதியான ஷவேந்திர சில்வா, 2009 ஆம் ஆண்டில் LTTE கைதிகளை அவர் படுகொலை செய்ததாக் கூறப்பட்ட வேறு குற்றச்சாட்டுகளையும் எதிர்கொண்டார் ஆனால், அவர் இதை மறுத்தார்: பார்க்க p49: https://itjpsl.com/assets/shavendra-Silva_-final-dossier.pdf

60. ITJP இன் சாட்சி இலக்கம் W310.

61. 1:50 நிமிடத்தில் பார்க்கவும்: https://www.youtube.com/watch?v=ROCSFSpUAAg

62. https://web.archive.org/web/20110510103343/http%3A//defence.lk/new.asp?fname=20090405_04

63. ITJP இன் சாட்சி இலக்கம் W310.

64. W3 அமுதாவின் பெயரைக் குறிப்பிடப்படுகிறார்.

65. The Nation, ஞாயிறு 12 ஏப்பிரல் 2009..

66. ITJP இன் சாட்சி இலக்கம் W375 ஐப் பார்க்கவும்.

பகுதி இரண்டு

பொருத்தமான சட்ட விதிமுறைகள்

இந்த அறிக்கையின் பகுதி 1 ஏப்பிரல் 2009 இல் இடம்பெற்ற ஆனந்தபுரச் சமரின் போதும் சமரை அடுத்து உடனடியாகவும் இலங்கை விமானப்படை அணிகளின் (SLAF) உதவியுடன் இலங்கை இராணுவத்தின் (SLA) படைகள் ஈடுபட்டதாகச் சொல்லப்படும் நடவடிக்கைகள் பற்றிய குற்றச்சாட்டுக்களை ஆவணப்படுத்துகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஆதாரங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டால் அவை சர்வதேச மனிதாபிமானச் சட்டம் (IHL), சர்வதேச மனித உரிமைகள் சட்டம் (IHRL) மற்றும் சர்வதேசக் குற்றவியல் சட்டம் (ICL) ஆகியவற்றின் கடுமையான மீறல்களாக அமையலாம்.

கண்மூடித்தனமான முறையில் அல்லது சட்டத்திற்கு புறம்பான வழிகள் மற்றும் வழிமுறைகளைக் கொண்ட போர் முறைகளைப் பயன்படுத்தியதாகச் சொல்லப்படுதல், பொதுமக்கள் மற்றும் சட்டத்தால் பாதுகாக்கப்படும் ஏனைய நபர்கள் மற்றும் பொருட்கள் மீது பாதிப்பினை ஏற்படுத்தும் தாக்குதல்கள், மனிதாபிமான உதவிகளை மறுத்தல் மற்றும் காயமடைந்தவர்களை மற்றும் 'போரில் ஈடுபடமுடியாத நிலையில் உள்ளவர்களைப்' படுகொலை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கிய இராணுவ நடவடிக்கைகள் நடாத்தப்பட்ட முறைகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை இந்த அறிக்கை ஆவணப்படுத்துகின்றது. இவற்றை ஒன்றாகக் வைத்துப் பார்க்கையில், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் புரியப்பட்டுள்ளனவா என்பதை மதிப்பீடு செய்வதற்கான உண்மைச் சூழலின் அடிப்படையை இந்தக் குற்றச்சாட்டுக்கள் வழங்குகின்றன. ஆயுத போரின் இறுதிக் கட்டம் பற்றி ஐக்கிய நாடுகளின் பொறிமுறைகள் மற்றும் ஏனைய சுயாதீன விசாரணைகளால் முன்பு அடையாளங்காணப்பட்ட கவலைக்குரிய விடயங்களுடன் இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஒத்துப்போவதாய் உள்ளன.

இந்த ஆய்வு தனிநபரின் குற்றவியல் பொறுப்பினை தீர்மானிப்பதனை நோக்கமாகக் கொண்டதல்ல. மாறாக, சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கடுமையான மீறல்கள் இடம்பெற்றிருக்கலாம் என்பதனை நம்புவதற்கான போதிய ஆதாரங்களை அந்தக்காலப் பகுதிக்குரிய இராணுவத்தின் அறிக்கைகள், ஐக்கிய நாடுகளின் ஆவணங்கள் மற்றும் தொடர்புபட்ட ஏனைய தகவல் ஆதாரங்கள் என்பன வழங்குகின்றன, இவற்றினை ஒன்று சேர்த்து, அறிக்கையின் பகுதி 01 உண்மை சார்ந்த ஆதாரங்களைக் கொண்டுள்ளதா என்பதை இது மதிப்பீடு செய்கின்றது. சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச மரபுவழிச் சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் ரோம் சாசனத்தின் முக்கிய சட்ட விதி முறைகளுக்கு எதிரான முறையில் போர் நடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுவதை இந்த ஆய்வு ஆராய்கின்றது. அடையாளங்காணப்பட்ட இராணுவ அணிகள் அல்லது தளபதிகள் தொடர்பிலான குறிப்புக்கள் சாத்தியமான கட்டளைப் பொறுப்பு குறித்து மதிப்பிடும் நோக்கில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன, அவை குற்றவியல் பொறுப்பு பற்றிய முடிவுகளாக அமையாது. படை நடவடிக்கைகள் நடாத்தப்பட்ட முறை, போர்முறையில் பயன்படுத்தப்பட்டதாகக் சொல்லப்படும் வழிகள் மற்றும் வழிமுறைகள், 'போரில் ஈடுபட முடியாத நபர்களை' நடாத்திய முறை மற்றும் இந்த நடவடிக்கைகளுக்கு கட்டளை மற்றும் கட்டுப்பாட்டினை திறம்பட மேற்கொண்டவர்களுக்கு இருக்கக் கூடிய பொறுப்பு ஆகியவற்றை பரிசீலிப்பதன் மூலம் இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது.

போர் நடத்தப்பட்ட முறை, வேறுபாடு காணல், விகிதாசாரம் மற்றும் தாக்குதல் முன்னெச்சரிக்கைகள்

ஆனந்தபுரச் சமரின் போது போர் நவடிக்கைகள் நடாத்தப்பட்ட முறையானது வேறுபடுத்தல், விகிதாசாரம் மற்றும் தாக்குதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கொண்ட வழக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுடன் சேர்த்து கண்மூடித்தனமான தாக்குதல்கள் மீதான தடைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. இந்தக் கொள்கைகள் அரசாங்கப் படைகள் எல்லா நேரங்களிலும் இராணுவ மற்றும் பொதுமக்கள்

இலக்குகளை வேறுபடுத்துதல், எதிர்பார்க்கப்படும் இராணுவ முன்னேற்றத்திற்காக பொதுமக்களுக்கு தற்செயலாக அதிகப்படியான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய தாக்குதல்களைத் தவிர்த்தல் மற்றும் இது போன்ற பாதிப்பினை இயன்றளவு குறைப்பதற்குத் தேவையான சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் போன்றவற்றை இந்தக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன.

இத்தகைய கடப்பாடுகள் இருப்பினும், பெரியளவான எண்ணிக்கையில் பொதுமக்கள், காயப்பட்டவர்கள் மற்றும் எஞ்சியுள்ள LTTE இனரின் படைகள் இருப்பது தெரிந்தும் ஆனந்தபுரம் பெட்டியினுள்ளும் அதனைச் சுற்றியுள்ள, நாளுக்கு நாள் சுருங்கிவரும் பகுதி மீதும் அரசாங்கப்படைகள் கனரக ஆட்டிலறிகள், பல்குழல் எறிகணை செலுத்திகள் (MBRLs) மற்றும் தொடர்ச்சியான வான் தாக்குதல்களை பயன்படுத்தின என இந்த அறிக்கையின் முதலாவது பகுதி குற்றஞ்சாட்டுகிறது.

அத்துடன் தொடர்ச்சியான வான் கண்காணிப்பு, கிபிர் போர் விமானம், வேவு விமானம் மற்றும் ஆளில்லா விமானங்கள் (UAVs) ஆகியவற்றினைப் பயன்படுத்தியதாகச் சொல்லப்படுவது உட்பட தரைத் தாக்குதல்கள், ஆட்லறி எறிகணை ஆதரவு, மற்றும் தொடர்ச்சியான வான் தாக்குதல்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்பட்ட ஒரு கூட்டு இராணுவ நடவடிக்கையினை இந்த அறிக்கை மேலும் விபரிக்கின்றது. பொதுமக்கள், மருத்துவ நிலையங்கள் மற்றும் காயமடைந்தவர்கள் செறிந்துள்ள இடங்கள் உட்பட போர்க்களத்தின் நிலைமைகள் குறித்த கணிசமாக நேரடித்தகவல்களை இந்த நடவடிக்கையினை நடாத்தியவர்கள் வைத்திருந்ததாக நியாயமான வகையில் ஊகிக்க முடிவதை இது காட்டுவதால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால், இந்த நடவடிக்கைக்கான ஒருங்கிணைப்பு சட்ட ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

மார்ச் 2009 பிற்பகுதியளவில் அரசாங்கப் படைகள் இராணுவ நடவடிக்கை ரீதியாக மேலாண்மையை அடைந்திருந்த அதேவேளையில் LTTE இனரின் எஞ்சியிருந்த படைகள் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட பகுதிக்குள் முடக்கப்பட்டதுடன் கடுமையான வெடிபொருள், உணவு மற்றும் மருத்துவப் பொருட்களுக்கான பற்றாக்குறைக்கு முகங்கொடுத்ததுடன் பெரும் எண்ணிக்கையிலான காயப்பட்ட இல்லாவிட்டால் போரிடும் திறனை இழந்த போராளிகளைக் கொண்டிருந்தார்கள் என்பதையும் இந்த அறிக்கை மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

இவ்வாறான நடவடிக்கைப் பின்னணியில், ஒரு குறுகிய போர்க்களப் பகுதியில் கனரக ஆட்டிலறிகள், பல்குழல் எறிகணைகள் மற்றும் வான்வழித் தாக்குதல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டமை வேறுபடுத்தல், விகிதாசாரம் மற்றும் தாக்குதலின் போது மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவற்றின் கோட்பாடுகளின் கீழ் மதிப்பீடு செய்வது அவசியமாகும். குறிப்பாக, தொடர்ச்சியான வான்வழிக் கண்காணிப்பு இருந்ததாக கூறப்படும் நிலையில், தாக்குதல்களை வழிநடத்தியவர்கள் இராணுவ இலக்குகளை உறுதிப்படுத்துவதற்கும், எதிர்பாராத முறையில் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைக் குறைப்பதற்கும் சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மரபு வழிச் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் அவசியமானது போல் அதனை மேற்கொண்டார்களா என்பது கூடுதலாகப் பொருத்தமானதாக இருக்கும்.

இந்தச் சமர் நடாத்தப்பட்ட விதம் சரணடைந்தவர்களுக்கு அல்லது போரிட முடியாதவர்களுக்கு உயிர் பிழைக்கும் வாய்ப்பினை மறுப்பதற்கு எதிரான மரபுவழித் தடை குறித்த கேள்விகளை எழச் செய்கின்றது. சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது 'எவரும் உயிர் பிழைக்ககூடாது' என்ற வெளிப்படையான உத்தரவுகளை மட்டுமல்லாமல் அந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளையும் தடைசெய்கின்றது. எதிரித் தரப்பினர் சரணடைவதற்கான உண்மையான வாய்ப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும், போரிடும் நிலையில் இல்லாதவர்கள் தாக்கப்படக்கூடாது என்ற அடிப்படைக் கோட்பாட்டையும் இந்த விதி பிரதிபலிக்கிறது. இறுதிக் கட்டச் சமரின் பல அம்சங்கள் இது தொடர்பில் பொருத்தமானதாக இருக்கும். LTTE இனரின் படைகள் படிப்படியாக சுற்றி வளைக்கப்பட்டிருந்ததாகவும், அவர்களின் நகர்வுத் திறன் கடுமையாகக் குறைக்கப்பட்டிருந்ததாகவும், அவர்கள் உணவு, வெடிபொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கு கடுமையான பற்றாக்குறையை எதிர்கொண்டதாகவும், மேலும் தப்பிச் செல்லும் வழிகள் மொத்தத்தில் மூடப்பட்டிருந்ததாகவும் அந்தக் காலப் பகுதிக்குரிய ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. அதேவேளையில், ஒருங்கிணைக்கப்பட்ட எதிர்ப்பு கணிசமான அளவு குறைந்திருந்ததாக இராணுவ நிலைமை சுட்டிக்காட்டி இருப்பினும் சரணடைவதற்கான வாய்ப்புகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டதா அல்லது அவற்றுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதா என்பதற்கான ஆதாரங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. பதிலாக சுற்றிவளைக்கப்பட்ட அந்தப் பகுதி முழுமையாகக் கைப்பற்றுப்படும் வரை தொடர்ச்சியான ஆட்டிலறி, வான் தாக்குதல்கள் மற்றும் தரைத் தாக்குதல்கள் தொடர்ந்ததாக கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. சட்டத்திற்கு புறம்பான முறையில் சரணடைந்தவர்களுக்கு அல்லது போரிட முடியாதவர்களுக்கு உயிர் தப்புவதற்கான சந்தர்ப்பம் வழங்காத ஒரு கொள்கை இருந்தது என்பதை மேலதிக ஆதாரங்கள் இல்லாமல் இந்த தகவல்களின்

அடிப்படையில் நிரூபிக்க முடியாத நிலையில், 'போரிடும் திறனை இழந்தவர்கள்' அல்லது அவ்வாறான நிலையை அடைந்திருந்தவர்களுக்கு சரணடைவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கி அவர்களைப் பாதுகாக்கும் மரபுசார் கடப்பாட்டிற்கு முரணான வகையில் இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற அனுமானத்திற்கு அவை வலுச் சேர்ப்பவையாக உள்ளன.

புதுக்குடியிருப்பு மற்றும் ஆனந்தபுரம் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் உள்ள தற்காலிக மருத்துவமனைகள் உட்பட தற்காலிக மருத்துவ நிலையங்கள் மற்றும் காயமடைந்தவர்கள் மற்றும் பொதுமக்கள் கூடியிருந்த ஏனைய இடங்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை இந்த அறிக்கையின் பாகம் 01 மேலும் ஆவணப்படுத்துகின்றது. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் மருத்துவ நிலையங்களும் மருத்துவமனைகளும் விசேட பாதுகாப்பைப் பெறுகின்றன. அத்துடன், அவை தமது மனிதாபிமானப் பணிக்கு அப்பாற்பட்டு எதிரிக்குப் பாதிப்பு விளைவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் பட்சத்தில் மட்டுமே தாக்குதலுக்கான இலக்கு ஆக்கப்படலாம். பகுதி 1 இந்த மருத்துவ நிலையங்கள் மனிதாபிமான செயற்பாட்டுக்கு அப்பாற்பட்டு பயன்படுத்தப்பட்டன என்பதற்கான எந்த ஆதாரத்தினையும் அடையாளங்காணவில்லை. எனவே அந்த மருத்துவநிலைகளைப் பாதிக்கும் வகையிலான தொடர்ச்சியான தாக்குதல்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கடுமையான மீறல்களாகவும் அவசியமான அம்சங்கள் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அது ரோம் சட்டத்தின் கீழ் போர்க்குற்றங்களாகவும் அமையும்.

இந்தக் கோட்பாடுகளை மதிப்பீடு செய்வது என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகள் மட்டுமன்றி, பயன்படுத்தப்பட்ட போர்முறையின் வழிகள் மற்றும் வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே, கொத்துக் குண்டுகள் மற்றும் ஏனைய ஆயுதங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் கீழே தனியாக ஆராயப்படுகின்றது.

'போரிட இயலாத நிலையிலுள்ள' நபர்களின் பாதுகாப்பு

இந்தஅறிக்கையின்பகுதி1ஆனந்தபுரம்பகுதியில்காயமடைந்த மற்றும் போராடும் ஆற்றலை இழந்த டுவுவுறு போராளிகள் நடாத்தப்பட்ட முறை தொடர்பிலான குற்றச்சாட்டுகளை ஆவணப்படுத்துகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள், கடுமையாக காயப்பட்ட நபர்கள், போராடும் ஆற்றலை இழந்த அல்லது வேறு காரணங்களால் போர் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் பங்குபற்ற முடியாதவர்கள் மற்றும் சரணடைவதற்கான எண்ணத்தை வெளிக்காட்டியதாகச் சொல்லப்படும் தனிநபர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுவதையும் உள்ளடக்குகின்றது. இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், போரிடும் ஆற்றலை இழந்த நிலையில் உள்ள நபர்களை மதித்துப் பாதுகாக்க வேண்டிய கடமை மற்றும் அத்தகைய நபர்களைக் கொல்வதையோ அல்லது வேறு எந்த வகையிலும் துன்புறுத்துவதையோ தடைசெய்யும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மிகவும் அடிப்படைப் பாதுகாப்புகளில் ஒன்றுடன் தொடர்புபட்டதாக இருக்கும்.

காயம் சுகயீனம் அல்லது தடுப்புக்காவல் அல்லது வேறு இயலாமை உட்பட்ட காரணங்களால் 'போரிடும் ஆற்றலை இழந்தவர்கள்' எல்லா சந்தர்ப்பங்களிலும் மனித நேயத்துடன் நடாத்தப்பட வேண்டும் என்பதை ஜெனீவா உடன்படிக்கையின் பொதுவான பிரிவு 3 வலியுறுத்துகின்றது. மரபு வழிச் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் இந்தப் பாதுகாப்பினை பிரதிபலிக்கின்றது. அத்துடன் சர்வதேச அல்லது சர்வதேசம் அல்லாத ஆயுத மோதல்களுக்குப் பொருந்தக் கூடியதாக மிகக் குறைந்தபட்ச உத்தரவாதங்களில் ஒன்றாக இது உள்ளது.

பொதுப் பிரிவு 3 இன் கீழ் பாதுகாப்பு என்பது முறையான சரணடைதலைப் பொறுத்தது அல்ல. காயம், சுகயீனம் அல்லது வேறு ஏதேனும் இயலாமை காரணமாக போரில் தொடர்ந்து பங்கேற்க முடியாத நிலையில் உள்ள நபர்கள், தங்களது ஆயுதங்களை முறையாகக் கீழே போட்டார்களோ இல்லையா என்று இல்லாமல், 'போரில் ஈடுபடும் ஆற்றலை இழந்தவர்கள்' என்பதன் அடிப்படையில் பாதுகாக்கப்படுகிறார்கள். போர் நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கேற்க முடியாத அவர்களின் புறநிலை சார்ந்த இயலாமை என்பதே முடிவைத் தீர்மானிக்கும் சட்ட ரீதியாக கருத்தில் கொள்ளப்படும் விடயமாகும்.

எனவே கணனி நிலையம் தொடர்பான குற்றச்சாட்டுகள் சட்ட விதிமுறைகளுக்கு இணங்க மதிப்பிடப்பட வேண்டும். இந்த அறிக்கையின் பகுதி 1 இல் விபரிக்கப்பட்டது போன்று கணனி நிலையம் என்பது வெறுமெனவே போரின் போது இழப்புகள் ஏற்பட்ட இன்னுமொரு இடம் அல்ல. மாறாக, இனிமேலும் போரில் பங்கெடுக்க முடியாத நபர்களையும், கடுமையாகக் காயப்பட்டவர்களையும் பெரும் எண்ணிக்கையில் ஒன்றாகக் கொண்டிருந்த இடம் எனச் சொல்லப்படுகின்றது.

பொதுப் பிரிவு 3 மற்றும் மரபு வழிச் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பாதுகாப்புகள் இந்த 'போரிடும் ஆற்றலை இழந்தவர்கள்' என்ற நிலையில் இருந்த இவர்களுக்கு வழங்கப்பட்டதா என்பதே இங்கு சட்ட ரீதியான முக்கிய கேள்வி ஆகும். இது நிரூபிக்கப்பட்டால், காயமடைந்த மற்றும் போரிடும் ஆற்றலை இழந்த நபர்களைக் கொண்ட தெளிவாக அடையாளங்காணக்கூடிய இந்தக் குழுவைச் சேர்ந்த எவரும் உயிர் பிழைத்ததாகத் தெரியவில்லை என அறிவிக்கப்பட்டிருப்பது போர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் முறையை நெறிப்படுத்துவதற்கான சட்ட விதிகளில் இருந்து மாறுபட்ட சட்டப் பிரச்சினைகளை எழுப்புகின்றது. காயங்கள் அல்லது இயலாமை காரணமாக ஒருவர் 'போரிடும் ஆற்றலை இழக்கும் நிலைக்கு' ஆளான பின்னர், அந்த நபரைக் கொல்வதற்கு எதிரான சட்டத்தை மீறுவதற்கு எந்தவொரு இராணுவத் தேவையும் கொண்ட விதிவிலக்கும் அனுமதிக்கப்படமாட்டாது.

போர்முறை வழிகளும் வழிமுறைகளும்

இந்த அறிக்கையின் பகுதி 1, ஆனந்தபுரம் சமரின் இறுதிக் கட்டங்களில் பயன்படுத்தப்பட்ட போர் முறைகள் மற்றும் போர் வழிமுறைகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை ஆவணப்படுத்துகிறது. பரவலான தீக்காயங்கள், சுவாசக் கோளாறு, பரவலான குண்டுச் சிதறல்கள் மற்றும் வெடிப்பின் தாக்கங்கள் போன்றவற்றை ஏற்படுத்தும் கொத்துக் குண்டுகள், வெள்ளை பொஸ்பரஸ் மற்றும் அடையாளம் காணப்படாத ஏனைய ஆயுதங்களின பயன்பாட்டினால் ஏற்படும் பாதிப்புகள் என்பன பல்வேறு சாட்சிகள் சுயாதீனமான முறையில் வெடிபொருட்கள் ஏற்படுத்துவதாக விபரிக்கும் தாக்கங்களுடன் ஒத்துப்போகின்றன.

மேலும், வான்வழியாகவும் ஆட்டிலறி எறிகணை மூலமாகவும் வீசப்பட்ட சிதறிப் பரவும் துணை குண்டுகள் காயமடைந்த LTTE போராளிகள், பொதுமக்கள் மற்றும் தற்காலிக மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்த குறுகிய நிலப்பரப்பில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிப் பல சாட்சிகள் விபரிக்கின்றனர். சாட்சிகளின் வாக்குமூலங்கள் மட்டும் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை திட்டவட்டமாக அடையாளங்காண போதுமாக இல்லாத அதேவேளையில், பல சுயாதீன சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட இந்த விபரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போவது, கவனமான சட்ட ரீதியான மதிப்பீடு மற்றும், தேவைப்பட்டால், மேலதிக தடயவியல் விசாரணையையும் அவசியமாக்குகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மை என நிரூபிக்கப்பட்டால், அவை கண்மூடித்தனமான தாக்குதல்கள் மீதான மரபு வழித் தடை, பொதுமக்கள் மற்றும் இராணுவ இலக்குகளுக்கு இடையிலான வேறுபாட்டினைக் கண்டறிய முடியாத போர்முறை வழிகளையும், வழிமுறைகளையும் பயன்படுத்துவதைத் தடை செய்தல் மற்றும் மிதமிஞ்சய காயங்களை அல்லது தேவையில்லாத துன்பத்தை ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தடைசெய்தல் போன்ற விதிமுறைகளுடன் அவை தொடர்புபடலாம்.

கொத்துக் குண்டுகள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளின் சட்ட ரீதியான முக்கியத்துவமானது கொத்துக்குண்டுகள் பற்றிய உடன்படிக்கையின் கீழ் உள்ள உடன்படிக்கை கடப்பாடுகளை மாத்திரம் சார்ந்தது அல்ல. ஒரு அரசு அந்த உடன்படிக்கையில் ஒரு தரப்பாக இல்லாவிட்டாலும் கூட, பொதுமக்கள், காயமடைந்தவர்கள் மற்றும் தற்காலிக வைத்தியசாலைகளைக் கொண்டுள்ள ஒரு குறுகிய நிலப்பரப்பின் மீது இயல்பாகவே பரந்த நிலப்பரப்பில் பாதிப்புகளை ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக சொல்லப்படுவது வேறுபடுத்தல், விகிதாசாரம் மற்றும் தாக்குல் முன்னெச்சரிக்கைகள் ஆகியவற்றைக் கொண்ட மரபு வழிக் கோட்பாடுகளை மீறுவதாக அமையும்.

அதற்கிணங்க, குறிப்பிட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் பயன்படுத்தப்பட்டனவா என்பது மட்டுமல்லாமல், அப்போதைய சூழ்நிலையில் போர் முறையில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களும் போரின் உத்திகளும் இராணுவ இலக்குகளைப் பொதுமக்கள் மற்றும் சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட ஏனைய நபர்களிடமிருந்து வேறுபடுத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டிருந்தனவா என்பதுமே இங்குள்ள முக்கிய சட்டரீதியான விடயமாகும்.

இந்தக் குற்றச்சாட்டுகள் பகுதி 1இல் விபரிக்கப்பட்டுள்ள விரிவான நடவடிக்கைச் சூழலினைக் கருத்திற்கொண்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். வெறும் சூழ்நிலை குறித்த முழுமையற்ற விழிப்புணர்வு காரணமாகவே பொதுமக்கள், காயமடைந்தவர்கள் மற்றும் மருத்துவ நிலையங்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்திய தொடர் தாக்குதல்கள் இடம்பெற்றன என்பதற்கான சாத்தியப்பாட்டினை தொடர்ச்சியான வான்வழிக் கண்காணிப்பு இடைவிடாத வான்வழித் தாக்குதல்கள் மற்றும் ஒருங்கிணைந்த தரைவழி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுவது கணிசமாகக் குறைக்கின்றது. எனவே, இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானவை என நிரூபிக்கப்பட்டால், அவை பயன்படுத்தப்பட்டஆயுதங்களின்தன்மைகுறித்தகேள்விகளை மட்டுமல்லாமல், அந்த நடவடிக்கையின் போது அந்த ஆயுதங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட விதம் குறித்தும் கேள்விகளை எழுப்புகின்றன.

காயமடைந்தவர்களையும் போரிடும் ஆற்றலை இழந்த போராளிகளையும் சட்டத்திற்குப் புறம்பான முறையில் கொல்லுதல்

ஆனந்தபுரம் பெட்டியின் வீழ்ச்சியின் போது கணனி நிலையத்தில் விடப்பட்டு செல்லப்பட்ட பல நூற்றுக்கணக்கான படுகாயமடைந்த LTTE போராளிகளுக்கு என்ன நடந்தது என்பது குறித்து கடுமையான குற்றச்சாட்டுகள் இந்த அறிக்கையின் பகுதி –1 இல் உள்ளன. ஏப்பிரல் 2009, 3 ஆம் திகதிக்கும் 4 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட இரவு வேளையில் நடமாடுவதற்கு இன்னும் இயலுமானவர்கள் தப்பிச் செல்வதற்கு முயற்சி செய்த பின்னர் காயமடைந்தவர்கள் மற்றும் செயல்பட முடியாத நிலையில் இருந்தவர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் அங்கேயே விடப்படிருந்ததை அந்த அறிக்கை பதிவு செய்கிறது. இந்தப் பகுதியினை இராணுவம் கைப்பற்றிய போது இவர்கள் உயிருடன், கடுமையான காயங்களுடன், ஆயுதங்கள் எதுவும் இல்லாமல் இலங்கை இராணுவத்தை எதிர்க்கும் ஆற்றல் இல்லாதவர்களாக இருந்ததாக பல சாட்சிகள் ஒருவருடன் ஒருவர் ஒத்துப்போகும் வகையில் தெரிவிக்கிறார்கள். இந்தக் குழுவில் இருந்த எவருமே பின்னர் உயிர்பிழைத்ததாகத்

தெரியவில்லை என இந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மை என நிரூபிக்கப்பட்டால், ஜெனீவா உடன்படிக்கையின் பொதுப் பிரிவு 3 இனை மீறியதாக 'போரிடும் ஆற்றலை இழந்தவர்களை' கொலை செய்தல் மற்றும் கொடுமைப்படுத்தல் போன்ற போர்க்குற்றங்களுக்கு ஒப்பானவையாக அவை கருதப்படும். கணனி நிலையத்தினைக் கைப்பற்றிய பின்னர் அரச படைகள் நடந்து கொண்ட முறை தொடர்பிலான ஆதாரங்களைப் பொறுத்தே அவர்கள் சரணடைந்த அல்லது இனி போராட முடியாதவர்களுக்கு உயிர் பிழைக்கும் வாய்ப்பை மறுப்பதை தடைசெய்யும் மரபுவழிச் சட்டத்தையும் அவர்கள் எதிர்கொள்ள நேரிடலாம்.

அந்தக் கட்டடத்திற்கு அருகே அகப்பட்டுக் கொண்ட 'பயங்கரவாதிகளை துரத்திச் சென்று அரசாங்கப் படைகள் அழித்தார்கள்' என்ற அறிவிப்புடன் அந்தக் காலப் பகுதியில் சமருக்குப் பின்னர் எரிந்த நிலையில் அப்போதும் புகை வந்து கொண்டிருந்த கணனி நிலையத்தினைக் காட்டும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தானத்தினால் 05 ஏப்பிரல் 2009 இல் ஒளிபரப்புச் செய்யப்பட்ட காணொளி பற்றியும் இந்த அறிக்கையின் பகுதி 01 மேலும் குறிப்பிடுகின்றது. அங்கு எஞ்சியிருந்தவர்களில் மிகப் பெரும்பான்மையனாவர்கள் கடுமையாக காயமடைந்தவர்கள், நடமாடமுடியாதவர்கள் மற்றும் மேலும் சண்டையில் ஈடுபடுவதற்கு வலுவற்றவர்கள் என ஒரே மாதிரியாக கூறும் சாட்சிகளின் வாக்குமூலத்துடன் இந்த அறிவிப்பு முரண்படுகின்றது.

இந்த அறிக்கையானது காயமடைந்தவர்களுடன் அங்கு தொடர்ந்தும் தங்கியிருந்த மருத்துவப் பணியாளர் நடாத்தப்பட்ட முறை குறித்தும் கரிசனையை எழுப்புகின்றது. காயமடைந்தவர்களைப் பராமரிப்பதற்காக அங்கு தொடர்ந்தும் தங்கியிருந்ததாகச் சொல்லப்படும் LTTE இனால் பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவப் பணியாளரான வைத்தியர் சத்தியாவை குறிப்பாக சாட்சிகள் குறிப்பிடுகிறார்கள். இந்தச் சமரின் பின்னர் இவர் உயிருடன் பிடிக்கப்பட்டு பின்னர் காணாமற்போனதாகச் சொல்லப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால், அவை சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழான பாதுகாப்பு மற்றும் வலிந்து காணாமற்போதல் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகள் குறித்த கூடுதலான பிரச்சினைகளை எழுப்புகின்றன.

பகுதி 1–இல் விபரிக்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டுகள், தனிப்பட்ட இராணுவ வீரர்களின் தனித்த செயல்கள் என்ற வரையறைக்குள் மட்டும் இல்லாமல், முன்னேறிவரும் இராணுவப் படைப்பிரிவுகள், தொடர்ச்சியான ஆட்லறித் தாக்குதலின் ஆதரவு, மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட வான்வழி குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மற்றும் பல நாட்களாக நடாத்தப்பட்ட இடைவிடாத வான்வழி கண்காணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுதல் என்ற அளவுக்கு விரிந்து செல்கிறது. இது நிரூபிக்கப்பட்டால், இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் இராணுவத்தின் அதிகாரப் படிநிலையின் பல்வேறு மட்டங்களில் உள்ளவர்களது கட்டளைகள் என்பன அவசியமாக தேவைப்பட்டிருக்கும், எனவே இது நேரடியாக குற்றஞ் செய்தவர்களின் பொறுப்பின் வரம்பினையும் கடந்து கேள்விகளை எழுப்புகின்றது.

ரோம் சட்டத்தின் 28 ஆம் பிரிவு, இராணுவத் தளபதிகள் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகளின் செயற்திறன் மிக்க கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள படைகள் மேற்கொள்ளும் குற்றங்களுக்காக அந்த அதிகாரிகளுக்குள்ள குற்றவியல் பொறுப்பினை குறிப்பிடுகிறது. அதாவது அத்தகைய குற்றங்கள் இடம்பெற்று வருவதை அவர்கள் அறிந்திருந்தும் அல்லது அந்நேரத்தில் இருந்த சூழ்நிலைகள் காரணமாக அவர்களுக்கு இது போன்ற குற்றங்கள் இடம்பெற்றுவருவதை அல்லது இடம்பெறவிருப்பதை அறிந்திருந்தும் அவற்றைத் தடுக்கவோ அல்லது அவை மேற்கொள்ளப்படுவதைக் கட்டுப்படுத்தவோ அல்லது அந்த விடயத்தை விசாரணைக்கு மற்றும் வழக்குத் தொடர்வதற்காக சமர்ப்பிக்க தங்களால் மேற்கொள்ளக்கூடிய அனைத்து தேவையான மற்றும் நியாயமான நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் அவர்களின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள படைகள் செய்த குற்றங்களுக்கு அதிகாரிகளே குற்றவியல் பொறுப்பு உடையவர்களாவார்கள். இது போன்ற கேட்பாடுகள் மரபு வழிச் சர்வதேச சட்டத்தின் ஒரு பகுதியாக அமைகின்றன.

குற்றச்சாட்டுக்கள் சொல்லப்பட்ட சூழ்நிலைகளில், தமக்கு கீழ் உள்ளவர்களால் ஏற்கனவே புரியப்பட்ட குற்றங்களுக்கு அதிகாரிகள் தண்டனை வழங்கத்தவறினார்களா என்பதுடன் மட்டும் இந்த விடயம் நின்றுவிடவில்லை. களநிலைகள் மாறுவதற்கேற்றவாறு நடவடிக்கைகளை திட்டமிட்டு செயல்படுத்துவதிலும் திட்டமிடல் மீதும் நேர்த்தியான கட்டுப்பாட்டினை அவர்கள் கொண்டிருந்தார்களா என்பது குறித்தும் அது கவனம் செலுத்துகிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட எதிர்ப்பு படிப்படியாக வீழ்ச்சியடைதல், காயமடைந்த மற்றும் போரிடமுடியாத நிலையில் உள்ள போராளிகளின் எண்ணிக்கை அதிகரித்தல், அத்துடன் சரணடைவதற்கான சரியான வாய்ப்புகள் இல்லாதிருப்பதாகச் சொல்லப்படுதல் ஆகியவை, நடவடிக்கைக்கான உத்தரவுகள், கட்டளை அறிவுறுத்தல்கள் மற்றும் போர்க் கட்டுப்பாட்டு விதிகளில் அதற்கேற்றவாறான சரிசெய்தல்களை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா என்பது பிரிவு 28 இன் கீழ் நேர்த்தியான கட்டளையும் கட்டுப்பாடும் செயல்படுத்தப்பட்டதை நேரடியாக மதிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

இலங்கை விமானப்படையின் ஆதரவுடன் இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவு மற்றும் 53 ஆவது படைப்பிரிவு உட்பட இந்த நடவடிக்கையை மேற்கொள்வதில் தொடர்புபட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையான இராணுவ அணிகளை இந்த அறிக்கையின் பகுதி 1 அடையாளங்கண்டுள்ளது. இந்த சட்ட ரீதியான ஆய்வு எந்தவொரு தனிப்பட்ட தளபதியினதும் குற்றவியல் பொறுப்பினைத் தீர்மானிக்கவில்லை.

எவ்வாறாயினும், இந்நடவடிக்கைகளின் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் தொடர்பில் நேர்த்தியான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டை மேற்கொண்டவர்கள் ரோம் சட்டத்தின் 28ஆம் பிரிவு மற்றும் மரபு வழிச் சர்வதேச சட்டத்தின் கீழ் பொறுப்பு கூறலுக்கு உட்படுவார்களா என்பதை ஆராய்வதற்கு கிடைக்கக்கூடிய தரவுகள் போதுமான ஆதார அடிப்படையை வழங்குவதாக அது முடிவுசெய்கிறது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தனித் தனியாகப் பார்க்கப்படக் கூடாது. இவற்றை மொத்தமாக் கருத்தில் கொள்ளும் போது, போர் நடவடிக்கைகளை மேற்கொண்டமுறை சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட நபர்களை நடத்தியமுறை, இராணுவ நடவடிக்கைகளை திட்டமிடலும் செயல்படுத்தலும், நேர்த்தியான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டினை மேற்கொண்டவர்களுக்கு உள்ள பொறுப்பு என்பன தொடர்பில் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட கேள்விகளை அவை எழுப்புகின்றன.

முழுமையாகப் பார்க்கையில், ஆனந்தபுரம் சமரில் இருந்து எழும் சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் மேலதிக விசாரணையை மேற்கொள்வதற்கான ஒன்றுக் கொன்று ஒத்துப்போகும் ஆதார அடிப்படையை பகுதி 1 வழங்குகின்றது. கண்மூடித்தனமான தாக்குதல்கள், பாதுகாக்கப்பட்ட மருத்துவ நிலையங்களைப் பாதிக்கும் தாக்குதல்கள், சட்டத்திற்குப் புறம்பான வழிகள் மற்றும் வழிமுறைகளைக் கொண்ட போர்முறை மற்றும் 'போரிடும் ஆற்றலை இழந்த' நபர்களைக் கொல்லுதல் என்பன பற்றிய குற்றச்சாட்டுக்களை இவை உள்ளடக்குகின்றன.

குறிப்பிட்ட சட்ட முக்கியத்துவத்தைக் கொண்டதாக கணனி நிலையம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உள்ளன, இந்தச் சமரில் உயிர் தப்பி இனி மேல் போர் நடவடிக்கைகளில் பங்கேற்க முடியாத, காயமடைந்த மற்றும் இயங்க முடியாத நபர்களைக் கொண்ட தெளிவாக அடையாளங்காணக் கூடியவாறு பெரும் எண்ணிக்கையில் குழுவாக இருந்தவர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சம்பவத்தை அவை விவரிக்கின்றன. அத்துடன் இது உண்மை என நிரூபிக்கப்பட்டால், இத்தகைய நபர்கள் பொதுவான பிரிவு 3 வழங்கும் முழுமையான பாதுகாப்பிற்கு உரித்தானவர்கள்.

தனிநபரின் குற்றவியல்ப் பொறுப்பைத் தீர்மானிப்பது ஒரு தகுதிவாய்ந்த நீதித்துறை அமைப்பின் பணியாக இருக்கும் அதேவேளையில், கிடைக்கப்பெற்ற ஆதாரங்களை ஒன்றாக வைத்துப் பார்க்கும் போது அனந்தபுரம் சமரின் திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் செயல்படுத்தல் ஆகியன போர்க்குற்றங்கள் மற்றும், விரிவான சூழல் சார் ஆதாரங்களைப் பொறுத்து, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் உட்பட சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கடுமையான மீறல்களுடன் தொடர்புபட்டு உள்ளதா என்பது பற்றி விசாரிப்பதற்கான நியாயமான காரணங்கள் உள்ளன என்பதை வெளிப்படுத்துகின்றது.

கட்டளைப் பொறுப்புக் கோட்பாடுகளின் கீழ், அந்த நடவடிக்கையின் மீது நேர்த்தியான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டை மேற்கொண்டவர்களுக்கு இருக்கக்கூடிய சாத்தியமான பொறுப்பை ஆராய்வதற்குப் போதுமான ஆதார அடிப்படை இருப்பதையும் இந்தப் பகுப்பாய்வு மேலும் அடையாளங்காண்கிறது.

பகுதி இரண்டு - இறுதிக்குறிப்புக்கள்

1. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC), போர்க்கைதிகள் நடத்தப்படும்முறை பற்றிய ஜெனீவா உடன்படிக்கை (மூன்றாவது ஜெனீவா உடன்படிக்கை), 75 UNTS 135, 12 ஆகஸ்ட்1949, https://www.refworld.org/legal/agreements/icrc/1949/35606 [07 யூலை 2026 இல் பார்வையிடப்பட்டது]; ஐ.நா. பொதுச் சபை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உரோம் சட்டப்பிரகடனம். (இறுதியாகத் திருத்தப்பட்டது 2010), ISBN No. 92-9227-227-6, ஐ.நா. பொதுச் சபை, 17 July 1998, https://www.refworld.org/legal/constinstr/unga/1998/64553 [07 யூலை 2026 இல் பார்வையிடப்பட்டது]; Jean-Marie Henckaerts & Louise Doswald-Beck, மரபுவழிச் சர்வதேச மனிதாபிமானச் சட்டம், பாகம் I: விதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC)2005, https://www.refworld.org/reference/research/icrc/2005/98261 [07 யூலை 2026 இல் பார்வையிடப்பட்டது].

2. ஐ.நா பொதுச் செயலாளர் இலங்கையில் பொறுப்புக்கூறல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கை, 31 மார்ச் 2011. https://www.refworld.org/reference/countryrep/unsecgen/2011/78961 [07 யூலை 2026 இல் பார்வையிடப்பட்டது]; ஐ.நா மனித உரிமைகள் பேரவை, இலங்கை தொடர்பான மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கை, A/HRC/30/CRP.2, 16 September 2015, https://www.refworld.org/reference/countryrep/unhrc/2015/107236 [07 யூலை 2026 இல் பார்வையிடப்பட்டது]; பொதுவாகப் பார்க்க: ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை: ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையரின் விரிவான அறிக்கை, 22 ஆகஸ்ட் 2024, A/HRC/57/19.

3. Jean-Marie Henckaerts & Louise Doswald-Beck, மரபுவழிச் சர்வதேச மனிதாபிமானச் சட்டம், பாகம் I: விதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC)2005, https://www.refworld.org/reference/research/icrc/2005/98261 [07 யூலை 2026 இல் பார்வையிடப்பட்டது].

4. களத்திலுள்ள ஆயுதப்படையினரிலுள்ள காயமடைந்த மற்றும் நோயுற்ற ஆயுதப்படையினரின் நிலைமையை மேம்படுத்துவதற்கான ஜெனீவா உடன்படிக்கை, பிரிவுகள். 19.24. 12 ஆகஸ்ட் 1949. 75 UNTS 31. Refworld இல் கிடைக்கக்கூடியதாக உள்ளது (07 யூலை 2026 இல் பார்வையிடப்பட்டது). [இனி ஜெனிவா உடன்படிக்கை எனக் குறிப்பிடப்படும்]. ICRC இன் மரபுவழிச் சர்வதேச மனிதாபிமானச் சட்ட ஆய்வு, மேலே குறிப்பிடப்பட்ட குறிப்பு 3, விதி 25.

5. Ibid

6. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC), போர்க்கைதிகள் நடாத்தப்படும் முறை பற்றிய ஜெனீவா உடன்படிக்கை (மூன்றாவது ஜெனீவா உடன்படிக்கை) 75 ICRC 135, 12 ஆகஸ்ட் 1949, https://www.refworld.org/legal/agreements/icrc/1949/35606 [07 யூலை 2026 இல் பார்வையிடப்பட்டது].

7. வழக்கறிஞர் V. Zdravko Mucic aka "Pavo", Hazim Delic, Esad Landzo aka "Zenga", Zejnil Delalic (Trial Judgement), IT-96-21-T, முன்னாள் யுகோஸ்லாவியாவிற்கான சர்வதேசக் குற்றவியல் நீதிமன்று (ICTY), 16 நவம்பர் 1998, https://www.refworld.org/jurisprudence/caselaw/icty/1998/91857 [07 யூலை 2026 இல் பார்வையிடப்பட்டது].

8. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மூன்றாவது ஜெனீவா உடன்படிக்கைக்கான விளக்கவுரை: போர்க்கைதிகள் நடத்தப்படும் விதம் பற்றிய உடன்படிக்கை(III), 2020.

9. ஐக்கிய நாடுகள் சபை, கொத்துக் குண்டுகள் தொடர்பான உடன்படிக்கை டப்ளின், 30 மே 2008, ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைத் தொகுப்பு.

10. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் உரோம சாசனத்தின், பிரிவு 28, 17 யூலை 1998, 2187 UNTS 3.

ITJP என்பது இலங்கையில் நீதியையும் பொறுப்புடைமையையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் 2013ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் ஒரு சுதந்திரமான சர்வதேச இலாப நோக்கற்ற அமைப்பாகும்.

www.itjpsl.com